# பணமும் வங்கித் தொழிலும்

## பணநிரம்பல்

### பொதுவான போக்குகள்

உள்நாட்டுக் கொடுகடன் விரிவாக்கத்தில் ஏற்பட்ட கணிசமானளவு மிதமாக்கத்தின் விளைவாகப் பணநிரம்பலின் வளர்ச்சி வீதத்தில் ஏற்பட்ட குறிப்பிடத்தக்க வீழ்ச்சியே 1989 இல் நாணய அபிவிருத்திகளின் குறிப்பிடத்தக்க பண்பாக இருந்தது. பொதுமக்கள் வசமுள்ள நாணயம், கேள்வி வைப்புக்களைக் கொண்ட குறுகிய பண நிரம்பலின் (M1) ஆண்டு வளர்ச்சி வீதம் 1988 இறுதியின் 29 சதவீதத்திலிருந்து 1989 இறுதியில் 9 சதவீதமாகக் குறைவடைந்தது. இதே போக்கினைத் தொடர்ந்து M1 ஐயும் வர்த்தக வங்கிகளிடமுள்ள பொதுமக்களின் தவணை, சேமிப்பு வைப்புக்களையும் கொண்ட விரிந்த பணநிரம்பலின் (M2) ஆண்டு வளர்ச்சி வீதம் இதே காலப்பகுதியில் 16 சதவீதத்திலிருந்து 12 சதவீதமாக வீழ்ச்சியுற்றது.

1988 இல் நிகழ்ந்த கடுமையான பேரண்டப் பொருளாதார சீர்குலைவினைத் தொடர்ந்து இவ்வாண்டில் நடைமுறைப்படுத்தப்பட்ட சீராக்கல் நிகழ்ச்சித் திட்டத்தின் பின்னணியில் நோக்குகையில் இவ்வபிவிருத்திகள் பாராட்டத்தக்கனவாகும். 1988 ஆம் ஆண்டு நாணய விரிவாக்க வீதத்தில் கடுமையான வளர்ச்சியைக் கொண்டதாக முடிவடைந்தது. 1989 இன் முதலிரு மாதங்களில் காணப்பட்ட சிறிதளவு மிதமான நிலைக்குப் பின்னர் இப்போக்கு மாச்சிலிருந்து மீண்டும் மீளக் காணப்பட்டது. வங்கித் தொழில்முறையின் வெளிநாட்டுச் சொத்துக்கள் சிறு தளம்பல்களுடன் வீழ்ச்சியுறும் போக்கினைக் கொண்டிருந்ததால் இந்நாணய விரிவாக்கத்திற்கு அரசு, தனியார்துறை இரண்டிலும் உள்நாட்டுக் கொடுகடனில் காணப்பட்ட அதிகளவு விரிவாக்கமே முற்றிலும் காரணமாகும். இதனைத் தொடர்ந்து இந்நிலைமையுடன் இணைந்து செல்லும் நோக்கில் 1989 மேயின் பின்னர் மத்திய வங்கி சுருக்க நாணயக் கொள்கை வழிமுறையினை மேலும் சில கொள்கை வழிமுறைகளுடன் பலப்படுத்த வேண்டியேற்பட்டது. இக்கட்டுப்பாடான நாணயக் கொள்கை திறைசேரியின் முன்னேற்றமான காசு முகாமைத்துவத்தின் மூலமும் செலவினங்களைச் சிக்கனப்படுத்துவதன் மூலமும் ஆதரவளிக்கப்பட்டது. இக்கொள்கை வழிமுறைகள் மத்திய வங்கி வசமுள்ள திறைசேரி உண்டியல்களை வங்கியல்லாத் துறைக்கு மாற்றுவதை இலக்காகக் கொண்ட தீவிரமான திறந்த சந்தைத் தொழிற்பாட்டுக் கொள்கையினால் விரிவுபடுத்தப்பட்டன. கொள்கை மாற்றங்கள் மிகவும் சாதகமான விளைவுகளை கொண்டிருந்ததோடு நாணய விரிவாக்க வீதமும் ஆண்டு முடிவில் கணிசமானளவு வீழ்ச்சியடைந்தது. இதனைத் தொடர்ந்து 1989 இல் நாணய மற்றும் கொடுகடன் கூட்டுக்களின் வளர்ச்சி வீதங்கள் உறுதிப்படுத்தும் நிகழ்ச்சித் திட்டத்தின் கீழுள்ள ஆண்டிற்காகத் திட்டமிடப்பட்ட இலக்குகளுடன் பெருமளவுக்கு இசைவாக விளங்கின.

**பணநிரம்பலும் ஏதுக்காரணிகளும்**

1988 இன் ரூ. 72,960 இலட்ச அதிகரிப்புடன் ஒப்பிடுகையில் 1989 இல் குறுகிய பணநிரம்பல் (M1) ரூ. 29,590 இலட்சத்தால் மட்டும் உயர்வடைந்தது. 1989 இல் M1 இல் ஏற்பட்ட வளர்ச்சி ரூ. 17,960 இலட்சத்தால் அல்லது 13 சதவீதத்தால் உயர்வடைந்த கேள்வி வைப்புக் கூறில் முக்கியமாகப் பிரதி பலிக்கப்பட்டது. ஒப்பிடுகையில் பொதுமக்களின் வசமிருந்த நாணயம் ரூ. 11,630 இலட்சத்தால் அல்லது 6 சதவீதத்தால் மட்டுமே உயர்வடைந்து M1 இலுள்ள அதன் பங்கினை 1988 திசெம்பரின் 57.1 சதவீதத்திலிருந்து 1989 திசெம்பரில் 55.6 சதவீதமாகக் குறைத்தது. இதேவேளையில் 1988 இல் ரூ. 23,150 இலட்சம் அல்லது 7 சதவீதமான குறைவான வளர்ச்சியைப் பதிவுசெய்த போலி நாணயம் 1989 இல் ரூ. 55,280 இலட்சம் அல்லது 16 சதவீதமான கணிசமான அளவால் அதிகரித்தது. இது ரூ. 62,490 இலட்சத்தால் அல்லது 21 சதவீதத்தால் உயர்வடைந்த ஏனைய தனியார்துறைக் கூறுகளின் தவணை, சேமிப்பு வைப்புக் களில் முற்றிலும் பிரதிபலித்தது. இதேபோல், கூட்டுறவு நிறுவனங்களின் தவணை சேமிப்பு வைப்புக்களும் 1988 இல் பதிவு செய்யப்பட்ட ரூ. 270 இலட்ச வீழ்ச்சிக்கு மாறாக ரூ. 1,520 இலட்சத்தால் உயர்வடைந்தன. இதேவேளையில் அரச கூட்டுத்தாபனங்களின் வைப்புக்கள் ரூ. 8,730 இலட்சத்தால் அல்லது 17 சதவீதத்தால் உயர்வடைந்தன. தவணை சேமிப்பு வைப்புக்களின் அதிகரிப் பினைத் தொடர்ந்து விரிந்த பணநிரம்பல் (M2) 1988 இன் ரூ. 96,110 இலட்சம் அல்லது 16 சதவீத அதிகரிப்புடன் ஒப்பிடுகையில் 1989 இல் ரூ. 84,880 இலட்சம் அல்லது 12 சதவீதத்தால் உயர்வடைந்தது. பணக் கூட்டுக்களில், நாணயக் கூறின் சார்பு நிலையில் ஏற்பட்ட வீழ்ச்சியும் கேள்வி வைப்புக்களிலும் போலி நாணயத்திலும் ஏற்பட்ட அதிகரிப்பும் ஒன்று சேர்ந்து நாட்டில் குறிப்பாக 1989 இன் இறுதிக் காலாண்டில் காணப்பட்ட முன்னேற்றமான பாதுகாப்பு நிலைமைகளைத் தொடர்ந்து திரவச் சொத்துக்களை வைத்திருப்பதற்கான பொதுமக்களின் விருப்பம் வீழ்ச்சியடைந்தமையைப் பிரதிபலித்தன.

உள்நாட்டுக் கொடுகடனின் வளர்ச்சி வீதத்தில் ஏற்பட்ட குறிப்பிடத் தக்களவு வீழ்ச்சியே 1989 இல் நாணயக் கூட்டுக்களில் ஏற்பட்ட மெதுவான வளர்ச்சிக்கான முக்கிய ஏதுக் காரணியாகும். இவ்வாண்டில் உள்நாட்டுக் கொடு கடன் ரூ. 54,540 இலட்சத்தால் அல்லது 6 சதவீதத்தால் விரிவடைந்தது. முன்னைய ஆண்டின் ஒப்பிடத்தக்க வளர்ச்சி ரூ. 213,020 இலட்சம் அல்லது 28 சதவீதமாகும். அரசதுறை, தனியார்துறை ஆகிய இரண்டும் இவ்வாண்டில் குறிப்பிடத்தக்களவு குறைந்த மட்டங்களிலேயே வங்கிக் கொடுகடனைப் பயன் படுத்தின. முன்னைய ஆண்டில் வங்கித்தொழில் துறையிலிருந்து அரசிற்கான தேறிய கொடுகடன் ரூ. 90,170 இலட்சத்தால் அல்லது 33 சதவீதத்தால் அதிகரித்துக் காணப்பட்டமைக்கு மாறாக 1989 இல் இத்தகைய கொடுகடன் ரூ. 540 இலட்சத்தால் மட்டுமே அதிகரித்தது. இதேவேளை 1989 இல் தனியார் துறைக்கான மொத்தக் கொடுகடனும் முன்னைய ஆண்டின் ரூ. 122,850 இலட்சம் அல்லது 25 சதவீத அதிகரிப்புடன் ஒப்பிடுகையில் ரூ. 54,000 இலட்சத் தால் அல்லது 9 சதவீதத்தால் மட்டுமே அதிகரித்தது.

வங்கிக் கொடுகடனுக்கான அரசின் நாடல் இவ்வாண்டில் குறிப்பிடத் தக்களவுக்கு வீழ்ச்சியடைந்தது. அரசின் கடன்பாட்டுத் தேவைகள் உயர்வாக இருந்தபோதிலும் வங்கித் தொழில் முறையிடமிருந்து திறைசேரி உண்டியல்களில் குறிப்பிடத்தக்க பங்கை வங்கியல்லாத்துறைக்கு மாற்றும் மத்திய வங்கியின்

## பண நிரம்பல்

மாதாந்தம்




இலங்கை மத்திய வங்கி.

## அட்டவணை 1.58

## நாணயக்கூட்டுக்கள் 1987—1989

தொகை பத்து இலட்சம் ரூபாய்களில்

| கால முடிவில் | குறுகிய பண நிரம்பல் ($M_1$) | | | | | | விரிந்த பண நிரம்பல் ($M_2$) | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | 1987 | 1988 | 1989 | 1986 ஐ விட 1987 இல் சதவீத மாற்றம் | 1987 ஐ விட 1988 இல் சதவீத மாற்றம் | 1988 ஐ விட 1989 இல் சதவீத மாற்றம் | 1987 | 1988 | 1989 | 1986 ஐ விட 1987 இல் சதவீத மாற்றம் | 1987 ஐ விட 1988 இல் சதவீத மாற்றம் | 1988 ஐ விட 1989 இல் சதவீத மாற்றம் |
| சனவரி ... | 21,845 | 25,336 | 31,237 | +18.4 | +16.0 | +23.3 | 51,887 | 60,060 | 67,980 | + 7.0 | +15.8 | +13.2 |
| பெப்புருவரி ... | 21,738 | 25,672 | 31,754 | +14.0 | +18.1 | +23.7 | 52,799 | 60,846 | 68,143 | + 8.7 | +15.2 | +12.0 |
| மாச்சு ... | 22,556 | 26,640 | 32,615 | +10.3 | +18.1 | +22.4 | 53,855 | 61,081 | 69,841 | + 9.0 | +13.4 | +14.3 |
| எப்பிறல் ... | 22,121 | 27,467 | 32,718 | + 9.0 | +24.2 | +19.1 | 53,278 | 62,465 | 70,503 | + 8.0 | +17.2 | +12.9 |
| மே ... | 22,305 | 28,178 | 31,862 | +11.3 | +26.3 | +13.1 | 53,972 | 63,687 | 69,750 | + 9.9 | +18.0 | + 9.5 |
| யூன் ... | 22,075 | 27,792 | 32,037 | +10.7 | +25.9 | +15.3 | 53,942 | 63,118 | 69,717 | +10.2 | +17.0 | +10.5 |
| யூலை ... | 22,574 | 28,053 | 33,447 | +15.1 | +24.3 | +19.2 | 54,624 | 63,645 | 70,867 | +11.7 | +16.5 | +11.3 |
| ஓகத்து ... | 23,160 | 28,234 | 34,016 | +17.4 | +21.9 | +20.5 | 55,236 | 64,116 | 71,345 | +13.3 | +16.1 | +11.3 |
| செத்தெம்பர் ... | 22,973 | 28,453 | 34,527 | +12.6 | +23.8 | +21.3 | 55,927 | 63,932 | 72,964 | +13.1 | +14.3 | +14.1 |
| ஒற்றோபர் ... | 23,143 | 28,684 | 34,533 | +14.5 | +23.9 | +20.4 | 56,560 | 64,371 | 73,375 | +13.4 | +13.8 | +14.0 |
| நவெம்பர் ... | 23,551 | 30,379 | 34,103 | +16.1 | +29.0 | +12.3 | 56,916 | 66,088 | 73,942 | +13.7 | +16.1 | +11.9 |
| திசெம்பர் ... | 25,083 | 32,379 | 35,338 | +18.4 | +29.1 | + 9.1 | 58,335 | 67,946 | 76,434 | +14.7 | +16.4 | +12.5 |
| மாதாந்த சராசரி ... | 22,760 | 28,106 | 33,182 | +14.0 | +23.4 | +18.1 | 54,778 | 63,446 | 71,238 | +11.1 | +15.8 | +12.3 |

மூலம்: இலங்கை மத்திய வங்கி.

# உள்நாட்டுக் கொடுகடன்

மாதாந்தம்




இலங்கை மத்திய வங்கி.

அட்டவணை 1.59

## நாணயக்கூட்டுக்களும் ஏதுக்காரணிகளும் 1987/1989

தொகை பத்து இலட்சம் ரூபாய்களில்

| விடயம் | 1987 டிசெம்பர் | 1988 டிசெம்பர் | 1989 டிசெம்பர் | மாற்றம் 1987/1988 | | மாற்றம் 1988/1989 | |
|---|---|---|---|---|---|---|---|
| | | | | தொகை | சதவீதம் | தொகை | சதவீதம் |
| **நாணயக்கூட்டுக்கள்** | | | | | | | |
| 1. மக்களால் வைத்திருக்கப்பட்ட நாணயம் ... | 13,495 | 18,487 | 19,650 | + 4,992 | + 37.0 | + 1,163 | + 6.3 |
| 2. மக்களால் வைத்திருக்கப்பட்ட கேள்வி வைப்புக்கள் ... | 11,588 | 13,892 | 15,688 | + 2,304 | + 19.9 | + 1,796 | + 12.9 |
| குறுகிய பண நிரம்பல் (M1) ... | 25,083 | 32,379 | 35,338 | + 7,296 | + 29.1 | + 2,959 | + 9.1 |
| 3. வர்த்தக வங்கிகளில் தனியார்துறை வைத்திருக்கும் தவணை சேமிப்பு வைப்புக்கள் ... | 33,252 | 35,567 | 41,095 | + 2,315 | + 7.0 | + 5,528 | + 15.5 |
| 3.1 கூட்டுறவு நிறுவனங்கள் ... | 771 | 743 | 895 | — 27 | — 3.6 | + 152 | + 20.5 |
| 3.2 அரச கூட்டுத்தாபனங்கள் ... | 4.861 | 5,103 | 4,230 | + 242 | + 5.0 | — 873 | — 17.1 |
| 3.3 ஏனைய தனியார்துறை வாடிக்கையாளர்கள் (அ) ... | 27,620 | 29,721 | 35.970 | + 2,100 | + 7.6 | + 6,249 | + 21.0 |
| **விரிந்த பணநிரம்பல் (M2)** ... | 58,335 | 67,946 | 76,433 | + 9,611 | + 16.4 | + 8,487 | + 12.4 |
| **ஏதுக்காரணிகள்** | | | | | | | |
| 1. உள்நாட்டுக் கொடுகடன் ... | 75,566 | 96,867 | 102,321 | + 21,302 | + 28.2 | + 5,454 | + 5.6 |
| 1.1 அரசிற்கு வழங்கப்பட்ட தேறிய கொடுகடன் ... | 27,048 | 36,065 | 36,119 | + 9,017 | + 33.3 | + 54 | + 0.1 |
| 1.1.1 அரசிற்கு வழங்கப்பட்ட மொத்தக் கொடுகடன் ... | 31,519 | 44,311 | 44,740 | + 12,792 | + 40.6 | + 429 | + 1.0 |
| மத்திய வங்கியால் ... | 26,157 | 36,439 | 36,741 | + 10,282 | + 39.3 | + 302 | + 0.8 |
| வர்த்தக வங்கிகளால் ... | 5,362 | 7,872 | 7,999 | + 2,510 | + 46.8 | + 127 | + 1.6 |
| 1.1.2 அரசின் வைப்புக்களும் காசு நிலுவைகளும் ... | — 4,471 | — 8,246 | — 8,621 | — 3,775 | — 84.4 | — 375 | — 4.6 |
| 1.2 தனியார்துறைக்கு வழங்கப்பட்ட மொத்தக் கொடுகடன் ... | 48,518 | 60,802 | 66,202 | + 12,285 | + 25.3 | + 5,400 | + 8.9 |
| 1.2.1 கூட்டுறவு நிறுவனங்கள் ... | 1,123 | 1,318 | 1,178 | + 195 | + 17.4 | — 140 | — 10.6 |
| 1.2.2 அரச கூட்டுத்தாபனங்கள் ... | 7,366 | 10,787 | 13,862 | + 3,421 | + 46.4 | + 3,075 | + 28.5 |
| 1.2.3 ஏனைய தனியார்துறை வாடிக்கையாளர்கள் ... | 40,029 | 48,697 | 51,162 | + 8,669 | + 21.7 | + 2,465 | + 5.1 |
| 2. வெளிநாட்டு வங்கித் தொழில் சொத்துக்கள் (தேறிய) ... | 9,291 | 7,058 | 4,732 | — 2,233 | — 24.0 | — 2,326 | — 32.9 |
| 2.1 மத்திய வங்கி (தேறிய) ... | 6,227 | 4,326 | 1,678 | — 1,901 | — 30.5 | — 2,647 | — 61.2 |
| 2.2 வர்த்தக வங்கிகள் (தேறிய) ... | 3,064 | 2,732 | 3,054 | — 332 | — 10.8 | + 321 | + 11.7 |
| 3. ஏனைய விடயங்கள் (தேறிய) ... | — 26,522 | — 35,979 | — 30,620 | — 9,457 | — 35.7 | + 5,359 | + 14.9 |
| 3.1 மத்திய வங்கியின் ஏனைய பொறுப்புக்கள் (தேறிய) ... | — 15,054 | — 15,541 | — 13,176 | — 487 | — | + 2,365 | — |
| 3.2 வர்த்தக வங்கிகளின் ஏனைய பொறுப்புக்கள் (தேறிய) ... | — 11,516 | — 20,038 | — 19,043 | — 8,522 | — | + 995 | — |
| 3.3 இடைப்போக்கிலுள்ள விடயங்கட்கான சீராக்கங்கள் ... | 48 | — 400 | + 1,599 | — 448 | — | + 1,999 | — |
| **விரிந்த பண நிரம்பல் (M2)** ... | 58,335 | 67,946 | 76,433 | + 9,611 | + 16.4 | + 8,487 | + 12.4 |

மூலம்: இலங்கை மத்திய வங்கி.

குறிப்பு: அடையாளங்கள் $M^2$ இன் மீது ஏற்பட்ட தாக்கத்தைக் குறிக்கின்றன.
(அ) வதிவற்றோர் வெளிநாட்டு நாணய வைப்புக்கள் தவிர.

## வெளிநாட்டு வங்கித்தொழில் சொத்துக்கள் (தேறிய)

மாதாந்தம்




இலங்கை மத்திய வங்கி

தீவிரமான திறந்த சந்தைத் தொழிற்பாடுகள் வெற்றியடைந்தன. இதன்படி வங்கித்தொழில் முறையிலிருந்து அரசிற்கான மொத்தக் கொடுகடன் 1988 இன் ரூ. 127,920 இலட்ச அதிகரிப்புடன் ஒப்பிடுகையில் 1989 இல் ரூ. 4,290 இலட்சத்தால் மட்டுமே உயர்வடைந்தது. இது ரூ. 3,750 இலட்சம் கொண்ட வைப்புத் திரட்டலுடன் சேர்ந்து வங்கித்தொழில் முறையிடமிருந்து அரசின் தேறிய நாடலை ரூ. 540 இலட்சம் கொண்ட தொகைக்குக் குறைந்தது. இது உறுதிப்பாட்டுக் குறிக்கோள்களை அடைதல், பொருளாதாரத்தில் பணவீக்கத் தாக்கங்களைக் கட்டுப்படுத்தல் என்பனவற்றின் நோக்கில் பாராட்டுக்குரிய அபிவிருத்தியாகும்.

இதையொத்த அபிவிருத்தியாகத் தனியார்துறைக்கான கொடுகடனின் வளர்ச்சியும் இவ்வாண்டில் குறிப்பிடத்தக்க வீழ்ச்சியைப் பதிவு செய்தது. வங்கித் தொழில் முறையிலிருந்து ஏனைய தனியார்துறைக் கூறுகளினால் பயன்படுத்தப் பட்ட கொடுகடன் 1988 இன் ரூ. 86,690 இலட்சம் அல்லது 22 சதவீத அதிகரிப்புடன் ஒப்பிடுகையில் 1989 இல் ரூ. 24,650 இலட்சத்தால் அல்லது 5 சதவீதத்தால் மட்டுமே அதிகரித்தது. இது இவ்வாண்டில் முன்னுரிமையல்லா நோக்கங்களுக்கான கொடுகடனின்மீது மத்திய வங்கியால் தொழிற்படுத்தப்பட்ட கொடுகடன் வரையறைகளினதும் நாட்டின் குழப்ப நிலைமைகளின் பின்னணியில் கொடுகடனுக்கான கேள்வி குறைவாக இருந்தமையினதும் கூட்டு விளைவாகும்.

இதேவேளை, அரச கூட்டுத்தாபனங்களுக்கான வர்த்தக வங்கி கொடுகடன் 1989 இல் ரூ. 30,750 இலட்சத்தால் அல்லது 29 சதவீதத்தால் விரிவடைந்தது. கிளர்ச்சி நடவடிக்கைகளினால் பணப்பாய்ச்சல் பாதிக்கப்பட்ட சில கூட்டுத் தாபனங்களின் தொழிற்படு மூலதனத் தேவைகளை ஈடுசெய்வதற்காகக் கொடு கடனில் ஏற்பட்ட உயர்வான கேள்வியும், உணவுஇறக்குமதிப் பொறுப்புக்கள் உணவு ஆணையாளரிடமிருந்து கூட்டுறவு மொத்த விற்பனை நிலையத்திற்கு மாற் றப்பட்டமையைத் தொடர்ந்து அத்தியாவசிய உணவுப் பொருட்களின் இறக்குமதி யாளராகக் கூட்டுறவு மொத்த விற்பனை நிலையத்தின் பங்கு உயர்வடைந்தமை யும் இவ்வதிகரிப்புக்குப் பெரும்பாலும் பொறுப்பாக இருந்தன. 1989 இல் கூட்டுறவு மொத்த விற்பனை நிலையத்திற்கான முற்பணங்கள் ரூ. 12,690 இலட்சத்தால் உயர்வடைந்தவேளை இரண்டு அரச பெருந்தோட்டக் கூட்டுத் தாபனங்களுக்கானவை ரூ. 11,890 இலட்சத்தால் அதிகரித்தன. இதேவேளை கூட்டுறவு நிறுவனங்களுக்கான கொடுகடன் முன்னைய ஆண்டின் ரூ. 1,950 இலட்ச அதிகரிப்புக்கு மாறாக 1989 இல் ரூ. 1,400 இலட்சத்தால் வீழ்ச்சி யடைந்தன.

முன்னைய ஆண்டினைப் போன்று வெளிநாட்டுத்துறை 1989 இல் M2 இன்மீது ரூ. 23,260 இலட்சம் கொண்ட சுருக்கத் தாக்கத்தினை உருவாக்கியது. இது மத்திய வங்கியின் தேறிய வெளிநாட்டுச் சொத்துக்களின் ரூ. 26,470 இலட்சம் கொண்ட வீழ்ச்சியினதும் வர்த்தக வங்கிகளினது ரூ. 3,210 இலட்சம் கொண்ட அதிகரிப்பினதும் கூட்டு விளைவாகும். எனினும் 1989 இல் தேறிய வெளிநாட்டுச் சொத்துக்களின் நிலை குறிப்பிடத்தக்க தம்ளபல்களைக் காட்டி யது. வங்கித் தொழில் முறையின் தேறிய வெளிநாட்டுச் சொத்துக்கள் 1988 திசெம்பரின் ரூ. 70,580 இலட்சத்திலிருந்து 1989 ஒகத்தில் ரூ. 9,760 இலட்சத் திற்குக் கடுமையாக வீழ்ச்சியுற்று அதன் பின்னர் 1989 இறுதியில் ரூ. 47,320 இலட்சத்திற்கு மீண்டும் உயர்வடைந்தன.

## வர்த்தக வங்கித் தொழில்

### பொதுவான போக்குகள்

தீவிரமடைந்த உள்நாட்டுக் குழப்பங்கள் காரணமாக 1989 இன் இரண்டாம் மூன்றும் காலாண்டுகளில் நிலவிய குழப்பம் நிறைந்த வியாபாரச் சூழலினதும் மேலதிகக் கொடுகடன் உருவாக்கத்தினைக் கட்டுப்படுத்துவதற்கான மத்திய வங்கியின் கட்டுப்பாடான நாணயக் கொள்கை வழிமுறையினதும் மத்தியிலும் பெரும்பாலான வர்த்தக வங்கிகள் திரவத் தன்மை, இலாபம் ஆகியன தொடர்பாக இவ்வாண்டினைத் திருப்திகரமான முறையில் முடித்துக் கொண்டன.

அட்டவணை 1.60

**வர்த்தக வங்கிகளின் சொத்துக்கள், பொறுப்புக்கள் ஆகியவற்றின் தேர்ந்தெடுக்கப்பட்ட விடயங்கள் 1988—1989**

பத்து இலட்சம் ரூபாய்களில்

| விடயங்கள் | மாதாந்த எண் தொகைகளின் சராசரி | | காலப்பகுதி முடிவில் | |
|---|---|---|---|---|
| | 1988 | 1989 | 1988 | 1989 |
| கையிலுள்ள பணமும், மத்திய வங்கியிலுள்ள வைப்புக்களும் (நிதிய ஒதுக்குத் தேவைகளும் உட்பட) | 6,234 | 6,826 | 6,659 | 7,611 |
| வெளிநாட்டு நிலுவைகள் ... | 6,402 | 7,994 | 7,697 | 7,607 |
| திறைசேரி உண்டியல்கள் ... | 4,084 | 5,289 | 4,857 | 6,113 |
| கழிவு செய்யப்பட்ட உண்டியல்கள் ... | 5,648 | 6,112 | 5,267 | 6,703 |
| மொத்தத் திரவச் சொத்துக்கள் ... | 22,289 | 26,205 | 24,476 | 28,010 |
| மொத்த முதலீடுகள் (அ) ... | 2,080 | 1,823 | 1,865 | 1,961 |
| மொத்தக் கடன்களும் மேலதிகப் பற்றுக்களும் ... | 48,454 | 56,083 | 52,442 | 60,128 |
| கேள்வி வைப்புக்கள் (ஆ) ... | 14,662 | 18,343 | 18,182 | 21,439 |
| தவணை வைப்புக்களும் சேமிப்பு வைப்புக்களும் (இ) ... | 42,385 | 46,115 | 43,357 | 50,256 |
| மொத்த வைப்புக்கள் ... | 57,047 | 64,458 | 61,539 | 71,695 |
| | % | % | % | % |
| கேள்வி வைப்புக்களுக்குப் பணத்தின் விகிதம் ... | 42.5 | 37.2 | 36.6 | 35.5 |
| மொத்த வைப்புக்களுக்குப் பணத்தின் விகிதம் ... | 10.9 | 10.6 | 10.8 | 10.6 |
| மொத்த வைப்புக்களுக்கு வெளிநாட்டு நிலுவைகளின் விகிதம் ... | 11.2 | 12.4 | 12.5 | 10.6 |
| மொத்த வைப்புக்களுக்கு திறைசேரி உண்டியல்களின் விகிதம் ... | 7.2 | 8.2 | 7.9 | 8.5 |
| மொத்த வைப்புக்களுக்கு கழிவு செய்யப்பட்ட வர்த்தக உண்டியல்களின் விகிதம் ... | 9.9 | 9.5 | 8.5 | 9.3 |
| கேள்வி வைப்புக்கான திரவச் சொத்துக்களின் விகிதம் ... | 152.0 | 142.9 | 134.6 | 130.6 |
| மொத்த வைப்புக்களுக்கு திரவச் சொத்துக்களின் விகிதம் ... | 39.0 | 40.7 | 39.7 | 39.1 |
| மொத்த வைப்புக்களுக்கு முதலீட்டின் விகிதம் ... | 3.6 | 2.8 | 3.0 | 2.7 |
| மொத்த வைப்புக்களுக்குக் கடன்களினதும் மேலதிகப் பற்றுக்களினதும் விகிதம் ... | 84.9 | 87.0 | 85.2 | 83.9 |

மூலம்: இலங்கை மத்திய வங்கி

(அ) அரச, அரச உத்தரவாதப் பிணைகளும், தனியார் பிணைகளும்.

(ஆ) உள்நாட்டு வங்கிகளிடையே உள்ள வைப்புக்கள் நீங்கலாக.

(இ) சிறப்பு சேமிப்பு திட்டங்களின் கீழ அரச வங்கிகளினால் 1988ஆம் ஆண்டிலும் 1989ஆம் ஆண்டிலும் நீண்ட தவணை வைப்புக்களாக முறையே நிட்டப்பட்ட பணத்தின் தொகையான ரூ. 15,390 இலட்சத்தையும் ரூ. 17,080 இலட்சத்தையும் உள்ளடக்குகின்றது.

குறிப்பு: இங்கு கொடுக்கப்பட்ட எண் தொகைகளுக்கும் இவ்வறிக்கையில் வேறு இடங்களில் கொடுக்கப்பட்ட அதே எண் தொகைகளுக்கும் இடையேயான முரண்பாடுகள் வரைவிலக்கண வேறுபாட்டினால் ஏற்பட்டவையாகும்.

அட்டவணை 1.61

## நோக்கங்களின்படியும் முதிர்ச்சிக் காலங்களின்படியும் வர்த்தக வங்கிகளின் முற்பணங்கள்* 1988 — 1989

பத்து இலட்சம் ரூபாய்களில்

| வகை | குறுங்காலம் (1 ஆண்டிற்கு குறைவான) | | நடுத்தரக்காலம் (1 தொடக்கம் 5 ஆண்டுகள் வரை) | | நீண்டகாலம் (5 ஆண்டுகளுக்கு மேல்) | | மொத்தம் | |
|---|---|---|---|---|---|---|---|---|
| | (1) | (2) (7) இன் % (1) | (3) | (4) (7) இன் % (3) | (5) | (6) (7) இன் % (5) | (7) | (8) மொத்தத்தின் சதவீதமாக (7) |
| **அ. வர்த்தகம்** | | | | | | | | |
| திசெம்பர் 1988 | 23,148.2 | 81.2 | 4,187.3 | 14.7 | 1,176.3 | 4.1 | 28,511.8 | 49.5 |
| மாச்சு 1989 | 24,207.0 | 81.8 | 3,783.5 | 12.8 | 1,587.0 | 5.4 | 29,577.4 | 50.0 |
| யூன் 1989 | 26,648.3 | 83.2 | 3,788.3 | 11.8 | 1,596.7 | 5.0 | 32,033.3 | 51.0 |
| செத்தெம்பர் 1989 | 29,480.2 | 85.8 | 3,249.7 | 9.5 | 1,639.1 | 4.8 | 34,369.1 | 53.7 |
| **ஆ. நிதியிடல்** | | | | | | | | |
| திசெம்பர் 1988 | 727.8 | 60.2 | 448.5 | 37.1 | 32.2 | 2.7 | 1,208.5 | 2.1 |
| மாச்சு 1989 | 618.9 | 50.8 | 566.4 | 46.5 | 33.1 | 2.7 | 1,218.4 | 2.1 |
| யூன் 1989 | 605.8 | 51.8 | 483.2 | 41.4 | 79.4 | 6.8 | 1,168.5 | 1.9 |
| செத்தெம்பர் 1989 | 575.5 | 48.7 | 353.6 | 29.9 | 252.4 | 21.4 | 1,181.5 | 1.8 |
| **இ. வேளாண்மை** | | | | | | | | |
| திசெம்பர் 1988 | 2,766.0 | 47.4 | 903.6 | 15.5 | 2,161.3 | 37.1 | 5,830.9 | 10.1 |
| மாச்சு 1989 | 2,978.8 | 50.1 | 889.8 | 14.9 | 2,019.5 | 35.0 | 5,948.1 | 10.1 |
| யூன் 1989 | 3,057.3 | 50.2 | 875.7 | 14.4 | 2,161.4 | 35.4 | 6,094.3 | 9.7 |
| செத்தெம்பர் 1989 | 2,832.5 | 47.5 | 892.1 | 15.0 | 2,237.9 | 37.5 | 5,962.5 | 9.3 |
| **ஈ. கைத்தொழில்**** | | | | | | | | |
| திசெம்பர் 1988 | 9,213.1 | 69.0 | 2,697.6 | 20.2 | 1,442.7 | 10.8 | 13,352.8 | 23.2 |
| மாச்சு 1989 | 9,077.4 | 69.5 | 2,675.8 | 20.5 | 1,307.0 | 10.0 | 13,060.5 | 22.1 |
| யூன் 1989 | 9,193.2 | 65.6 | 3,332.3 | 23.8 | 1,478.2 | 10.6 | 14,003.7 | 22.3 |
| செத்தெம்பர் 1989 | 9,202.4 | 73.4 | 1,797.7 | 14.3 | 1,535.6 | 12.2 | 12,535.7 | 19.6 |
| **உ. சுற்றுலா** | | | | | | | | |
| திசெம்பர் 1988 | 460.6 | 51.7 | 134.7 | 15.1 | 295.1 | 33.2 | 890.4 | 1.6 |
| மாச்சு 1989 | 458.3 | 49.1 | 102.3 | 11.0 | 372.7 | 39.9 | 933.2 | 1.6 |
| யூன் 1989 | 468.0 | 52.7 | 88.2 | 9.9 | 348.1 | 39.2 | 887.5 | 1.4 |
| செத்தெம்பர் 1989 | 448.2 | 52.6 | 74.9 | 8.8 | 328.8 | 38.6 | 851.9 | 1.3 |
| **ஊ. வீடமைப்பு** | | | | | | | | |
| திசெம்பர் 1988 | 845.6 | 17.7 | 1,220.7 | 25.5 | 2,716.3 | 56.8 | 4,782.6 | 8.3 |
| மாச்சு 1989 | 865.8 | 17.2 | 1,281.3 | 25.5 | 2,877.6 | 57.2 | 5,024.7 | 8.5 |
| யூன் 1989 | 904.4 | 17.3 | 1,165.8 | 22.3 | 3,140.9 | 60.1 | 5,225.5 | 8.3 |
| செத்தெம்பர் 1989 | 929.3 | 17.3 | 1,185.1 | 22.1 | 3,250.9 | 60.6 | 5,365.3 | 8.4 |
| **எ. நுகர்வு** | | | | | | | | |
| திசெம்பர் 1988 | 761.4 | 65.3 | 302.6 | 25.9 | 102.1 | 8.8 | 1,166.1 | 2.0 |
| மாச்சு 1989 | 914.6 | 68.3 | 325.1 | 24.3 | 99.3 | 7.4 | 1,339.1 | 2.3 |
| யூன் 1989 | 822.6 | 64.7 | 338.5 | 26.6 | 108.7 | 8.5 | 1,272.0 | 2.0 |
| செத்தெம்பர் 1989 | 787.9 | 61.1 | 371.5 | 28.8 | 129.5 | 10.0 | 1,288.8 | 2.0 |
| **ஏ. ஏனைய கடன்கள்** | | | | | | | | |
| திசெம்பர் 1988 | 827.1 | 45.3 | 543.8 | 29.8 | 453.3 | 24.9 | 1,824.2 | 3.2 |
| மாச்சு 1989 | 780.5 | 38.7 | 775.0 | 38.4 | 463.5 | 22.9 | 2,018.9 | 3.4 |
| யூன் 1989 | 890.7 | 42.5 | 725.2 | 34.6 | 480.8 | 22.9 | 2,096.7 | 3.3 |
| செத்தெம்பர் 1989 | 986.2 | 41.2 | 748.7 | 31.3 | 659.8 | 27.5 | 2,394.8 | 3.7 |
| **ஐ. மொத்தம்** | | | | | | | | |
| திசெம்பர் 1988 | 38,749.8 | 67.3 | 10,438.8 | 18.1 | 8,378.7 | 14.6 | 57,567.3 | 100.0 |
| மாச்சு 1989 | 39,901.3 | 67.5 | 10,350.2 | 17.6 | 8,819.7 | 14.9 | 59,120.3 | 100.0 |
| யூன் 1989 | 42,590.3 | 67.8 | 10,797.1 | 17.2 | 9,394.0 | 15.0 | 62,781.6 | 100.0 |
| செத்தெம்பர் 1989 | 45,242.3 | 70.7 | 8,673.3 | 13.6 | 10,034.0 | 15.7 | 63,949.6 | 100.0 |

மூலம்: இலங்கை மத்திய வங்கி.

* முற்பணங்கள் சேகரிப்பு நிலையிலுள்ள பண விடயங்களை நீக்கி ஏனைய கடன்கள், மேலதிகப் பற்றுக்கள் கழிவு செய்யப்பட்ட உண்டியல்கள் ஆகியவற்றை உள்ளடக்கும்.

** பொறியியல், கட்டிட வர்த்தகம், சுரங்கம் அகழ்தல், கடற்றொழில் ஆகிய துறைகளுக்கு வழங்கப்பட்ட முற்பணங்களை உள்ளடக்கும்.

1989 முழுவதிலும் அரச திறைசேரி உண்டியல்களின் மீது தொடர்ந்து கிடைக்கத்தக்கதாயிருந்த உயர்வான வட்டி வீதங்கள் வைப்புக்களைத் திரட்டுவதில் வர்த்தக வங்கிகள் பலமான போட்டியை எதிர்நோக்கியதை விளக்குவதாய் அமைந்தன. வங்கி வீதத்தினை 14 சதவீதமாக உயர்த்தியமை, ஆடம்பர விடயங்கள் தொடர்பான கொடுகடன் பத்திரங்களுக்கு எதிராக 100 சதவீத அளவு பேணப்பட வேண்டுமென விதித்தமை, முன்னுரிமையல்லாத துறைகளுக்கான கொடுகடன் சலுகைகளின் மீதான உச்ச எல்லை என்பன கொடுகடன் விரிவாக்கத்தினைக் கட்டுப்படுத்துவதற்கும் வெளிநாட்டுச் செலாவணி ஒதுக்குகளைப் பாதுகாப்பதற்கும் மத்திய வங்கியால் அறிமுகப்படுத்தப்பட்ட புதிய வழிமுறைகளில் சிலவாகும். இவ்வழிமுறைகள் 1989 இன் இறுதிக் காலாண்டில் உள்நாட்டு வங்கிகளுக்கிடையிலான கடன்பாடுகளின் குறிப்பிடத்தக்க அதிகரிப்பினால் எடுத்துக்காட்டப்படுவதுபோல வங்கித்தொழில் முறைகளுக்கிடையில், இறுக்கமான திரவத்தன்மை நிலையினை விளைவித்தன. வெளிநாட்டுச் செலாவணி வீதம் தொடர்ந்து பெறுமதி வீழ்ச்சியடைந்து செல்வதிலிருந்து அச்சந்தர்ப்பத்தில் நன்மை பெறுவதற்காக ஏற்றுமதியாளர்களால் ஏற்றுமதிப் பெறுகைகள் காலம்தாழ்த்திப் பெறப்பட்டதனாலும் சில வர்த்தக வங்கிகள் செலாவணி வீதத் தேய்வினால் நன்மையடையும் பொருட்டு அளவுக்கதிகமாக வெளிநாட்டிலுள்ள தொழிற்படு நிலுவைகளைப் பேணும் வழக்கத்தினைக் கொண்டிருந்தமையாலும் குழப்ப நிலைமைகள் காரணமாகவும் இந்நிலை மேலும் பாதிக்கப்பட்டிருக்கலாம்.

ஆண்டின் இறுதி மாதங்களில் வைப்புக்களின் வளர்ச்சி வேகம் மீண்டும் அடையப்பட்டதைத் தொடர்ந்து வர்த்தக வங்கித் திரவத்தன்மை மீதான தாக்கம் ஓரளவுக்குத் தணிந்தது. எனினும் பற்றாக்குறையுள்ள வங்கிகளிலிருந்து குறுகியகால நிதியங்களுக்கான தேவையும் ஏனைய துணைச் சந்தைகளில் நிலவும் தொடர்ச்சியான உயர்ந்த வட்டி வீதங்களும் வங்கிகளுக்கிடையான அழைப்புப் பணச் சந்தையின் வட்டி வீதங்களை உயர்ந்த அளவில் விளங்கச் செய்தன. கணனிமயப் படுத்துதலுக்கு ஊக்கமளிக்கப்பட்டதன் காரணமாகப் புதிய கருவிகளின் அறிமுகம், வங்கித்தொழில் தொழிற்பாடுகளின் கணனிமயமாக்கல், வங்கித்தொழில் நேரங்களை நீடித்தல், மனிதவலு நிகழ்ச்சித் திட்டங்களைத் தீவிரப்படுத்துதல் போன்றவற்றினூடாக வர்த்தக வங்கிகள் வாடிக்கையாளர் பணிகளின் தரத்தினைத் தொடர்ந்து முன்னேற்றின.

**வங்கிச் சொத்துக்களினதும் பொறுப்புக்களினதும் அமைப்பும் தனியார்துறைக்கான முற்பணங்களும்.**

வர்த்தக வங்கிகளின் மொத்தச் சொத்துக்கள்/ பொறுப்புக்கள் எதிரீட்டு விடயங்கள் நீங்கலாக, முன்னைய ஆண்டின் 25 சதவீத அதிகரிப்புடன் (ரூ. 189,900 இலட்சம்) ஒப்பிடுகையில் 1989 இல் 11 சதவீதத்தால் (ரூ. 105,370 இலட்சம்) உயர்வடைந்தன. பொறுப்புக்கள் பக்கத்தில் ''ஏனைய பொறுப்புக்கள்'' 1988 இல் அடையப்பட்ட உயர்ந்த மட்டத்தில் தொடர்ந்து விளங்கியமைக்கு நாட்டின் சில பகுதிகளில் வங்கித்தொழில் பணிகளுக்கு ஏற்பட்ட தடங்கல்களின் விளைவாக பதிவுசெய்தலில் ஏற்பட்ட காலதாமதமே முக்கிய காரணமாகும். சேகரிப்புக்காக அனுப்பப்பட்ட காசோலைகளின் காரணமாக இரு அரச வங்கிகளிலும் தொங்கற் கணக்குகளில் தொடர்ந்து காணப்படும் உயர்ந்த மட்டத்தில் இது பிரதிபலித்தது. இதேவேளை வைப்புக்கள் 16 சதவீதத்தால் உயர்வடைந்தன (ரூ 98,550 இலட்சம்). இது தவணை சேமிப்பு

வைப்புக்களில் 16 சதவீத அதிகரிப்பையும் (ரூ. 67,290 இலட்சம்) கேள்வி வைப்புக்களில் 17 சதவீத அதிகரிப்பையும் (ரூ. 31,260 இலட்சம்) உள்ளடக்கியிருந்தது. வங்கிகளுக்கிடையயான கடன்பாடுகளையும் (மத்திய வங்கியிலிருந்தானவையும் உட்பட) வெளிநாட்டுக் கடன்பாடுகளையும் உள்ளடக்கிய கடன்பாடுகள் 9 சதவீத (ரூ. 6,830 இலட்சம்) வீழ்ச்சியைப் பதிவு செய்தன.

சொத்துக்கள் பக்கத்தில், கடன்களும் மேலதிகப் பற்றுக்களும் 15 சதவீதத்தால் (ரூ. 76,860 இலட்சம்) உயர்வடைந்தன. இதேவேளை கையிலுள்ள காசு, மத்திய வங்கியுடனான வைப்புக்கள், வெளிநாட்டு நிலுவைகள், திறைசேரி உண்டியல்கள், கழிவு செய்யப்பட்ட உண்டியல்கள் என்பவற்றைக் கொண்ட மொத்தத் திரவச் சொத்துக்கள் ரூ. 35,340 இலட்சத்தால் அல்லது 14 சதவீதத்தால் உயர்வடைந்தன. இவ்வதிகரிப்பில் திறைசேரி உண்டியல் வைப்புக்கள் ரூ. 12,560 இலட்சத்திற்கு அல்லது 36 சதவீதத்திற்கு வகை கூறின.

தனியார்துறைக்கான மொத்த வர்த்தக வங்கி முற்பணங்கள் 1988 இன் ரூ. 122,850 இலட்சம் அல்லது 25 சதவீத அதிகரிப்புடன் ஒப்பிடுகையில் 1989 இல் ரூ. 54,000 இலட்சத்தால் அல்லது 9 சதவீதத்தால் உயர்வடைந்தன. இக் கொடுகடனில் ஏற்பட்ட குறைக்கப்பட்ட இவ் வளர்ச்சி வீதம் முன்னுரிமை அல்லாத துறைக்கான வர்த்தக வங்கி முற்பணங்களின் மீது மத்திய வங்கியால் விதிக்கப்பட்ட கொடுகடன் உச்ச எல்லையின் காரணமாக ஏற்பட்டதாகும். முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் மொத்த முற்பணங்களில் குறுகிய கால முற்பணங்களின் பங்கு 1988 இறுதியின் 67 சதவீதத்திலிருந்து 1989 இன் மூன்றும் காலாண்டில் 71 சதவீதமாக அதிகரித்தது. இது நடுத்தரகால (1–5 ஆண்டுகள்) முற்பணங்களின் பங்கு இவ்விரு ஆண்டுகளிலும் 18 சதவீதத்திலிருந்து 14 சதவீதமாக வீழ்ச்சியடைந்தமையின் விளைவாகும்.

ஏற்றுமதிகள், இறக்குமதிகள், மொத்த சில்லறை வர்த்தகம் ஆகியவற்றை உள்ளடக்கிய வர்த்தக நோக்கங்களுக்கான முற்பணங்கள் முற்பணங்களின் மிகப் பெரிய தனியான வகையாகத் தொடர்ந்தும் விளங்கின. 1988 இறுதியில் 49.5 சதவீதத்திற்கு வீழ்ச்சியடைந்த இவ்வகையின் பங்கு 1989 இல் மாற்றமடைந்தது. மொத்த முற்பணங்களில் அதன் பங்கு 53.7 சதவீதமாக உயர்வடைந்தது.

கைத்தொழில் நோக்கங்களுக்கான கொடுகடன் கேள்வி (பொறியியல், கட்டுமான, வர்த்தகம், அகழ்வு, கடற்றொழில் என்பன உட்பட) 1988 இன் ரூ. 30,760 இலட்சம் அல்லது 29.9 சதவீத அதிகரிப்புடன் ஒப்பிடுகையில் 1989 இன் முதல் மூன்று காலாண்டுகளில் ரூ. 8,170 இலட்சத்தால் அல்லது 6.1 சதவீதத்தால் வீழ்ச்சியுற்றது. எனவே மொத்த முற்பணங்களில் கைத்தொழில் முற்பணங்களின் பங்கு 1988 இறுதியின் 23.2 சதவீதத்திலிருந்து 1989 இன் மூன்றாம் காலாண்டில் 19.6 சதவீதத்திற்கு வீழ்ச்சியடைந்தது. வேளாண்மை நோக்கங்களுக்காக வழங்கப்பட்ட முற்பணங்கள் மொத்த முற்பணங்களின் பங்காக நோக்குகையில் 1988 இறுதியின் 10.1 சதவீதத்திலிருந்து 1989 இன் மூன்றாம் காலாண்டில் 9.3 சதவீதத்திற்கு வீழ்ச்சியடைந்தன. எனினும் முழுமையான நியதிகளில் மொத்த வேளாண்மை முற்பணங்கள் ரூ. 1,320 இலட்சத்தால் அல்லது 2.3 சதவீதத்தால் வளர்ச்சியடைந்தன.

அட்டவணை 1.62

## வர்த்தக வங்கிகளின் மூலவளங்களின் மூலங்களும் பயன்பாடுகளும் 1988 — 1989

பத்து இலட்சம் ரூபாய்களில்

| | 1987/1988 இறுதி | | 1988/1989 இறுதி | |
|---|---|---|---|---|
| | மூலங்கள் | பயன் பாடுகள் | மூலங்கள் | பயன் பாடுகள் |
| **1. அரசதுறை** ... | — | **700.4** | **999.5** | — |
| அரச பிணைகளின் உடைமைகள் ... | — | 765.4 | — | 1,332.6 |
| வைப்புக்கள் ... | 1,809.4 | — | 1,127.1 | — |
| இறக்குமதி உண்டியல்கள் ... | 84.1 | — | 170.1 | — |
| குறுந்தவணைக் கொடுகடன் ... | — | 1,819.3 | 1,031.9 | — |
| மேலதிகப் பற்றுக்கள் ... | — | 9.2 | 3.0 | — |
| **2. மத்திய வங்கி** ... | — | **647.2** | — | **668.9** |
| கடன்பாடுகள் ... | 427.1 | — | 139.4 | — |
| ஒதுக்குகள் ... | — | 679.9 | — | 1,357.4 |
| மத்திய வங்கிப் பிணைகளிலான முதலீடுகள் ... | — | 83.7 | 143.7 | — |
| கையிலுள்ள காசு ... | — | 310.7 | 405.4 | — |
| **3. அரச கூட்டுத்தாபனங்கள்** ... | — | **3,183.3** | — | **3,621.9** |
| வைப்புக்கள் ... | 237.5 | — | — | 546.2 |
| முற்பணங்கள் ... | — | 3,420.8 | — | 3,075.7 |
| **4. கூட்டுறவுகள்** ... | — | **130.2** | **233.7** | — |
| வைப்புக்கள் ... | 65.0 | — | 92.8 | — |
| முற்பணங்கள் ... | — | 195.2 | 140.9 | — |
| **5. ஏனைய உள்நாட்டு தனியார் துறை** ... | — | **4,198.3** | **5,570.9** | — |
| வைப்புக்கள்* ... | 4,470.5 | — | 8,036.1 | — |
| உள்நாட்டு உண்டியல்கள் ... | — | 1,857.1 | 1,169.7 | — |
| இறக்குமதி உண்டியல்கள் ... | — | 711.1 | 561.7 | — |
| மேலதிகப் பற்றுக்கள் ... | — | 2,759.5 | — | 576.5 |
| கடன்கள் ... | — | 3,347.0 | — | 3,601.2 |
| பிணைகளிலும் முறிகளிலும் முதலீடு ... | 5.9 | — | — | 18.9 |
| **6. வங்கிகளுக்கிடையில் கொடுக்கல் வாங்கல்கள்** ... | **72.2** | — | — | **885.3** |
| உள்நாட்டு வங்கிகளுடனான நிலுவை ... | 379.2 | — | — | 1,384.7 |
| உள்நாட்டு வங்கிகளுடனான வைப்புக்களும் கடன்பாடுகளும் ... | — | 307.0 | 499.4 | — |
| **7. வெளிநாட்டுத் துறை** ... | **332.0** | — | — | **321.6** |
| கடன்பாடுகள் ... | — | 345.3 | 112.9 | — |
| வைப்புக்கள் ... | 1,287.5 | — | 1,443.3 | — |
| வெளிநாட்டு நிலுவைகள்—ஏற்றுமதி உண்டியல்கள் உட்பட ... | — | 610.2 | — | 1,877.8 |
| **8. ஏனைய சொத்துக்களும் பொறுப்புக்களும்** | **8,455.2** | — | — | **1,306.4** |
| மூலதனமும் ஒதுக்குகளும் ... | 819.5 | — | 620.7 | — |
| நிலையான, ஏனைய சொத்துக்கள் ... | — | 2,889.8 | — | 939.0 |
| ஏனைய பொறுப்புக்கள் ... | 10,525.5 | — | — | 988.1 |
| மொத்த தேறிய மூலங்கள்/பயன்பாடுகள் ... | **8,859.4** | | **6,804 1** | |

மூலம்: இலங்கை மத்திய வங்கி

குறிப்பு: தடித்த எழுத்திலுள்ள எண்தொகைகள் ஒவ்வொரு துறையிலும் அவற்றின் தேறிய மூலத்தை அல்லது தேறிய பயன்பாட்டைக் காட்டுகின்றன.

* சிறப்பு சேமிப்புத் திட்டத்தின்கீழ் இரு வங்கிகளாலும் சேகரிக்கப்பட்ட நீண்டகால வைப்புக்களை உள்ளடக்கும்.

# அட்டவணை 1.63

## சேமிப்புத் திரட்டல் 1985—1989

ப. இ. ரூபாய்கள்

| ஆண்டு | வர்த்தக வங்கிகள் | | | | பி. கி. அ. வங்கிகள் | | வர்த்தக வங்கிகள் அல்லாத துறை | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | உள்நாடு | | வெளிநாடு | | | | கிராமிய வங்கிகள் | | தேசிய சேமிப்பு வங்கி | | வேளாண்மைப் பணி நிலையங்கள் | |
| | சேமிப்பு | நிலையான | சேமிப்பு | நிலையான | சேமிப்பு | நிலையான | சேமிப்பு | நிலையான | சேமிப்பு | நிலையான | சேமிப்பு | நிலையான |
| 1985 ... | 10,281 | 14,704 | 874 | 7,155 | 3 | ... | 928 | 161 | 3,701 | 9,527 | 94 | 42 |
| 1986 ... | 11,127 | 14,341 | 1,084 | 7,322 | 16 | 5 | 1,122 | 174 | 4,326 | 9,875 | 111 | 38 |
| 1987 ... | 13,179 | 15,706 | 1,325 | 8,382 | 44 | 9 | 1,371 | 189 | 5,172 | 11,229 | 133 | 36 |
| 1988 ... | 16,240 | 15,476 | 1,731 | 8,371 | 90 | 14 | 1,713 | 195 | 6,381 | 11,684 | 146 | 34 |
| 1989 ... | 20,572 | 17,109 | 1,942 | 8,925 | 140(ஆ) | 19(ஆ) | 1,930(இ) | 191(இ) | 7,931(ஆ) | 12,020(ஆ) | 152 | 35 |

மூலம்: இலங்கை மத்திய வங்கி.

(அ) ஏனைய வைப்புக்களையும் உள்ளடக்கும்.
(ஆ) தற்காலிகமானவை.
(இ) 1989 செத்தெம்பர் 30இல் உள்ளவாறான நிலைமை.

**நிதியங்களின் மூலங்களும் பயன்பாடுகளும்**

தேறிய அடிப்படையில் கடந்த காலத்தைப் போன்று தனியார்துறையே வர்த்தக வங்கிகளின் நிதியங்களின் முதன்மை மூலமாக விளங்கியது. இத்துறையிலிருந்தான மொத்தத் தேறிய மூலவளங்கள் ரூ. 55,710 இலட்சமாக விளங்கின. இது கொடுகடன் பத்திரங்களுக்கு எதிராகப் பேணப்பட வேண்டிய அளவான ரூ. 17,310 இலட்சத்தை உள்ளடக்கிய ரூ. 97,680 இலட்சம் கொண்ட வைப்புக்களின் அதிகரிப்பினதும் தனியார் பிணைகளின் முதலீடுகளில் ஏற்பட்ட ரூ. 190 இலட்சம் கொண்ட அதிகரிப்பை உள்ளடக்கியிருந்த முற்பணங்களில் ஏற்பட்ட ரூ. 41,970 இலட்சம் கொண்ட அதிகரிப்பினால் எதிரீடு செய்யப்பட்டதினதும் இணைந்த விளைவாகும். இதேவேளை அரச கூட்டுத்தாபனங்களின் மூலமான வர்த்தக வங்கி மூலவளங்களின் தேறிய பயன்பாடு ரூ. 36,220 இலட்சமாக விளங்கியது. மீளாய்வின் கீழுள்ள ஆண்டில் வர்த்தக வங்கிகளின் மூலவளங்களுக்கான தேறிய மூலமாக அரசதுறை ரூ.10,000 இலட்சத்தைக் கொண்டுவிளங்கியது. முன்னைய இரு ஆண்டுகளிலும் அரசு வர்த்தக வங்கி மூளவளங்களின் தேறிய பயன்பாட்டாளராக விளங்கியமையுடன் இது ஒப்பிடத்தக்கது. அரச வைப்புக்களின் ரூ. 12,970 இலட்சம் கொண்ட வளர்ச்சியும் ரூ. 10,350 இலட்சம் கொண்ட குறுகியகால கொடுகடன்களின் மீள் கொடுப்பனவுகளுமே வர்த்தக வங்கிகளுக்கு அரசினால் உருவாக்கப்பட்ட மூலவள மிகைக்கு முக்கிய காரணங்களாகும்.

1989 இறுதியில் வங்கித் தொழில் முறையினதும் ஏனைய சேமிப்பு நிறுவனங்களினதும் மொத்த வைப்புத் திரட்டல் 1988 இன் ரூ. 620,750 இலட்சங்களுடன் ஒப்பிடுகையில் ரூ. 709,660 இலட்சங்களாக விளங்கியது. உள்நாட்டு வர்த்தக வங்கிகள் மொத்த வைப்புக்களில் அரைப் பங்குக்கும் கூடுதலானதை திரட்டியவேளையில் தேசிய சேமிப்பு வங்கி 28 சதவீதத்தைத் திரட்டியது. திறைசேரி உண்டியல் சந்தையில் உயர்ந்த வட்டி வீதங்கள் வழங்கப்பட்ட போதிலும் பெரும்பாலான இந்நிறுவனங்களின் மூலமான வைப்புத் திரட்டல் பாராட்டத்தக்கதொன்றாகும். கடந்த 5 ஆண்டுகளில் சேமிப்புக்களின் திரட்டல் அட்டவணை 1.63 இல் தரப்பட்டுள்ளது.

**வங்கித் தொழில் வசதிகளின் விரிவாக்கம்**

**கிளை விரிவாக்கம்**

மத்திய கிழக்கின் எமிறெற்ஸ் வங்கி இலங்கையில் அதன் தொழிற்பாடுகளை நிறுத்திக் கொண்டதுடன் வரையறுக்கப்பட்ட அட்டன் நசனல் வங்கியினால் அதன் வியாபாரம் 1989 செத்தெம்பரிலிருந்து பொறுப்பேற்றுக் கொள்ளப்பட்டது. இதன்படி நாட்டில் தொழிற்படுகின்ற வர்த்தக வங்கிகளின் எண்ணிக்கை 24 இற்கும் வெளிநாட்டு வங்கிகளின் எண்ணிக்கை 18 இற்கும் குறைவடைந்தது.

1989 இல் இலங்கை வங்கி பேராதனையில் புதிய கொடுப்பனவு அலுவலகமொன்றினைத்திறந்ததுடன் வளாகக்கிளையின்வியாபாரம் பேராதனைக்கிளைக்கு மாற்றப்பட்டது. பியகம பன்னாட்டு சுதந்திர வர்த்தக வலயத்தில் விரிவாக்க அலுவலகமொன்றும் திறக்கப்பட்டது. பாதுகாப்புக் காரணங்களுக்காக மூடப்பட்டிருந்த மாங்குளம் கிளை மீண்டும் திறக்கப்பட்டது. வெளிநாட்டு வேலை வாய்ப்புப் பணி நிலையமொன்றும் கொழும்பு காப்புறுதி இல்லத்தில் திறக்கப்

பட்டது. முன்னைய ஆண்டில் தொடங்கப்பட்ட கிளைகளை ஒழுங்குமுறைப் படுத்தும் நிகழ்ச்சித் திட்டமும் தொடர்ந்து நடைபெற்றது. இதன்படி, குமாரன் இரத்தினம் வீதியிலிருந்த கிளை லேக்வியூ கிளையுடன் மீளமைக்கப்பட்டது. அதேவேளை பாதுகாப்புக் காரணங்களுக்காக இலங்கை வங்கியின் கக்மனை, பிட்டிகலை கிளைகள் மாத்தறை அதி சிறப்புத் தரக்கிளைக்குத் தற்காலிகமாக மாற்றப்பட்டன. அகலவத்தைக் கிளை மத்துகம கிளைக்கு மாற்றப்பட்டதுடன் மாநகரக் கிளை பிறிஸ்டல் வீதிக் கிளைக் கட்டடத்திற்கு மாற்றப்பட்டது. இவ்வாண்டுக் காலத்தில் ஏழு வேளாண்மைப் பணி நிலையக் கிளைகள் ஏனைய பல்வேறு கிளைகளுக்கு மாற்றப்பட்ட வேளையில் நான்கு கிளைகள் மீளமைக்கப் பட்டன. அத்துடன் விரிவாக்க நிலையமொன்றும் மீளமைக்கப்பட்டது. மாத் தளை இரண்டாவது மாநகரக் கிளை மாத்தளை முதன்மைக் கிளையுடன் ஒன்றிணைக்கப்பட்டது. இபலோகம, திகன, சிராவஸ்திபுரம், நிலந்திகன ஆகிய இடங்களிலிருந்த வேளாண்மைப் பணி நிலையங்கள் கலேவெலை, மடவலை, அனுராதபுரம், கந்தப்பளை ஆகிய இடங்களிலுள்ள கிளைகளுடன் ஒன்றிணைக் கப்பட்டன. வீரகெட்டிய, வெள்ளவாயா வேளாண்மைப் பணி நிலையங்கள் 'சி' தரக் கிளைகளுக்குத் தரமுயர்த்தப்பட்டன. இம்மாற்றங்களின் விளைவாக இலங்கை வங்கியின் முதன்மைக் கிளைகளினது எண்ணிக்கை 238 ஆக அமைந்த வேளையில் வேளாண்மைப் பணி நிலையக் கிளையின் எண்ணிக்கை 1989 இறுதி யில் 45 இற்கு வீழ்ச்சியடைந்தது.

### அட்டவணை 1.64

### வங்கிக் கிளைகளின் பரம்பல் (1987—89)

| வகை | 1987 | 1988 | 1989 |
|---|---|---|---|
| 1. நிறுவனங்களின் எண்ணிக்கை ... | 33 | 36 | 35 |
| 1. 1. வர்த்தக வங்கிகளின் எண்ணிக்கை ... | 24 | 25 | 24 |
| 1. 1. 1. உள்நாட்டு வங்கிகளின் எண்ணிக்கை ... | 05 | 06 | 06 |
| 1. 1. 2. வெளிநாட்டு வங்கிகளின் எண்ணிக்கை ... | 19 | 19 | 18 |
| 1. 2. பிரதேச கிராமிய அபிவிருத்தி வங்கிகளின் எண்ணிக்கை (அ) ... | 09 | 11 | 11 |
| 2. கிளைகளின் எண்ணிக்கை* .. | 822 | 844 | 869 |
| 2. 1. வர்த்தக வங்கிக் கிளைகளின் எண்ணிக்கை ... | 699 | 700 | 711 |
| 2. 1. 1. உள்நாட்டு வங்கிக் கிளைகளின் எண்ணிக்கை (ஆ) ... | 677 | 678 | 690 |
| 2. 1. 1. 1. வேளாண்மைப் பணி நிலையக் கிளைகளின் எண்ணிக்கை ... | 49 | 47 | 45 |
| 2. 1. 2. வெளிநாட்டு வங்கிக் கிளைகளின் எண்ணிக்கை ... | 22 | 22 | 21 |
| 2. 2. பிரதேச கிராமிய அபிவிருத்தி வங்கிக்கிளைகளின் எண்ணிக்கை | 61 | 80 | 89 |
| 2. 3. தேசிய சேமிப்பு வங்கிக் கிளைகளின் எண்ணிக்கை ... | 62 | 64 | 69 |

மூலம்: இலங்கை மத்திய வங்கி.

(அ) 1985இன் எண் 15 கொண்ட பிரதேச கிராமிய அபிவிருத்தி வங்கிச் சட்டத்தின்கீழ் பிரதேச கிராமிய அபிவிருத்தி வங்கிகள் நிறுவப்பட்டன.

(ஆ) விரிவாக்க அலுவலகங்கள், கச்சேரிக் கிளைகள், கொடுப்பனவு அலுவலகங்கள், வெளிநாட்டுக் கிளைகள் உட்பட. ஆனால், தலைமையலுவலக கிளைகளின் விரிவாக்க அலுவலகத்தில் இயங்கும் வேளாண்மைப் பணி நிலையக் கிளைகள் நீங்கலாக.

* தலைமை அலுவலகங்கள் உட்பட

ஆய்விற்குரிய காலப்பகுதியில் மக்கள் வங்கி மூன்று புதிய கிளைகளை பமுணுகம, கிருலப்பனை, பொரளை கொட்டா வீதி ஆகிய இடங்களில் திறந்தது. புதிய விரிவாக்க அலுவலகமொன்று இலங்கைக் காப்புறுதிக் கூட்டுத்தாபனத்தின் தலைமை அலுவலகக் கட்டிடத்தில் திறக்கப்பட்டதுடன் இதனது கிளைகளின் மொத்த எண்ணிக்கை 320 இற்கு அதிகரித்தது. இதேவேளை மக்கள் வங்கியின் பொரளை அடைவுபிடிக்கும் நிலையமும் மல்வத்தை வீதிக் கிளையும் முதன்மைக் கிளைகளாகத் தரமுயர்த்தப்பட்டன.

அட்டன் நசனல் வங்கி வத்தளையில் புதிய கிளையொன்றைத் திறந்ததுடனும் 1989 செத்தெம்பரில் எமிறேற்ஸ் வங்கியின் வியாபாரத்தைப் பொறுப்பேற்றுக் கொண்டதன்மூலமும் அதனது கிளைகளின் மொத்த எண்ணிக்கை 35 இற்கு அதிகரித்தது. வரையறுக்கப்பட்ட சம்பத் வங்கியும் 7 புதிய கிளைகளைக் கிரிபத்கொடை, கொழும்பு கோட்டை, பம்பலப்பிட்டி, கட்டுநாயக்கா வானூர்தி நிலையம், குருநாகல், நவம்மாவத்தை, கண்டி ஆகிய இடங்களில் திறந்தமையின் மூலம் அதன் கிளையமைப்பினை விரிவாக்கிக் கொண்டது. இதன்படி, வரையறுக்கப்பட்ட சம்பத் வங்கியின் கிளைகளினது எண்ணிக்கை 1989 இறுதியில் 11 இற்கு அதிகரித்தது. இதேவேளை வரையறுக்கப்பட்ட செலாண் றஸ்ட் வங்கி கல்கிசை, பாணந்துறை, மகரகம, கிரிபத்கொடை ஆகிய இடங்களில் 4 கிளைகளைத் திறந்ததன் மூலமும் மாத்தறையிலுள்ள இந்தியன் ஓவசீஸ் வங்கியின் கிளையினைப் பொறுப்பேற்றுக் கொண்டதன் மூலமும் அதன் கிளைகளினது எண்ணிக்கையை அதிகரித்துக் கொண்டது.

வெளிநாட்டு வங்கித்துறையும் இரண்டு கிளைகளைத் திறந்ததன் வாயிலாக அதன் கிளையமைப்பினை விரிவாக்கிக் கொண்டது. கிறீன்லேஸ் வங்கியும், கபிப் வங்கி ஏ.ஜி. சூறிச்சும் முறையே புறக்கோட்டையிலும் கோட்டையிலும் புதிய கிளைகளைத் திறந்தன. 1989 செத்தெம்பரில் எமிறேற்ஸ் வங்கி அதன் வியாபாரத்தை முடித்துக்கொண்டதன் காரணமாக வெளிநாட்டு வங்கிக் கிளையின் மொத்த எண்ணிக்கை 21 ஆக அமைந்தது.

இம்மாற்றங்களின் விளைவாக வேளாண்மைப்பணி நிலையக் கிளைகள் நீங்கலாக வர்த்தக வங்கிக் கிளைகளின் எண்ணிக்கை 1989 இறுதியில் 711 ஆக அமைந்தது. அதேவேளை கொழும்பு மேற்கு, வெலிகம, கிரிபத்கொடை, கல்கிசை, மாறவிலை ஆகிய இடங்களில் தேசிய சேமிப்பு வங்கி ஐந்து கிளைகளைத் திறந்தமையின் மூலம் நாட்டின் அதன் கிளையமைப்பு ஆண்டின் இறுதியில் 69 இற்கு அதிகரித்தது.

இவ்வாண்டில் புதிய பிரதேச கிராமிய அபிவிருத்தி வங்கிகள் எதுவும் திறக்கப்படவில்லை. எனினும் தற்போதுள்ள பிரதேச கிராமிய அபிவிருத்தி வங்கிகளில் ஐந்து அவற்றின் கிளையமைப்பினை விரிவாக்கிக் கொண்டன. கேகாலையிலும், நுவரெலியாவிலுமுள்ள பிரதேச கிராமிய அபிவிருத்தி வங்கிகள் ஒவ்வொன்றும் 3 கிளைகளைத் திறந்தவேளையில் மொனராகலையிலுள்ள வங்கி இரண்டு கிளைகளையும் காலியிலுள்ள வங்கி ஒரு கிளையையும் திறந்தது. இதன் விளைவாக 1989 இறுதியில் பிரதேச கிராமிய அபிவிருத்தி வங்கிகளின் தொழிற்படும் கிளைகளின் மொத்த எண்ணிக்கை 89 ஆக விளங்கியது.

## முகவர் வங்கித் தொழில்

இலங்கையில் முகவர் வங்கித்தொழிலை மேம்படுத்துவதற்கான முன்னோடியாக 1988 ஒத்தோபரில் அறிமுகப்படுத்தப்பட்ட மக்கள் கடன் முன்னோடித் திட்டத்தின் கீழ் இலங்கை வங்கியும், மக்கள் வங்கியும் அவற்றின் நடவடிக்கைகளைத் தொடர்ந்தும் மேற்கொண்டன. இதேவேளை வரையறுக்கப்பட்ட சம்பத் வங்கியும் முன்னோடி அடிப்படையில் 1989 சனவரியில் ''சம்பத் தொழில் வழங்குனர் திட்டமென'' அழைக்கப்படும் புதிய திட்டமொன்றினைத் தொடங்கியது. இத்திட்டத்தின் முதன்மைக் குறிக்கோள்களாக ஆற்றல் மிக்க அபிவிருத்திச் செயற்றிட்டங்களை இனங்காணுதல், ஆகக் கீழ்மட்டத்தினை அடையும் விதத்தில் கொடுகடனை வழங்குதல், இதே சமூக நிலையில் சேமிப்புக்களைத் திரட்டுதல் ''சம்பத் தொழில் வழங்குனர் திட்டம்'' என வழங்கப்படும் இடைநிலை ஊடகத்தினூடாக மாற்றத்தினை ஏற்படுத்துதல் என்பன விளங்கின. சம்பத் தொழில் வழங்குனர் திட்டம் பொதுமக்களுக்குச் சேமிப்புச் சான்றிதழ்களை அறிமுகப்படுத்தியதன் காரணமாக இது இரு அரச வங்கிகளினாலும் தொழிற்படுத்தப்பட்ட திட்டத்திலிருந்தும் வேறுபட்டதாகும்.

சம்பத் தொழில் வழங்குனர் திட்டத்தின் கீழ் ரூ. 50 ரூ. 100, ரூ. 500, ரூ. 1,000தொகைகளில் சேமிப்புச் சான்றிதழ்கள் விற்பனை செய்யப்படுகின்றன. சேமிப்புச் சான்றிதழ்களுக்கானவட்டி முதலாம் ஆண்டில் முன் கொடுப்பனவு செய்யப்படுவதோடு பணமாக மாற்றும் வரையிலான ஒன்று சேர்ந்த வட்டி தொடர் வட்டியுடன் பணமாக மாற்றும்போது கொடுப்பனவு செய்யப்படும். இந்தச் சேமிப்புச் சான்றிதழைக் கிராமத்திலேயே, அதனை விற்பனை செய்த சம்பத் தொழில் வழங்குனரிடம் சமர்ப்பித்து உடனடியாகப் பணமாக மாற்றிக் கொள்ளலாம். சேமிப்புச் சான்றிதழ்கள் தொடர்பான இந்தப் புதிய எண்ணக்கரு இரண்டாந்தரச் சந்தையொன்றையும் உருவாக்க உதவியது. அதாவது அதனை வைத்திருப்பவருக்குக் குறுகியகாலக் கடன் வசதிகள் அவசியமாகும்போது அதனைப் பிணையாக வைத்து மாதமொன்றுக்கு 3.5 சதவீத வட்டியில் தொழில் வழங்குனரிடமிருந்து கடன் பெறலாம்.

1989 இறுதியில் மக்கள் கடன் முன்னோடித் திட்டத்தின்கீழ் இலங்கை வங்கியினாலும் மக்கள் வங்கியினாலும் வழங்கப்பட்டு வெளிநிற்கும் மொத்தக் கடன்கள் முறையே ரூ. 300 இலட்சமாகவும், ரூ. 120 இலட்சமாகவும் காணப்பட்டன. இதேவேளையில் 1989 இறுதியில் சம்பத் தொழில் வழங்குனர் திட்டத்தின் கீழ் வெளிநின்ற மொத்தக் கடன்கள் ரூ. 40 இலட்சமாகும். 1989 இன் இறுதியில் இலங்கை வங்கியினால் 2,706 முகவர்களும், மக்கள் வங்கியினால் 4,328 முகவர்களும் நியமிக்கப்பட்டிருந்தவேளையில் சம்பத் வங்கியினால் 55 முகவர்கள் நியமிக்கப்பட்டிருந்தனர்.

## பணி வசதிகள்

வர்த்தக வங்கிகளினால் வழங்கப்பட்ட பணி வசதிகள் 1989 இல் மேலும் முன்னேற்றமடைந்தன. 'பணமற்ற சமுதாயம்' ஒன்றை உருவாக்குவதற்கான முன்னோடி முயற்சியாக ''சீபேங்க்'' என்ற வர்த்தகப் பெயரில் ஐக்கிய அமெரிக்க நாடுகளின் விசா இன்டர் நசனல் நிறுவனத்துடன் கூட்டாகச் சேர்ந்து 1989 சனவரியில் கொடுகடன் அட்டைத் திட்டமொன்றை இலங்கை வங்கி நடைமுறைப்படுத்தியது. இலங்கை வங்கியினால் வழங்கப்பட்ட சீபேங்க் அட்டைகள்

ஐந்து துணை வகைகளுக்குள் அடங்குகின்றன. அவையாவன இலங்கையில் மட்டும் பாவிக்கக்கூடிய உள்நாட்டு தங்க அட்டைகள், உள்நாட்டு முதல்தர அட்டைகள், 162 நாடுகளில் பாவிக்கக்கூடிய பன்னாட்டு முதல்தர அட்டையும் பன்னாட்டுத் தங்க அட்டையும், கூட்டுரிமைகளுக்கான வர்த்தக அட்டை என்பனவாகும்.

கொடுகடன் அட்டைத் திட்டத்தில் பங்கேற்கும் எந்தவொரு சில்லறை விற்பனை நிலையத்திலிருந்தும் கடன் அடிப்படையில் பொருட்களையும், பணிகளையும் கொள்வனவு செய்ய இந்த அட்டை அனுமதி வழங்குகின்றதோடு கொடுக்கல் வாங்கல் நோக்கங்களுக்காகப் பணத்தை எடுத்துச் செல்லும் அவசியத்தையும் இல்லாமல் செய்கின்றது. அதிகாரமளிக்கப்பட்ட வர்த்தகர் ஒருவர் உரிமை கோரி நிற்கும்போது அவருக்கான கொடுப்பனவு செய்யப்படும் என்ற வங்கியின் உள்ளார்ந்த உத்தரவாதத்துடன் வாடிக்கையாளர்களின் கொடுப்பனவுகள் உடனடியாக ஏற்றுக்கொள்ளப்படுகின்றன. இந்தத் திட்டமானது வங்கியின் சொந்த வாடிக்கையாளர்களுக்கு மட்டுமன்றி நம்பிக்கை வாய்ந்த எந்த ஒரு ஆளுக்குமுரியதாகும்.

ஐக்கிய அமெரிக்க நாடுகளின் உலகப் பிரசித்தி பெற்ற சிறப்பு அட்டை முறையுடன் கூட்டுச்சேர்ந்து இலங்கையிலும் மாஸ்டர் அட்டை முறையை அறிமுகப்படுத்திய இரண்டாவது இலங்கை வங்கி சம்பத் வங்கியாகும். இந்த அட்டையை வைத்திருப்பவருக்குப் பங்கேற்கும் வர்த்தகரிடமிருந்து கடன் அடிப்படையில் பொருட்களையும் பணிகளையும் கொள்வனவு செய்ய இயலுமானதோடு சம்பத் வங்கியில் நிறுவப்பட்டுள்ள தன்னியக்க ரெலெர் பொறி வசதிகளும் வழங்கப்பட்டுள்ளன. சம்பத் கடன் அட்டை முறையின் கீழ் வங்கியிலிருந்து கொள்வனவுக் கூற்றைப் பெற்ற 15 நாட்களுக்குள் முழுத் தொகையும் செலுத்தப்படுமாயின் அட்டையை வைத்திருப்பவர்கள் வட்டியில்லாக் கடன் வசதிகளைப் பெறுவர். கடன் தீர்ப்பனவுக்கான ஏனைய விருப்பத் தேர்வுகளாக ஆகக் குறைந்தது ரூ. 250 என்ற அடிப்படையில் கொள்வனவுக் கூற்றில் ஆகக் குறைந்தது 5 சதவீதம் செலுத்தப்பட வேண்டும். மிகுதித் தொகை மேலதிகப் பற்றுக்களுக்குப் பொருந்துவதான அதே நியதிகளில் சம்பத் மாஸ்டர் அட்டை வைத்திருப்பவருக்கு வழங்கப்படும்.

### கிராமிய வங்கித் தொழிலும் கொடுகடனும்

தொடரும் உள்நாட்டுக் குழப்பங்களுக்கு மத்தியிலும் நிறுவனரீதியிலான துறை கிராமியத் துறைக்கான கொடுகடனைப் பல கொடுகடன் திட்டங்களினூடாகத் தொடர்ந்தும் வழங்கியது. புதிய அனைத்தையும் உள்ளடக்கிய கிராமியக் கொடுகடன் திட்டத்தின்கீழ், பங்குகொள்ளும் கொடுகடன் நிறுவனங்கள் மத்திய வங்கியின் உதவியான 100 சதவீத மீள் நிதியிடல், 50 சதவீத கொடுகடன் உத்தரவாதம் என்பவற்றுடன் நெல்லுக்கும், 26 துணை உணவுப் பயிர்களுக்கும் சலுகை அடிப்படையிலான வட்டி வீதங்களில் குறுங்கால பயிர்ச்செய்கைக் கடன்களைத் தொடர்ந்தும் வழங்கின. வேளாண்மை மற்றும் அது தொடர்பான துறைகளில் கிராம ரீதியிலான பொருளாதார நடவடிக்கைகளை உள்ளடக்கிய நடுத்தர நீண்டகால முதலீட்டிற்கான நிதி வசதிகளைக் கொண்ட கொடை 1989 இல் தொழிற்பாட்டில் உள்ள 25 கொடுகடன் திட்டங்களினூடாக உதவப்பட்டது. இத்துடன் வறுமை ஒழிப்பை நோக்காகக் கொண்ட ஒரு செயற்றிட்டம் உட்பட 3 புதிய சிறப்பு செயற்றிட்டங்கள் ஆய்விற்குரிய ஆண்டில் தொழிற்படத் தொடங்கின. கிராமியத் துறையின் கொடுகடன் தேவைகளை

ஈடுசெய்வதற்காக நிறுவன ரீதியிலான ஒழுங்குகளை முன்னேற்றும் நோக்கில், மத்திய வங்கி இவ்வாண்டில் முடிவுற இருந்த பல கொடுகடன் திட்டங்களின் தொழிற்பாடுகளின் கால எல்லையை நீடித்ததுடன் பல ஏனைய கொடுகடன் திட்டங்களின் கீழ்ப் பங்குகொள்ளும் நிறுவனங்களின் எண்ணிக்கையையும் அதிகரித்தது.

**புதிய அனைத்தையும் உள்ளடக்கிய கிராமியக் கொடுகடன் திட்டம்**

1989 இல், புதிய அனைத்தையும் உள்ளடக்கிய கிராமியக் கொடுகடன் திட்டத்தில் 3 புதிய பிரதேச கிராமிய அபிவிருத்தி வங்கிகள் பங்குகொண்டதுடன், இத்திட்டத்தின்கீழ்ப் பங்குகொள்ளும் கொடுகடன் நிறுவனங்களின் எண்ணிக்கையை 14 இற்குக் கொண்டு வந்தது. இத்திட்டத்தின்கீழ்க் கொடுகடன் வழங்கும் கிளைகளின் எண்ணிக்கை 1989 இல் இரு மடங்கான அதிகரிப்பைப் பதிவு செய்தது.

1989 இல், புதிய அனைத்தையும் உள்ளடக்கிய கிராமியக் கொடுகடன் திட்டத்தின்கீழ் வழங்கப்பட்ட கொடுகடனின் மொத்த அளவு ரூ. 2,170 இலட்சமாக விளங்கி முன்னைய ஆண்டைவிட 33 சதவீதம் குறைந்து காணப்பட்டது. முன்னைய ஆண்டின் ஒத்த எண் தொகைகளுடன் ஒப்பிடுகையில் 1988/89 பெரும்போகத்தில் வழங்கப்பட்ட கடன்கள் 44 சதவீதத்தால் வீழ்ச்சியடைந்திருக்கையில் 1989 சிறுபோகத்தில் வழங்கப்பட்ட கடன்கள் 8 சதவீதத்தால் வீழ்ச்சியடைந்தன.இது 1989 இன் முதலாம் காற்பகுதியில் நிலவிய வரட்சி காரணமாகவும், நாட்டின் பாதுகாப்பு நிலைமை தொடர்ந்து பாதிக்கப்பட்டமையாலும் ஏற்பட்டது.

அண்மைக் காலத்தில் அவதானிக்கப்பட்ட போக்கினைத் தொடர்ந்து, இரு அரசதுறை வங்கிகளும், இவ்வாண்டில் இத்திட்டத்தின்கீழ் விரிவாக்கப்பட்ட மொத்தக் கொடுகடனின் 87.1 சதவீதத்தைச் செலுத்தின. 1989 இல் புதிய அனைத்தையும் உள்ளடக்கிய கிராமியக் கொடுகடன் திட்டத்தின் தொழிற்பாடுகளின் குறிப்பிடத்தக்க தன்மை யாதெனில், எல்லா ஏனைய பங்குகொள்ளும் வங்கிகளால் வழங்கப்பட்ட கடன்களின் மொத்த அளவு வீழ்ச்சியடைந்திருக்கையில், பிரதேச கிராமிய அபிவிருத்தி வங்கிகளால் வழங்கப்பட்ட கடன்களின் அளவு 1988 இன் ரூ. 174 இலட்சத்திலிருந்து, 1989 இல் ரூ. 212 இலட்சத்திற்கு அதிகரித்தமையேயாகும். பெரும்பாலான பிரதேச கிராமிய அபிவிருத்தி வங்கிகளால் கூடிய அளவு கடன்கள் வழங்கப்பட்டமையும், இத்திட்டத்தின்கீழ்ப் பங்குகொள்ளும் பிரதேச கிராமிய அபிவிருத்தி வங்கிகளின் எண்ணிக்கையில் அதிகரிப்பு ஏற்பட்டமையும் இவ்வதிகரிப்பிற்குப் பங்களிப்புக் காரணிகளாக விளங்கின. மத்திய வங்கி, இத்திட்டத்தின் கீழ்ப் பங்குகொள்ளும் கனிட்ட பங்காளரான கூட்டுறவுக் கிராமிய வங்கிகளுக்கு 1989 இல் ரூ. 40 இலட்சத்திற்கு ஒப்புதலளித்தது.

1989 இல் புதிய அனைத்தையும் உள்ளடக்கிய கிராமியக் கொடுகடன் திட்டத்தின்கீழ் 37,177 கடன் பெறுநர்களுக்கான வசதிகளுக்கான ஒப்புதலளிக்கப்பட்டதுடன் முன்னைய ஆண்டைவிட 37 சதவீதம் கொண்ட கணிசமான வீழ்ச்சியைப் பிரதிபலித்தது. வழங்கப்பட்ட கடன்களின் மொத்த அளவில் அவதானிக்கப்பட்டவாறு பிரதேச கிராமிய அபிவிருத்தி வங்கிகளிடம் இருந்து கடன் பெற்றவர்களின் எண்ணிக்கை முன்னைய ஆண்டைவிட 13 சதவீதத்தால் அதிகரித்திருக்கையில் ஏனைய கடன் வழங்கும் நிறுவனங்களிடமிருந்து கடன் பெற்றவர்களின் எண்ணிக்கை கணிசமானளவில் வீழ்ச்சியடைந்தது.

## அட்டவணை 1.65

### புதிய அனைத்தையும் உள்ளடக்கிய கிராமியக் கொடுகடன் திட்டத்தின்கீழ் வழங்கப்பட்ட பயிர்ச்செய்கைக் கடன்கள் (31–12–1989இல் உள்ளவாறு நிலைமை)

(ரூ. ப, இலட்சம்)

| போகம் | மக்கள் வங்கி | | | இலங்கை வங்கி | | | அட்டன் நசனல் வங்கி | | | பிரதேச கிராமிய அபிவிருத்தி வங்கிகள் | | | மொத்தக் கடன்கள் | | பு.அ.உ.கி. கொ.தி. கீழ் மொத்தக் கடன்கள் |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | நெல் | துணை உணவுப் பயிர்கள் | மொத்தம் | நெல் | துணை உணவுப் பயிர்கள் | மொத்தம் | நெல் | துணை உணவுப் பயிர்கள் | மொத்தம் | நெல் | துணை உணவுப் பயிர்கள் | மொத்தம் | நெல் | துணை உணவுப் பயிர்கள் | |
| 1987/88 பெரும் ... | 92.4* | 13.9* | 106.3 | 74.3 | 26.0 | 100.3 | 12.9 | — | 12.9 | 10.1 | 0.3 | 10.4 | 189.7 | 40.2 | 229.9 |
| 1988 சிறு ... | 21.1 | 18.7 | 39.8 | 27.7 | 17.8 | 45.5 | 0.1 | 2.7 | 2.8 | 6.3 | 0.7 | 7.0 | 55.2 | 39.9 | 95.1 |
| பயிர்செய்கை ஆண்டு'88 | 113.5 | 32.6 | 146.1 | 102.0 | 43.8 | 145.8 | 13.0 | 2.7 | 15.7 | 16.4 | 1.0 | 17.4 | 244.9 | 80.1 | 325.0 |
| 1988/89 பெரும் ... | 37.3 | 8.3 | 45.6 | 38.9 | 28.1 | 67.0 | 6.2 | — | 6.2 | 8.7 | 1.3 | 10.0 | 91.1 | 37.7 | 128.8 |
| 1989 சிறு ... | 16-3 | 8.8 | 25.1 | 31.2 | 20.0 | 51.2 | — | 0.5 | 0.5 | 9.1 | 2.1 | 11.2 | 56.6 | 31.4 | 88.0 |
| பயிர்செய்கை ஆண்டு'89 | 53.6 | 17.1 | 70.7 | 70.1 | 48.1 | 118.2 | 6.2 | 0.5 | 6.7 | 17.8 | 3.4 | 21.2 | 147.7 | 69.1 | 216.8 |

* இடைப்பருவகாலம் உட்பட

மூலங்கள்: மக்கள் வங்கி.
இலங்கை வங்கி.
வரையறுக்கப்பட்ட அட்டன் நசனல் வங்கி.
பிரதேச கிராமிய அபிவிருத்தி வங்கிகள்.

புதிய அனைத்தையும் உள்ளடக்கிய கிராமிய கொடுகடன் திட்டத்தின்கீழ் நெற் பயிர்ச்செய்கைக்காக வழங்கப்பட்ட கடன்களின் மொத்தப் பெறுமதி 1988 இன் ரூ. 2,450 இலட்சத்திலிருந்து 1989 இல் ரூ. 1,480 இலட்சத்திற்கு 40 சதவீதத்தால் வீழ்ச்சியடைந்தது. எனினும் நெற் கடன்கள் இத்திட்டத்தின் கீழ்ப் பயிர்ச்செய்கை நோக்கங்களுக்காக வழங்கப்பட்ட மொத்தக் கடன்களின் முக்கிய பங்கை (68 சதவீதம்) தொடர்ந்து வகித்தன. 1988/89 பெரும்போகத்தில் பிரதேச கிராமிய அபிவிருத்தி வங்கிகள் தவிர்ந்த பங்குகொள்ளும் அபிவிருத்தி வங்கிகளால் இத்திட்டத்தின் கீழ் நெல்லுக்கு வழங்கப்பட்ட கடன்களின் மீளப்பெறும் வீதம் 64 சதவீதமாக விளங்கியது. 1987/88 பெரும்போகத்தின் மீளப்பெறும் வீதமான 54 சதவீதத்துடன் ஒப்பிடுகையில் இது குறிப்பிடத்தக்களவு முன்னேற்றமாகும்.

இதேவேளையில் 1989 இல் புதிய அனைத்தையும் உள்ளடக்கிய கிராமிய கொடுகடன் திட்டத்தின்கீழ்த் தரம் குறைந்த தானியங்கள், பருப்பு வகை, எண்ணெய் வகைகள், காய்கறிகள் என்பவற்றை உள்ளடக்கிய துணை உணவுப் பயிர்களின் பரந்த அளவிலான பயிர்ச்செய்கைக்கு மொத்தமாக ரூ. 690 இலட்சம் வழங்கப்பட்டது. இது முன்னைய ஆண்டின் ஒத்த பெறுமதியுடன் ஒப்பிடுகையில் 14 சதவீதம் குறைவாக விளங்கியது. நெற் செய்கைக்கு வழங்கப்பட்ட கடன்களைப் போன்றே நிறுவன ரீதியான வகையில் காணப்பட்ட பிரதேச கிராமிய அபிவிருத்தி வங்கிகளால் 1989 இல் துணை உணவுப் பயிர்களின் பயிர்ச்செய்கைக்கு வழங்கப்பட்ட கடன்கள் 240 சதவீத அதிகரிப்பைப் பதிவு செய்தன.

மத்திய வங்கி, இயற்கை அழிவால் பாதிக்கப்பட்ட வேளாண்மையாளர்களுக்கு வழங்கப்பட்ட கடன்களை மீள் அட்டவணைப்படுத்துவதற்கு வங்கிகளை உற்சாகப்படுத்தி உதவி செய்தது. இயற்கை அழிவு காரணமாக 50 சதவீதத்திற்கும் குறைவான அறுவடையைப் பெற்ற கடன் பெறுநர்களுக்கு மீள் அட்டவணைப்படுத்தும் வசதி வழங்கப்பட்டதுடன் மீள் செலுத்தல் கால எல்லையும் 32 மாதத்திற்கு நீடிக்கப்பட்டது. 1988/89 பெரும்போகத்தில் ரூ. 11 இலட்சம் பெறுமதி கொண்ட மொத்தமாக 249 கடன்கள் மீள் அட்டவணையிடப்பட்டன. ஒப்புதலளிக்கப்பட்ட மொத்தக் கடன்களில் மீள் அட்டவணையிடப்பட்ட கடன்களின் எண்ணிக்கை 1 சதவீதமாக விளங்குகையில் அக்கடன்களின் பெறுமதி மிகக் குறைந்த சதவீதமாக விளங்கியது. 1988/89 பெரும்போகத்தில் மீள் அட்டவணையிடப்பட்ட கடன்களின் பெறுமதியும், கடன்களின் மொத்த எண்ணிக்கையும் 1987/88 இன் பெரும்போகத்தில் இத்திட்டத்தின் கீழ் மீள் அட்டவணையிடப்பட்ட கடன்களின் ஆகக்கூடிய அளவாகப் பதிவு செய்யப்பட்ட எண்ணிக்கையினைவிடக் கடுமையான வீழ்ச்சியைப் பிரதிபலித்தது.

பயிர்ச் செய்கை நோக்கங்களுக்காக வழங்கப்பட்ட கொடுகடனின் அளவை அதிகரிப்பதற்கு வங்கிகளை உற்சாகப்படுத்தும் நோக்கில், மத்திய வங்கி புதிய அனைத்தையும் உள்ளடக்கிய கிராமிய கொடுகடன் திட்டத்தின்கீழ் வழங்கப்பட்ட கடன்களை ஈடுசெய்வதற்குக் கொடுகடன் உத்தரவாதம் அளிப்பதைத் தொடர்ந்தது. உத்தரவாதம் காப்புக் கடன் வழங்கும் நிறுவனங்களால் அடையப்பட்ட நட்டத்தின் 50 சதவீதத்திற்கு மட்டுப்படுத்தப்பட்டது. இத்திட்டத்தின் கீழ் உத்தரவாதத்திற்குத் தகைமை பெறுவதற்கு, வழங்கப்பட்ட கடன்களின் அளவின்மீது ஆண்டுக்கு $\frac{1}{2}$ சதவீத தவணைக் கட்டணத்தைக் கொடுகடன் உத்தரவாத நிதியத்திற்குச் செலுத்துவதற்குக் கடன் வழங்கும் வங்கிகள் கேட்கப்பட்டுள்ளன. இத்திட்டத்தின் கீழ் வழங்கப்பட்ட உத்தரவாதங்களின் பெயரில்

மத்திய வங்கியால் சேகரிக்கப்பட்ட தவணைப் பணத்தின் மொத்தப் பெறுமதி 1989 இறுதியில் ரூ. 90 இலட்சமாக விளங்கியது. எனினும். இத்திட்டத்தின் கீழான கொடுப்பனவுகளின் மொத்தப் பெறுமதி 87/88 பெரும்போகத்தின் இறுதியில் ரூ. 297 இலட்சமாக விளங்கியது.

**நடுத்தர நீண்டகாலக் கொடுகடன் நிதியம்**

இவ்வாண்டில், மத்திய வங்கி வேளாண்மை அதனுடன் இணைந்த செயற்றிட்டங்களின் நடுத்தர நீண்டகால முதலீட்டுத் தேவைகளை ஈடுசெய்வதற்கான நிதியங்களைச் சலுகை ரீதியிலான வட்டி வீதங்களில் அதன் நடுத்தர நீண்டகாலக் கொடுகடன் நிதியினூடாகத் தொடர்ந்தும் வழங்கியது. கடன் வழங்கும் நோக்கங்களுக்காக 1989 இல் மொத்தமாக 28 கொடுகடன் திட்டங்கள் ரூ. 25,170 இலட்சங்கள் கொண்ட மொத்த ஒதுக்குடன் தொழிற்பாட்டிலிருந்தன. இக் கொடுகடன் திட்டங்கள் மத்திய வங்கியின் நடுத்தர நீண்டகாலக் கொடுகடன் நிதியத்தால் (வகை 1) வழங்கப்பட்ட நிதியங்களுடன் தொழிற்பட்ட திட்டங்களாகவும் பன்னாட்டு அமைப்புகளிடமிருந்து பெறப்பட்ட நிதியங்களைக் கொண்டு செயற்பட்ட திட்டங்களாகவும் பரந்தளவில் வகைப்படுத்தப்பட்டன. 1989 இன் பின்னரைப் பகுதியில் அறிமுகப்படுத்தப்பட்ட நீரியல் வள அபிவிருத்திச் செயற்றிட்டம் நடுத்தர நீண்டகாலக் கொடுகடன் நிதியத்தாலும் (வகை 3) ஆசிய அபிவிருத்தி வங்கியாலும் வழங்கப்பட்ட நிதியங்கள் மூலம் கொடுகடன் வசதிகளை வழங்கியது. வேளாண்மைத் துறையின் நடுத்தரக்கால, நீண்டகால நிதித் தேவைகளை எதிர்கொள்வதற்கு நிறுவன ரீதியான உள்ளடக்கலை அதிகரிக்கும் நோக்கில் மத்திய வங்கி இவ்வாண்டில் பல நடுத்தர நீண்டகாலக் கொடுகடன் திட்டங்களின் கீழ்ப் பங்குகொள்ளும் வங்கிகளின் உள்ளடக்கலை விரிவாக்கியது. வரையறுக்கப்பட்ட செலான் வங்கியும், வரையறுக்கப்பட்ட அட்டன் நசனல் வங்கியும் மாத்தறை மாவட்டத்தில் சுயவேலைவாய்ப்பு, கிராம ஏற்புத் திட்டங்கள் என்பன மீதான கொடுகடன் திட்டத்தின் கீழ்ப் பங்குகொள்ளும் நிறுவனங்களாக இணைந்திருக்கையில் வரையறுக்கப்பட்ட சம்பத் வங்கி குருணாகல், கொழும்பு, கம்பகா மாவட்டங்களில் சீன இஞ்சி, அன்னாசி, பசன் பழம் என்பவற்றின் பயிர்ச்செய்கைக்கான கொடுகடன் திட்டத்தில் இணைந்தது. 1989 இல் செயற்றிட்டக் காலப்பகுதியைப் பூர்த்தி செய்து காலாவதியாவதற்கு அட்டவணையிடப்பட்ட மூன்று கொடுகடன் திட்டங்கள் இத்திட்டத்தின்கீழ்க் வங்கிகள் கொடுகடனை தொடர்ந்து வழங்குவதனை உறுதி செய்யும் பொருட்டு மேலும் ஒரு காலப்பகுதிக்கு நீடிக்கப்பட்டது.

1989 இல் தொழிற்பாட்டிற்கு வந்த புதிய திட்டத்துடன் 19 நடுத்தர நீண்டகாலக் கொடுகடன் திட்டங்கள் தொழிற்பாட்டில் இருந்தன. இவை நடுத்தர நீண்டகாலக் கொடுகடன் நிதியத்தில் இருந்தான மொத்த ஒதுக்குகளான ரூ. 7,770 இலட்சத்தையும் கொண்டிருந்தன. முன்னைய ஆண்டில் இத்திட்டங்களின் கீழ் பயன்படுத்தப்பட்ட மொத்தத் தொகையான ரூ. 1,130 இலட்சத்துடன் ஒப்பிடுகையில் 1989 இல் இத்தொகை ரூ. 625 இலட்சமாக விளங்கி 45 சதவீத வீழ்ச்சியை எடுத்துக் காட்டியது. இவ்வீழ்ச்சிக்கான முதற் காரணமாக நாட்டின் பல பகுதிகளில் நிலவிய குழப்ப நிலைகள் விளங்கின. செவனகல, இங்குராகன, கந்தளாய் சீனி செயற்றிட்டங்களின் பயிர்ச்செய்கைக்குச் சிறிய வேளாண்மையாளர்களுக்கு உதவியளிப்பதற்கு ஏற்படுத்தப்பட்ட கொடுகடன் திட்டத்தின்கீழ் ஆகக்கூடிய மீள் நிதியிடலின் அளவான ரூ. 200 இலட்சம் பயன்படுத்தப்பட்டது.

பன்னாட்டு அமைப்புகளிலிருந்து பெற்ற நிதியங்களின் மூலம் நடுத்தர நீண்டகாலக் கொடுகடனை வழங்கிய 9 திட்டங்கள் 1989 இல் தொழிற்பாட்டிலிருந்தன. இவற்றில் சிறு உடைமையாளர் தேயிலை அபிவிருத்திச் செயற்றிட்டம், மத்திய நிலத்தில் நீண்டகாலப் பயிர் அபிவிருத்திச் செயற்றிட்டம், சிறிய வேளாண்மையாளர், நிலமற்றோர் கொடுகடன் செயற்றிட்டம் என்பன 1989 இன் இறுதிக் காலாண்டில் தொழிற்பாடுகளை ஆரம்பித்தன. இவ் 9 திட்டங்களின் கீழ் ஆண்டின் ஆரம்பத்தில் கடன் வழங்கலுக்கு கிடைக்கத்தக்கதாக இருந்த நிதியங்களின் மொத்த ஒதுக்கு ரூ. 17,400 இலட்சமாக விளங்கியது. இத்திட்டத்தின் கீழ் மொத்த ஒதுக்கில் ரூ. 111.இலட்சம் அல்லது 0.6 சதவீதம் மட்டுமே 1989 இல் பயன்படுத்தப்பட்டது.

சிறிய வேளாண்மையாளர், நிலமற்றோர் கொடுகடன் செயற்றிட்டத்திற்காக மத்திய வங்கியால் நியமிக்கப்பட்ட நிறைவேற்று முகவர் அதன் தொழிற்பாடுகளை ஆய்விற்குரிய ஆண்டில் ஆரம்பித்தனர். இச் செயற்றிட்டம் கண்டி, புத்தளம், காலி, மாத்தறை ஆகிய நான்கு தேர்ந்தெடுக்கப்பட்ட மாவட்டங்களில் கிட்டத்தட்ட 32,870 நன்மைபெறும் குடியிருப்பாளர்களின் கிராமிய வறுமை ஒழிப்பினை நோக்கமாகக் கொண்டுள்ளது. இச்செயற்றிட்டத்தின் நோக்கம் கிராமிய வறிய மக்களில் நன்மைபெறும் குழுவினருக்கு அவர்களது குறுங்கால, நீண்டகாலக் கொடுகடன் தேவைகளை ஈடுசெய்வதற்காகச் சிறிய அளவு பிணையுடன் அல்லது முற்றாகப் பிணையின்றியே கடன் பெறுவதற்கு ஏற்ற வகையிலான செலவுத் தாக்க முறையில் கொடுகடன் வழங்குவதைக் கட்டியெழுப்புவதாகும். இத்திட்டம், கிராமிய அடிப்படையில் வருமானத்தைப் பெருக்கும் தொழிற்பாடுகளில் பெண்களின் பங்கைக் கூடிய அளவிற்கு உற்சாகப்படுத்துவதற்கும், கிராமிய மட்டத்தில் மீள் முதலீட்டிற்காகக் கிராமிய சேமிப்புகளைக் கூடிய அளவு திரட்டுவதற்கும் ஊக்குவிப்புக்களை வழங்குவதனை நோக்கமாகக் கொண்டிருந்தது. இத்திட்டத்தின் கீழ்ப் புத்தளத்திலுள்ள மாவட்ட அலுவலகம் 1989 திசெம்பரில் ஆரம்ப வேலைகளைத் தொடங்கியது.

**கூட்டுறவு கிராமிய வங்கிகளின் கொடுகடன் வசதிகள் ***

தொழிற்பாட்டிலிருந்த கூட்டுறவு கிராமியவங்கிகளின் எண்ணிக்கை 1976 இன் உச்ச எண்ணிக்கையான 345 இலிருந்து வீழ்ச்சியடைந்த பின்னர் 1987 இலிருந்து, 282 ஆக மாற்றமுறாது தொடர்ந்து விளங்கியது. இவ்வீழ்ச்சியை ஈடுசெய்யும் வகையில் கூட்டுறவு கிராமிய வங்கிகளின் சிறப்புக் கிளைகளின் மொத்த எண்ணிக்கை 1976 இலிருந்து உறுதியாக அதிகரித்து 1989 இறுதியில் மொத்தமாக 702 ஆக விளங்கியது. 1989 இல் தொழிற்பாட்டிற்கு வந்த புதிய சிறப்பு கிளைகளின் எண்ணிக்கை 14 ஆக விளங்கியது.

1989 இல் கூட்டுறவு கிராமிய வங்கிகளால் வழங்கப்பட்ட கடன்களின் மொத்தத் தொகை ரூ. 2,390 இலட்சமாக விளங்கி முன்னைய ஆண்டின் தொகையைவிட 73 சதவீதம் கொண்ட வரவேற்கத்தக்க அதிகரிப்பைக் காட்டியது. இது 1988 இல் எடுத்துக்காட்டப்பட்ட போக்கிற்கு எதிர்மாறானதாகும். முன்னைய ஆண்டைப் போலவே கூட்டுறவுக் கிராமிய வங்கிகளால் வழங்கப்பட்ட கடன்களின் கூடிய தொகை வீடமைப்பு, மின் வழங்கல், நீர் வழங்கல் என்பவற்

* 1971 இலிருந்து கிராமிய வங்கிகள் கூட்டுறவுக் கிராமிய வங்கிகளென அழைக்கப்படுகின்றன.

# அட்டவணை 1.66

## வைப்புக்களும் முற்பணங்களும்—கிராமியத்துறை*

(ரூ. '000)

| | கூட்டுறவு கிராமிய வங்கிகள் | | வேளாண்மைப் பணி நிலையங்களிலுள்ள இலங்கை வங்கியின் துணை அலுவலகங்கள் | | பிரதேச கிராமிய அபிவிருத்தி வங்கி | | சிக்கன, கொடுகடன் கூட்டுறவுச் சங்கங்கள் | |
|---|---|---|---|---|---|---|---|---|
| | 1988 | 1989 | 1988 | 1989 | 1988 | 1989(அ) | 1988 | 1989 |
| 1. மொத்தச் சேமிப்புகள் ... ... | 1,908,360 | 2,211,886 | 180,411 | 203,861 | 103,452 | 159,560 | 388,000 | 418,000 |
| 1.1 சேமிப்புகள் ... ... | 1,713,158 | 2,022,767 | 146,398 | 162,859 | 89,521 | 140,238 | வி.கி. | வி.கி. |
| 1.2 சிறப்புச் சேமிப்புகள் ... ... | — | — | 14,429 | 15,561 | — | — | வி.கி. | வி.கி. |
| 1.3 நிலையான வைப்புக்கள் ... | 195,202 | 189,119 | 19,584 | 25,441 | 13,931 | 19,322 | வி.கி. | வி.கி. |
| 2. வழங்கப்பட்ட மொத்தக் கடன்கள்** ... | 138,300 | 238,726 | 11,128 | 22,512 | 112,753 | 135,027 | 413,300 | 416,000 |
| 2.1 வேளாண்மை ... ... | 10,000 | 25,785 | 8,613 | 14,140 | 47,273 | 66,852 | வி.கி. | வி.கி. |
| 2.2 விலங்கு வளர்ப்பு ... ... | 6,400 | 7,112 | 05 | 87 | 5,995 | 12,330 | வி.கி. | வி.கி. |
| 2.3 மீன்பிடி ... ... | — | — | — | — | 3,727 | 3,871 | வி.கி. | வி.கி. |
| 2.4 சிறு கைத்தொழில்கள் ... | 4,400 | 10,746 | 350 | 38 | 23,846 | 17,613 | வி.கி. | வி.கி. |
| 2.5 வீடமைப்பு, மின்னூட்டல் நீர் வழங்கள் ... | 84,100 | 136,697 | 173 | 598 | — | — | வி.கி. | வி.கி. |
| 2.6 ஏனையவை ... ... | 33,400 | 58,386 | 1,987 | 7,649 | 31,912 | 34,361 | வி.கி. | வி.கி. |

* கிராமியப் பகுதிகளிலுள்ள மக்கள் வங்கியினதும் இலங்கை வங்கியினதும் கிளைகள் மீதான நிலுவைகள் நீங்கலாக.

** இவ்வாண்டில் வழங்கப்பட்ட கடன்களின் மொத்தப் பெறுமதி,

(அ) களுத்துறை, மாத்தறை, அநுராதபுரம், அம்பாந்தோட்டை, புத்தளம், காலி, நுவரெலியா என்பன தொடர்பான 4ஆம் காலாண்டிற்கான மதிப்பிடப்பட்ட தரவுகளையும் உள்ளடக்கும்.

வி. கி. விபரம் கிடைக்கவில்லை.

மூலங்கள்: மக்கள் வங்கி.
இலங்கை வங்கி.
பிரதேச கிராமிய அபிவிருத்தி வங்கிகள்.
சிக்கன கொடுகடன், கூட்டுறவுச் சங்கங்கள்.

றிற்கானதாக இருந்ததுடன், இவை வழங்கப்பட்ட மொத்தக் கடனின் 57 சத வீதத்திற்கு வகை கூறின. 1989 இல் வேளாண்மைக்கு வழங்கப்பட்ட மொத்தத் தொகை ரூ. 260 இலட்சமாக விளங்கி முன்னைய ஆண்டின் ஒத்த எண் தொகை யினைவிட 157 சதவீதங் கொண்ட கணிசமான ஒரு அதிகரிப்பைப் பதிவுசெய்தது. கூட்டுறவுக் கிராமிய வங்கிகளுக்குப் புதிய அனைத்தையும் உள்ளடக்கிய கிராமியக் கொடுகடன் திட்டத்தின் கீழ்ப் பயிர்ச்செய்கைக் கடன்களாக மத்திய வங்கியால் ஒப்புதலளிக்கப்பட்ட மீள் நிதியிடலின் மொத்தத் தொகை ரூ. 37 இலட்சமாக விளங்கியதுடன், இக் கடன்களின் பெரும்பகுதி வேளாண்மை நோக்கங்களுக்காகக் கூட்டுறவு கிராமிய வங்கிகளால் அவற்றின் சொந்த நிதியங்களிலிருந்து வழங்கப் பட்டன.

சனசக்தி நிகழ்ச்சித் திட்டத்தின் நடைமுறைப்படுத்தலுடன் கிராமப் பிர தேசங்களில் வறுமை ஒழிப்புக்கு முக்கியத்துவம் வழங்கும் பல சிறப்புக் கொடு கடன் திட்டங்கள் காணப்பட்டன. இவை வர்த்தக வங்கிகளால் அறிமுகப் படுத்தப்பட்டதுடன் பரந்த அளவிலான தொழிற்பாடுகளுக்கு நிதி வசதிகளும் வழங்கப்பட்டன. அவற்றுள் ஆகக்கூடிய அளவு கடன்கள் மக்கள் கடன் முன் னோடித் திட்டத்தின் கீழ் இரண்டு அரசதுறை வங்கிகளால் 1989 இல் வழங்கப் பட்டன.

**வேளாண்மைக் காப்புறுதிச் சபை**

முன்னைய ஆண்டில் அவதானிக்கப்பட்ட வீழ்ச்சியடைந்த போக்கைத் தொடர்ந்து வேளாண்மை காப்புறுதிச் சபையால் காப்புறுதி செய்யப்பட்டுள்ள மொத்தப் பரப்பளவு முன்னைய ஆண்டின் 53,000 எக்டேயர்களிலிருந்து 35,000 ஏக்டேயர்களுக்கு மேலும் வீழ்ச்சியடைந்தது. இவ்வீழ்ச்சியானது, இவ்வாண்டில் பயிர்ச்செய்கையின் கீழான மொத்தப் பரப்பளவு 56,000 எக்டேயர்களால் அதிகரித்தமையின் பின்னணியில் நோக்கப்படவேண்டியதாகும். 1989 இல் காப் புறுதியின் கீழான பரப்பளவில் ஏற்பட்ட வீழ்ச்சி, வங்கித்தொழில் முறையால் நிதியிடப்பட்ட பரப்பளவு வீழ்ச்சியடைந்தமையால் ஏற்பட்டதாகும். வேளாண் மைக் கொடுகடனைப் பொறுத்தமட்டில் வேளாண்மைக் காப்புறுதிச் சபையின் செயலாற்றம் வங்கித்தொழில் முறையின் செயலாற்றத்தை நெருக்கமாகப் பின் தொடர்கிறது. இதேவேளையில் காப்புறுதி செய்யப்பட்ட பரப்பளவு குறை வடைந்தமையுடன் ஒத்தவகையில் 1989 இல் சேகரிக்கப்பட்ட கட்டணத்தின் மொத்தப் பெறுமதி ரூ. 93 இலட்சமாக விளங்கி முன்னைய ஆண்டைவிட 40 சதவீதம் குறைந்திருந்தது. 1989 இல் வேளாண்மைக் காப்புறுதிச் சபையால் செலுத்தப்பட்ட இழப்பீட்டுத் தொகை ரூ. 99 இலட்சமாக விளங்கியது. இது 1983 இலிருந்து பதிவு செய்யப்பட்ட தொகையில் மிகக் குறைவானதாகும். எனினும் 6 வருடங்களின் பின்பு முதற்றடவையாக 1989 சிறுபோகத்தில் கட்டணத்தின் பெறுமதி, செலுத்தப்பட்ட இழப்பீட்டுத் தொகையின் பெறுமதியை ரூ. 9 இலட்சத்தால் விஞ்சியிருந்தது.

**கிராமிய சேமிப்புக்களின் திரட்டல்**

1989 இல் கூட்டுறவுக் கிராமிய வங்கிகள் வேளாண்மைப் பணி நிலையத்திலுள்ள இலங்கை வங்கி துணை அலுவலகங்கள், பிரதேச கிராமிய அபிவிருத்தி வங்கிகள், சிக்கனக் கொடுகடன் கூட்டுறவுச் சங்கங்கள் என்பவற்றால் திரட்டப்பட்ட கிராமிய சேமிப்புக்களின் வெளிநின்ற பெறுமதி ரூ. 29,930 இலட்சமாக விளங்கி முன்னைய ஆண்டைவிட ரூ. 4,130 இலட்சம் அல்லது 16 சதவீத அதிகரிப்பைப் பதிவு செய்தது. இச் சாதகமான அபிவிருத்திகளுக்கு, சேமிப்புக்கள் மீதான கவர்ச்சிகரமான வட்டி வீதங்கள், கிராமப் பகுதிகளில் வங்கி நிறுவனங்களின் விரிவாக்கம், புதிய சேமிப்புக்கள் திட்டங்களின் அறிமுகம், இவ்வாண்டில் கிராம ரீதியிலான தொழிற்பாடுகளில் காணப்பட்ட எழுச்சி என்பன பங்களிப்புக் காரணிகளாக விளங்கின. இம் மொத்தச் சேமிப்புக்களில் ரூ. 22,120 இலட்சம் அல்லது 74 சதவீதம் கூட்டுறவு கிராமிய வங்கிகளிடம் இருந்தது. பிரதேச கிராமிய அபிவிருத்தி வங்கிகள் முன்னைய ஆண்டின் மட்டத்தைவிட 54 சதவீதம் கொண்ட கவரத்தக்க அதிகரிப்பைப் பதிவு செய்து, 1989 இன் இறுதியில் ரூ. 1,590 இலட்சத்தை அடைந்தன.

**ஏனைய நிதி நிறுவனங்கள்**

**சேமிப்பு நிறுவனங்கள்**

1989 இன் இறுதியில் தேசிய சேமிப்பு வங்கியினால் திரட்டப்பட்ட வைப்புக்கள் ரூ. 199,550 இலட்சங்களாக விளங்கின. இது முன்னைய ஆண்டில் பதிவு செய்யப்பட்ட 10 சதவீத அதிகரிப்புடன் ஒப்பிடுகையில் 11 சதவீத அதிகரிப்பைப் பிரதிபலித்தது. பிரபல்யப்படுத்தப்பட்ட திறைசேரி உண்டியல்கள் சந்தையிலிருந்து எழுந்த பதிலீட்டு விளைவின் போதும் வைப்புக்களின் இவ் வளர்ச்சி அடையப்பட்டது.

வங்கியின் முதலீடுகள் முக்கியமாக அரச பிணைகளிலும் (ரூ. 166,040 இலட்சம்) திறைசேரி உண்டியல்களிலும் (ரூ. 21,240 இலட்சம்) அமைந்து, இவை இரண்டும் சேர்ந்து மொத்தச் சொத்துக்களில் 96 சதவீதத்திற்கு வகை கூறின. முன்னைய ஆண்டின் வெளிநின்ற மட்டங்களுடன் ஒப்பிடுகையில் 1989 இல் அரச பிணைகளிலான முதலீடுகள் ரூ. 7,190 இலட்சம் கொண்ட வீழ்ச்சியைக் காட்டியிருக்கையில், திறைசேரி உண்டியல்களிலான முதலீடுகள் ரூ. 18,530 இலட்சம் கொண்ட அதிகரிப்பைப் பதிவு செய்தன. இதேவேளையில், தேசிய சேமிப்பு வங்கியினால் தனியார்துறைக்கு வழங்கப்பட்ட கடன்களின் அளவு 1988 இன் ரூ. 1,970 இலட்சத்திலிருந்து 1989 இல் ரூ. 3,420 இலட்சத்திற்கு அதிகரித்தது. ஏனைய கடன்களில் கூடிய பங்கு (8 சதவீதம்) நிலையான வைப்புக்களைப் பிணையாக வைத்து வழங்கப்பட்டது.

இலங்கை காப்புறுதிக் கூட்டுத்தாபனத்தின் தொழிற்பாடுகள், 1989 இல் நாட்டில் நிலவிய குழப்ப நிலைமைகளால் மிகவும் பாதிக்கப்பட்டது. இலங்கை காப்புறுதிக் கூட்டுத்தாபனத்தால் வழங்கப்பட்ட மொத்தக் கடன்கள் 1988 இன் ரூ. 400 இலட்ச அதிகரிப்பிற்கெதிராக 1989 இல் ரூ. 970 இலட்சம் கொண்ட குறிப்பிடத்தக்க வீழ்ச்சியைப் பதிவு செய்தது. வழங்கப்பட்ட கடன்களில் ரூ. 760

இலட்சம் வீடமைப்பு நோக்கங்களுக்காகவும், ரூ. 210 இலட்சம் உணவகச் செயற்றிட்டங்களின் அபிவிருத்திக்கும் வழங்கப்பட்டது. இதேவேளையில் 1989 இல் வெளிநின்ற மொத்தக் கடன்கள் ரூ. 940 இலட்சத்தால் அதிகரித்து ஆண்டின் இறுதியில் ரூ. 12,360 இலட்சமாக விளங்கியது.

முன்னைய ஆண்டைப் போலவே ஊழியர் நம்பிக்கை நிதியத்தின் தொழிற்பாடுகள் 1989 இலும் தொடர்ந்து வளர்ச்சியடைந்தன. இவ்வாண்டில் நிதியத்தினால் பெறப்பட்ட மொத்த உதவுதொகைகள் ரூ. 5,850 இலட்சம் ஆக விளங்குகையில் வட்டி, பங்கிலாபங்கள் உட்பட உறுப்பினர்களின் வெளிநின்ற நிலுவைகள் ரூ. 36,090 இலட்சமாக விளங்கியது. 1988 இற்கான நேரிணையும் எண் தொகைகள் முறையே ரூ. 4,910 இலட்சமும், ரூ. 31,460 இலட்சமும் ஆகும். 1989 இல் நிதியத்தின் மொத்த முதலீடுகள் 24 சதவீதத்தால் ரூ. 35,940 இலட்சத்திற்கு அதிகரித்தன. முதலீட்டின் பெரும் பங்கு 1989 இல் ரூ. 15,780 இலட்ச கணிசமான அதிகரிப்பைப் பதிவு செய்த திறைசேரி உண்டியல்கள் (ரூ. 16,660 இலட்சம்) வடிவில் காணப்பட்டது. இதேவேளையில் வர்த்தக வங்கிகளுடனான வைப்புக்கள் வடிவிலான முதலீடுகள் 1988 இன் ரூ. 10,530 இலட்சத்திலிருந்து 1989 இல் ரூ. 1,960 இலட்சத்திற்கு வீழ்ச்சியடைந்தன. ஊழியர் நம்பிக்கை நிதியத்தின் முதலீட்டுப் பட்டியலில் ஏற்பட்ட மாற்றங்கள் கூடியளவில் திறைசேரி உண்டியல்கள் சந்தையின் கவர்ச்சிகரமான வட்டி வீதங்களைப் பிரதிபலித்தது.

### நீண்டகாலக் கடன் வழங்கல் நிறுவனங்கள்

1989 இல் இலங்கை அபிவிருத்தி நிதிக் கூட்டுத்தாபனத்தின் கடன் வழங்கும் தொழிற்பாடுகளின் முக்கிய பண்பாக நடுத்தரக் காலக் கடன் பட்டியலில் ஏற்பட்ட கணிசமான அதிகரிப்பு விளங்கியது. 1989 இல் இலங்கை அபிவிருத்தி நிதிக் கூட்டுத்தாபனத்தினால் வழங்கப்பட்ட மொத்தக் கடன்கள் ரூ. 1,880 இலட்சத்தால் அல்லது 31 சதவீதத்தால் கணிசமான அளவில் அதிகரித்தன. 1989 இல் இலங்கை அபிவிருத்தி நிதிக் கூட்டுத்தாபனத்திற்கான மூலவளங்களின் உட்பாய்ச்சல் ரூ. 8,930 இலட்சமாக அமைந்ததுடன் இதில் பெரும்பகுதி மூல வளம் வெளிநாட்டுக் கடன்பாடுகளிலிருந்து கிடைத்தது. 1989 இல் ஒப்புதலளிக்கப்பட்ட மொத்தக் கடன்களில் 86 சதவீதமானவை கைத்தொழில் துறையின் அபிவிருத்திக்கானதாகும். பெரும்பாலான கடன்கள் ரூ. 10 இலட்சத்திற்கும் அதிகமான தொகைக்கு வழங்கப்பட்டது. இதேவேளை 1989 இன் இறுதியில் வெளிநின்ற மொத்தக் கடன்கள் ரூ. 20,890 இலட்சத்திற்கு அகதிரித்தன. இலங்கை அபிவிருத்தி நிதிக் கூட்டுத்தாபனத்தின் கடன் வழங்கும் வீதங்கள் 1989 இல் 14 சதவீதத்திற்கும் 19 சதவீதத்திற்கும் இடையே வேறுபட்டன.

வீடமைப்பு நோக்கங்களுக்காக நிதிகளை வழங்குவதில் பிரபல்யமாக அடையாளம் காணப்பட்ட நிறுவனமான அரச ஈட்டு முதலீட்டு வங்கி 1989 இல் நிலவிய குழப்ப நிலைமைகள் காரணமாக மிகவும் பாதிப்பிற்குள்ளானது. இப்பொழுதும் இதன் கடன் வழங்கும் தொழிற்பாடுகள் வீடமைப்பு அபிவிருத்தியை முன்னேற்றுவதற்காக வரையப்பட்டபோதிலும் வீடமைப்பு நோக்கங்களுக்காக ஒப்புதலளிக்கப்பட்ட கடன்கள் 1988 இன் ரூ. 5,620 இலட்சத்திலிருந்து 1989 இல் ரூ. 3,140 இலட்சத்திற்கு வீழ்ச்சியடைந்தன. 1989 இன் இறுதியில் அரச ஈட்டு முதலீட்டு வங்கியின் வெளிநின்ற மொத்தக் கடன்கள் ரூ. 2,670 இலட்சத்தால் ரூ. 23,440 இலட்சத்திற்கு அதிகரித்தன. அரச ஈட்டு முதலீட்டு

வங்கியால் வழங்கப்பட்ட கடன்களில் பெரும்பாலானவை ரூ. 50,000 இற்கும் ரூ. 400,000 இற்கும் இடையில் அமைந்ததுடன் வட்டி வீதங்கள் ஆண்டிற்கு 10–20 சதவீதத்தில் இருந்தன. அரச ஈட்டு முதலீட்டு வங்கியின் மூலவளங்களின் திரட்டல்கள் நிறுவன ரீதியான மூலங்களிலிருந்து நிலையான வைப்புக்கள் வடிவிலும், தொகுதிக் கடன்களை வழங்குவதன் மூலமும் பெறப்பட்டன. நிறுவன ரீதியிலான மூலங்களிலிருந்தான வைப்புக்களின் திரட்டல்கள் ரூ. 1,680 இலட்சமாக விளங்குகையில், தொகுதிக் கடன்கள் ரூ. 3,000 இலட்சம் பெறுமதிக்கு வழங்கப்பட்டன. நாட்டில் நிலவிய உள்நாட்டுக் குழப்பங்களால் கடன்களின் மீளளிப்புக்கள் ஓரளவுக்கு வீழ்ச்சியடைந்தன.

1989 இல் தேசிய அபிவிருத்தி வங்கி ரூ. 13,310 இலட்சம் கொண்ட 165 கடன்களுக்கு ஒப்புதல் அளித்தது. முன்னைய ஆண்டைப் போலவே தேசிய அபிவிருத்தி வங்கியால் ஒப்புதலளிக்கப்பட்ட கடன்களில் பெரும்பாலானவை (79 சதவீதம்) கைத்தொழில் நோக்கங்களுக்குரியவையாகும். தேசிய அபிவிருத்தி வங்கியால் நேரடியாக நிதியிடப்பட்ட செயற்றிட்டங்களில் அநேகமானவை, ரூ. 100 இலட்சத்திற்கும் குறைவாக விளங்கியதுடன் வட்டி வீதங்கள் ஆண்டிற்கு 15–20 சதவீத வீச்சில் இருந்தன. சிறிய நடுத்தர அளவுக் கைத்தொழில் திட்டம் III இன் கீழ், 6 பங்குபற்றும் கொடுகடன் நிறுவனங்களுக்குத் தேசிய அபிவிருத்தி வங்கி ரூ. 4,240 இலட்சம் கொண்டதும், வட்டி வீதம் ஆண்டிற்கு 15–16.5 வீச்சைக் கொண்டதுமான மீள் நிதியிடல் வசதிகளுக்கு ஒப்புதலளித்தது. 1989 இல் தேசிய அபிவிருத்தி வங்கியினால் கொடுகடன் வழங்கப்பட்ட பிரதான கைத்தொழில் வகைகளாக உணவு, பானம், புகையிலை (ரூ. 1,790 இலட்சம்), புடவையும் அணியும் ஆடைகள் (ரூ. 1,110 இலட்சம்), இறப்பர், தோல் உற்பத்தி கள் (ரூ. 1,320 இலட்சம்) உலோகங்கள், இரசாயனங்கள், பொறியியல் (ரூ. 4,580 இலட்சம்), ஏனைய தயாரிப்புகள் (ரூ. 1,720 இலட்சம்) என்பன விளங்கின. தேசிய அபிவிருத்தி வங்கி முதற்றடவையாகக் குத்தகைக்கு நிதியிடலை மேற்கொண்டது. ஆண்டின் இறுதியில் வெளிநின்ற குத்தகை ரூ. 170 இலட்சமாக விளங்கியது. தேசிய அபிவிருத்தி வங்கி நிதிகளின் முக்கிய மூலங்களாக வெளிநாட்டுக் கடன்பாடுகள் விளங்கின.

## நிதிக் கூட்டு நிலையங்கள்

1989 இன் முதல் மூன்று காலாண்டுகளில் நிதிக் கூட்டு நிலையங்களின் மொத்த வியாபாரத்தில் ஏறக்குறைய 72 சதவீதத்தை அடக்கியுள்ள 52 நிதிக் கூட்டு நிலையங்கள் அவற்றின் தொழிற்பாட்டுத் தகவல்களை வழங்கின. பெறப்பட்ட தரவின்படி, இந் நிதிக் கூட்டு நிலையங்களின் மொத்தச் சொத்துக்களும் பொறுப்புக்களும் 1988 இன் இறுதியின் ரூ. 88,460 இலட்சத்துடன் ஒப்பிடுகையில் 1989 செத்தெம்பர் இறுதியில் ரூ. 82,130 இலட்சமாக விளங்கியது. முன்னைய ஆண்டில் அவதானிக்கப்பட்ட போக்கினைத் தொடர்ந்து 1989 இன் மூன்றாம் காலாண்டு இறுதியில் நிதிக் கூட்டு நிலையங்களின் மொத்த வைப்புக்கள் மேலும் 7 சதவீதத்தால் ரூ.50,570 இலட்சத்திற்கு வீழ்ச்சியடைந்தன. இதற்கு திறைசேரி உண்டியல் சந்தையில் கவர்ச்சிகரமான வட்டி வீதங்கள் வழங்கப்பட்டமையும், பொதுவாக நிதிக் கூட்டு நிலையங்களில் பொதுமக்களைப் பொறுத்தவரை நம்பிக்கை குறைந்து காணப்பட்டமையும் காரணங்களாக இருக்கலாம். இதேவேளையில், வர்த்தக வங்கிகள், பங்குடமையாளர்கள், பணிப்பாளர்கள் ஆகியோரிடமிருந்து பெறப்பட்ட கடன்பாடுகள் 31 சதவீதத்தால் வீழ்ச்சியடைந்தன. பலதரப்பட்ட கொடுகடன்காரர்கள் உட்பட்ட ஏனைய பொறுப்புக்கள், உரிமை கோராத பங்கிலாபங்கள், செலுத்தப்பட வேண்டிய வட்டி, வரிக்கான

**நீண்டகால கொடுகடன் நிறுவனங்களினால் ஒப்புதலளிக்கப்பட்டதும்**

| நோக்கம் | இ. அ. நி. கூ | | தே. சே. வ. | | அ. ஈ. மு. வ. | |
|---|---|---|---|---|---|---|
| | 1988 | 1989 | 1988 | 1989 | 1988 | 1989 |
| 1. வேளாண்மை ... | 25.9 | 67.3 | 2.9 | 6.5 | 14.2 | 6.4 |
| (i) பெருந்தோட்டம் ... | 25.9 | 60.3 | 1.3 | 1.1 | 0.6 | 0.9 |
| (ii) உள்நாடு ... | — | — | 1.2 | — | — | — |
| (iii) கால் நடையும் பாற் பண்ணையும் ... | — | — | 0.4 | 5.4 | — | — |
| (iv) மீன்பிடி ... | — | 7.0 | — | — | — | — |
| (v) வேளாண்மை நோக்கங்களுக்கான நிலங்களின் கொள்வனவு ... | — | — | — | — | 13.6 | 5.5 |
| 2. கைத்தொழில் ... | 659.4 | 995.0 | 4.3 | — | — | — |
| (i) பெருந்தோட்டப் பயிர்களின் பொறி முறைப் பதப்படுத்தல் ... | — | — | — | — | — | — |
| (ii) வேளாண்மைப் பயிர்களின் பொறி முறைப் பதப்படுத்தல் ... | — | — | — | — | — | — |
| (iii) பொறியியலும் கட்டட வர்த்தகமும் ... | 15.0 | 14.0 | — | — | — | — |
| (iv) சுரங்கமகழ்தல் ... | 26.0 | 21.8 | — | — | — | — |
| (v) உணவு, குடிபானங்கள், புகையிலை ... | 124.2 | — | — | — | — | — |
| (vi) புடவைகள்அணியும் ஆடைகள் | 41.8 | — | — | — | — | — |
| (vii) இறப்பரும் தோல் உற்பத்திகளும் .. | 60.0 | — | — | — | — | — |
| (viii) உலோகங்கள் இரசாயனங்கள் பொறியியல் ... | 335.2 | 959.2 | — | — | — | — |
| (ix) ஏனைய தயாரிப்புகள் ... | 57.2 | — | 4.3 | — | — | — |
| 3. சுற்றுலா ... | 14.0 | 5.0 | — | — | — | — |
| 4. வர்த்தகம் ... | — | — | 4.5 | 3.0 | 0.3 | — |
| 5. நிதி ... | 31.0 | 28.0 | 30.0 | 105.0 | 2.9 | — |
| (i) நிதி நிறுவனங்களுக்கான கடன்கள் ... | 31.0 | 28.0 | 30.0 | 105.0 | — | — |
| (ii) முதலீட்டுக் கடன்கள் ... | — | — | — | — | — | — |
| (iii) ஏனையவைகள் ... | — | — | — | — | 29 | — |
| 6. வீடமைப்பு ... | — | — | 48.1 | 51.9 | 562.4 | 334.2 |
| (i) வீடுகளின் கொள்வனவு ... | — | — | 8.9 | 10.1 | 154.4 | 77.8 |
| (ii) கட்டடவாக்கம் ... | — | — | 39.2 | 41.8 | 408.0 | 256.4 |
| 7. கடன் மீட்பு ... | — | — | 1.0 | 0.7 | 12.7 | 5.4 |
| 8. ஏனைய கடன்கள் ... | 154.7 | 61.7 | 115.3 | 283.7 | 49.3 | 32.5 |
| மொத்தம் (ஒப்புதலளிக்கப் பட்டவை) ... | 835.0 | 1,157.0 | 206.1 | 450.9 | 642.3 | 378.5 |
| வழங்கப்பட்ட கடன்கள் (1) ... | 599.5 | 788.0 | 196.6 | 447.0 | 496.0 | 444.9 |
| ஒப்புதலளிக்கப்பட்ட மொத்த கடன்களில் வழங்கப்பட்ட கடனின் % .. | 57% | 68% | 95% | 99% | 77% | 117% |
| வெளி நின்ற தொகை ... | 1,745.3 | 2,088.7 | 1,349.5 | 576.9 | 2,077.2 | 2,344.0 |

அட்டவணை 1.67

## வழங்கப்பட்டதுமான கடன்களின் நோக்க அடிப்படையிலான பகுப்பாய்வு

(பத்து இலட்சம் ரூபாய்களில்)

| வீ.அ.நி. கூ. | | தே.அ. வ (2) | | தே.வீ. அ.மே. | | இலங்கை காப்புறுதிக் கூட்டுத்தாபனம் | | மொத்தம் | | ஒப்புதலளிக்கப் பட்ட மொத்தக் கடனின் சதவீதமாக | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| 1988 | 1989 | 1988 | 1989 | 1988 | 1989 | 1988 | 1989 | 1988 | 1989 | 1988 | 1989 |
| — | — | — | 39.2 | — | — | — | — | 43.0 | 119.4 | 1.3 | 3.1 |
| — | — | — | 24.2 | — | — | — | — | 27.8 | 86.5 | 0.8 | 2.2 |
| — | — | — | — | — | — | — | — | 1.2 | — | — | — |
| — | — | — | 8.0 | — | — | — | — | 0.4 | 13.4 | — | 0.3 |
| — | — | — | 7.0 | — | — | — | — | — | 14.0 | — | 0.4 |
| — | — | — | — | — | — | — | — | 13.6 | 5.5 | 0.4 | 0.1 |
| — | — | 808.2 | 1,051.3 | — | — | — | — | 1,471.9 | 2,046.3 | 42.9 | 52.7 |
| — | — | 278.2 | — | — | — | — | — | 278.2 | — | 8.1 | — |
| — | — | — | — | — | — | — | — | — | — | — | — |
| — | — | — | — | — | — | — | — | 15.0 | 14.0 | 0.4 | 0.4 |
| — | — | 2.2 | — | — | — | — | — | 28.2 | 21.8 | 0.8 | 0.6 |
| — | — | 151.6 | 178.7 | — | — | — | — | 275.8 | 178.7 | 8.0 | 4.6 |
| — | — | 90.2 | 110.2 | — | — | — | — | 132.0 | 110.2 | 3.8 | 2.8 |
| — | — | 79.7 | 132.1 | — | — | — | — | 139.7 | 132.1 | 4.1 | 3.4 |
| — | — | 206.3 | 458.2 | — | — | — | — | 541.5 | 1417.4 | 15.8 | 36.5 |
| — | — | — | 172.1 | — | — | — | — | 61.5 | 172.1 | 1.8 | 4.4 |
| — | — | — | 21.4 | — | — | 129.9 | 20.5 | 143.9 | 46.9 | 4.2 | 1.2 |
| — | — | — | — | — | — | — | — | 4.8 | 3.0 | 0.1 | 0.1 |
| — | — | — | 165.4 | — | — | — | — | 83.9 | 298.4 | 2.4 | 7.7 |
| — | — | — | — | — | — | — | — | 61.0 | 133.0 | 1.8 | 3.4 |
| — | — | — | 165.4 | — | — | — | — | — | 165.4 | — | 4.3 |
| — | — | 20.0 | — | — | — | — | — | 22.9 | — | 0.6 | — |
| 30.0 | — | 346.1 | — | 310.8 | 472.0 | 10.5 | 75.5 | 1,051.0 | 933.6 | 30.6 | 24.0 |
| 3.3 | — | — | — | — | 360.0 | 10.5 | 75.5 | 177.1 | 523.4 | 5.2 | 13.5 |
| 26.7 | — | 346.1 | — | 310.8 | 112.0 | — | — | 873.9 | 410.2 | 25.4 | 10.5 |
| — | — | 0.3 | — | — | — | — | — | 14.5 | 6.1 | 0.4 | 0.1 |
| — | — | 249.4 | 53.4 | — | — | 52.3 | — | 621.5 | 431.3 | 18.1 | 11.1 |
| 30.0 | — | 1,078.4 | 1,330.7 | 310.8 | 472.0 | 192.7 | 95.5 | 3,434.5 | 3,885.0 | 100.0 | 100.0 |
| 29.8 | — | 478.9 | 457.9 | 277.9 | 380.0 | 192.7 | 95.5 | 2,281.8 | 2,213.3 | — | — |
| 99% | — | 44% | 34% | 89% | 80% | 100% | 100% | 66% | 57% | — | — |
| 1,155.8 | — | 2,076.1 | 1,984.8 | 221.7 | 265.7 | 1,141.7 | 1,236.2 | 7,738.7 | 8,496.1 | — | — |

மூலம்: இலங்கை மத்திய வங்கி.

குறிப்பு (1) முன்னைய ஆண்டில் ஒப்புதலளிக்கப்பட்டு மீளாய்விற்குரிய ஆண்டில் வழங்கப்பட்ட கடன்களை உள்ளடக்கும்.
(2) மீள நிதியிடல் கடன்கள் மற்றும் பங்கு முதலீடுகள் அடங்கலாக.

ஒதுக்குகள் என்பன 1988 இன் ரூ. 16,990 இலட்சத்திலிருந்து 1989 இன் இரண்டாம் காலாண்டில் ரூ. 6,660 இலட்சங்களுக்கு வீழ்ச்சியடைந்தனவெனினும் இது மூன்றாம் காலாண்டுப் பகுதியில் ரூ. 15,850 இலட்சத்திற்குப் பெருமளவில் அதிகரித்தது. இது பெரும்பாலும் கடுமையான உள்நாட்டுக் குழப்பங்களால் செலுத்தப்படாத தொகைகள் அதிகரித்தமையாலும் மூன்றாம் காலாண்டில் போக்குவரத்துத் தொழிற்பாடுகள் குழப்பமடைந்தமையாலும் ஏற்பட்டதாகும்.

அட்டவணை 1.68

நிதிக் கூட்டு நிலையங்களின் மூலவளங்களினது மூலமும் பயன்பாடும்

(பத்து இலட்சம் ரூபாய்களில்)

| விடயம் | 1988 திசெம்பர் 31 இல் உள்ளபடி | 1989 மாச்சு 31 இல் உள்ளபடி | 1989 யூன் 30 இல் உள்ளபடி | 1989 செத்தெம்பர் 30இல் உள்ளபடி |
|---|---|---|---|---|
| **மூலங்கள்** | | | | |
| 1. மூலதனக் கணக்கு ... ... | 884.6 | 815.7 | 822.4 | 846.9 |
| 2. வைப்புக்கள் ... ... | 5,219.4 | 4,890.2 | 5,092.1 | 5,057.3 |
| 3. கடன்பாடுகள் ... ... | 1,043.9 | 807.9 | 933.1 | 724.3 |
| 4. ஏனைய பொறுப்புக்கள் ... ... | 1,698.5 | 1,452.2 | 665.8 | 1,584.8 |
| மொத்தம் ... ... | 8,846.4 | 7,966.0 | 7,513.4 | 8,213.3 |
| **பயன்பாடுகள்** | | | | |
| 1. வாடகைக் கொள்வனவு வியாபாரம் ... | 2,939.4 | 2,869.6 | 2,951.4 | 3,008.8 |
| 2. வெளிநின்ற கடன்கள் ... ... | 2,863.1 | 1,845.9 | 1,918.8 | 1,901.2 |
| (இதில் குத்தகை) ... ... | (993.4) | (915.7) | (932.3) | (909.4) |
| 3. முதலீடுகள் ... ... | 676.2 | 751.0 | 649.4 | 603.2 |
| 4. ஏனைய சொத்துக்கள் ... ... | 2,367.7 | 2,499.5 | 1,993.8 | 2,700.1 |
| மொத்தம் ... ... | 8,846.4 | 7,966.0 | 7,513.4 | 8,213.3 |
| வங்கிக்குத் தரவுகளை அறிவித்த நிதிக்கூட்டு நிலையங்களின் எண்ணிக்கை ... | 54 | 52 | 52 | 52 |

மூலம் : இலங்கை மத்திய வங்கி.

1989 இல் தவணைக் கொள்வனவுக் கடன் வழங்கலின் வெளிநின்ற பெறுமதி ரூ. 690 இலட்சம் கொண்ட அதிகரிப்பைப் பதிவுசெய்ததுடன் மூன்றாம் காலாண்டு இறுதியில் ரூ. 30,090 இலட்சமாக விளங்கியது. அண்மைக் காலங்களில் குத்தகை வியாபாரம் நிதிக் கூட்டு நிலையங்களின் விரைந்து வளர்ந்துவரும் வியாபாரச் செயற்பாடாக மிளிர்ந்தபோதிலும், குத்தகை மீதான வெளிநின்ற கடன்கள் மூன்றாம் காலாண்டு இறுதியில் ரூ. 9,090 இலட்சத்திற்கு 8 சத வீதத்தால் வீழ்ச்சியடைந்தன. வரி அனுகூலங்கள் காணப்பட்டபோதிலும், குத்தகையில் ஏற்பட்ட வீழ்ச்சிக்கு, இவ்வாண்டின் முதல் ஒன்பது மாதங்களில் அதிகரித்து வந்த உள்நாட்டுக் குழப்பங்கள் காரணமாகக் குத்தகைக்கான கேள்வி குறைவடைந்தமை காரணமாக இருக்கலாம்.

1989 ஏப்பிறலில் இருந்து விதிக்கப்பட்ட திருத்தப்பட்ட திரவத்தன்மைத் தேவைகளின் நியதிகளில், நிதிக் கூட்டு நிலையங்கள் அவற்றின் வைப்புக்கள், பொறுப்புக்களில் குறைந்தது 6 சதவீதத்தினையாவது அரச திறைசேரி உண்டியல் களில் வைத்திருக்க வேண்டும். அத்துடன் கவர்ச்சிகரமான வருமானம் காரண மாக, நிதிக் கூட்டுநிலையங்களுக்கான முதலீட்டின் பிரதான வகையாகத் திறை சேரி உண்டியல்கள் விளங்கின. இதன்படி நிதிக் கூட்டு நிலையங்களால் அரச திறைசேரி உண்டியல்களின் வெளிநின்ற முதலீடுகள் 1988 திசெம்பர் இறுதியின் ரூ. 2,020 இலட்சத்திலிருந்து 1989 செத்தெம்பர் இறுதியில் ரூ. 3,200 இலட் சத்திற்கு அதிகரித்தன.

நிதிக் கூட்டு நிலையங்களின் திரவச் சொத்துக்களின் நிலைமை, இவ்வாண் டில் மேலும் முன்னேற்றம் அடைந்தது. மொத்த வைப்புக்களுக்கு திரவச்சொத் துக்களின் விகிதம் 1988 இன் இறுதியின் 18 சதவீதத்திலிருந்து 1989 செத்தெம் பர் இறுதியில் 19 சதவீதத்திற்கு அதிகரித்தது. பின்னைய விகிதம் மத்திய வங்கி யின் 15 சதவீத வரையறையினைவிடச் சிறிதளவு உயர்வானதாகும். மொத்த வைப்புக்களில் மூலதன ஒதுக்கல்களினதும், பகிர்ந்தளிக்கப்படாத இலாபங்களின தும் விகிதமானது 1988 திசெம்பர் இறுதியில் அவதானிக்கப்பட்ட அதே விகித மான 17 சதவீதத்திலேயே 1989 செத்தெம்பர் இறுதியிலும் விளங்கியது.

இவ்வாண்டில், தற்காலிகத் திரவப் பிரச்சினைகளை எதிர்நோக்கிய 7 நிதிக் கூட்டு நிலையங்களுக்கு மத்திய வங்கி மீள்நிதியிடல் வசதிகளை வழங்கியது. அத்துடன் வைப்பாளர்களுக்கு நிவாரணம் வழங்குவதையும், இறுதியில் அதை புத்தாக்கம் செய்வதையும் நோக்கமாகக் கொண்டு நெருக்கடிகளில் இருந்த ஒரு நிதிக் கூட்டுநிலையம் நாணயச் சபையின் நிருவாகத்தின் கீழ்க் கொண்டு வரப்பட்டது. இக் கூட்டு நிலையங்களில் இரண்டு நாணயச் சபையின் பணிப்பின் கீழ்த் தொழிற்படும் முகாமைக் குழுக்களிடம் கையளிக்கப்பட்டவேளையில், ஒரு கூட்டு நிலையம் புத்தாக்கம் செய்வதற்காக இன்னொரு நிதிக் கூட்டு நிலையத் திடம் ஒப்படைக்கப்பட்டது. அதேவேளை இடர்ப்பாட்டிலுள்ள நிதிக் கூட்டு நிலையங்களின் வைப்பாளர்களுக்கு ஓரளவு நிவாரணத்தை வழங்குகின்ற திட்டத் தின் நடைமுறைப்படுத்தல் தொடர்ந்தும் தொழிற்பாட்டிலிருந்தது.

### மத்திய வங்கித் தொழில்

மத்திய வங்கியின் மொத்தச் சொத்துக்கள்/பொறுப்புக்கள், 1989 இல் ரூ. 74,390 இலட்சத்தால் அல்லது 13 சதவீதத்தால் அதிகரித்து ரூ. 627,700 இலட்சமாக விளங்கின. இது முன்னைய ஆண்டின் ரூ. 98,880 இலட்சம் அல்லது 22 சதவீத அதிகரிப்புடன் ஒப்பிடத்தக்கது.

சொத்துக்கள் பக்கத்தில், மத்திய வங்கியின் பன்னாட்டு ஒதுக்கு (மொத்தம்) ரூ. 23,430 இலட்சம் (31 சதவீதம்) கொண்ட அதிகரிப்பைக் காட்டியதன்மூலம் கடந்த சில ஆண்டுகளாக அவதானிக்கப்பட்டுவந்த போக்கை மாற்றி அமைத்தது. இது வெளிநாட்டிலுள்ள காசு நிலுவைகளிலும், சிஎஉ உடைமைகளிலும் முக்கிய மாகப் பிரதிபலிக்கப்பட்டது. இவை முறையே ரூ. 21,450 இலட்சத்தாலும், ரூ. 4,490 இலட்சத்தாலும் அதிகரித்தன.

கடந்த மூன்று ஆண்டுகளில் பதிவு செய்யப்பட்ட கணிசமான அதிகரிப்புக் களுக்கு முற்றிலும் மாறாக மத்திய வங்கியின் உள்நாட்டுச் சொத்துக்கள் (ஏனைய சொத்துக்களும் கணக்குகளும் தவிர்ந்த) 1989 இல் ரூ. 7,610 இலட்சம் அல்லது 2 சதவீதம் கொண்ட சிறிதளவு அதிகரிப்பை மட்டும் காட்டியது. அரசிற்கான கடன்களும் முற்பணங்களும் அரச, அரச உத்தரவாதப் பிணைகளி லான முதலீடுகளும், 1988 இன் அதிகரிப்பான ரூ. 102,820 இலட்சத்துடன் ஒப்பிடுகையில் 1989 இல் ரூ. 3,020 இலட்சத்தால் மட்டும் அதிகரித்தன. அதேவேளேயில் வர்த்தக வங்கிகளுக்கான குறுகிய காலக் கடன்கள் 1988 இன் ரூ. 2,160 இலட்சத்துடன் ஒப்பிடுகையில் ரூ. 340 இலட்சத்தால் மட்டும் அதிகரித்தன. இத்துடன் இவ்வாண்டில் வழங்கப்பட்ட புதிய மீள்நிதியிடல் வசதி கள் ரூ. 4,590 இலட்சமாக விளங்கின. இது முன்னைய ஆண்டில் வழங்கப்பட்ட ரூ. 3,570 இலட்சத்தைவிட ஒரு சிறிதளவு மட்டுமே அதிகரித்திருந்தது. இதே வேளையில் மத்திய வங்கியின் ஏனைய சொத்துக்களும் கணக்குகளும் 1988 இன் ரூ. 4,510 இலட்ச வீழ்ச்சிக்கெதிராக இவ்வாண்டில் ரூ. 34,340 இலட்சத்தால் அதிகரித்தன.

பொறுப்புக்கள் பக்கத்தில், நாணயப் பொறுப்புக்கள் 1989 இல் ரூ. 23,440 இலட்சத்தால் அதிகரித்தன. சுற்றோட்டத்தில் உள்ள நாணயம் ரூ. 7,550 இலட்சத்தால் அதிகரித்திருக்கையில் வைப்புப் பொறுப்புக்கள் ரூ. 15,900 இலட் சத்தால் அதிகரித்தன. பின்னையது வர்த்தக வங்கிகள் (ரூ. 5,640 இலட்சம்), வெளிநாட்டு அரசுகளும் வெளிநாட்டு வங்கித் தொழில் நிறுவனங்களும் (ரூ. 15,590 இலட்சம்), ஏனைய நிறுவனங்கள் (ரூ. 3,080 இலட்சம்) என்ப வற்றின் வைப்புக்களில் ஏற்பட்ட அதிகரிப்புக்களின் வெளிப்பாடுகளாகும். இதே வேளையில் அரச, அரச முகவர்களினதும் நிறுவனங்களினதும் வைப்புக்கள் ரூ. 8,400 இலட்சத்தால் வீழ்ச்சியடைந்தன. 1989 இல் வெளிநாட்டிலிருந்தான மத்திய வங்கியின் குறுங்காலக் கடன்பாடுகள் ரூ. 24,010 இலட்சத்தால் கணிசமானளவில் அதிகரித்திருக்கையில், மத்திய வங்கியின் ஏனைய பொறுப்புக் களும் ரூ. 27,030 இலட்சத்தால் அதிகரித்தன.

### வட்டி வீதங்கள்

தொடர்ச்சியான பணவீக்கத் தாக்கத்தினைக் கருத்திற்கொள்கையில்வ, ட்டி வீதங்களின் பொதுவான மட்டம் 1989 ஆம் ஆண்டு முழுவதிலும் தொடர்ந்தும் அதிகரித்துக் காணப்பட்டது. சந்தைகளிலான வட்டி வீதங்கள் சந்தை விசை களுக்கு இசைவாக கூடுதலான தளம்பல்களை வெளிக்காட்டின. இது இவ்வாண் டின்ஆரம்பத்திலிருந்த மட்டத்தைவிட, இறுதியில் சற்றுக்கூடிய மட்டத்தினைக் கொண்டிருந்தது. உறுதிப்படுத்தும் நோக்கங்களுக்காக ஏற்படுத்தப்பட்ட சுருக்க நாணயக் கொள்கையின் ஒரு பகுதியாக 1989 யூனில் வங்கி வீதம் 10 சத வீதத்திலிருந்து 14 சதவீதத்திற்கு உயர்த்தப்பட்டது.

**குறுங்கால வீதங்கள்**

முதலாந்தர திறைசேரி உண்டியல் சந்தையில் வட்டி வீதங்கள் கூடியளவில் சந்தையில் தீர்மானிக்கப்படுவதாக விளங்கிவருவதோடு அதிகார பீடங்களின் தலையீடு மிகச் சிறிதாக மட்டுமே இருந்தது. தொடர்ந்துவரும் பணவீக்கத் தாக்கங்களும் வரவு செலவுத்திட்ட நோக்கங்களுக்காக அரசு அதிகளவு நிதியை நாடியமையும் 1989 இன் முதலாம் இரண்டாம் காலாண்டுகளுக்கிடையில் கீழ் நோக்கிய அசைவுக்கான போக்கு இருந்தபோதிலும் இவ்வீதங்கள் தொடர்ந்தும் உயர்ந்திருப்பதற்கு வழியமைத்தன. 12 மாத திறைசேரி உண்டியல்கள் மீதான நிறையேற்றப்பட்ட ஆண்டுச் சராசரி வருவாய் 1988 இறுதியின் 18.8 சத வீதத்திலிருந்து 1989 இறுதியில் 19.1 சதவீதத்திற்கு உயர்வடைந்திருக்கையில், இதே காலப்பகுதியில் 3 மாத திறைசேரி உண்டியல் மீதான நிறையேற்றப்பட்ட ஆண்டுச் சராசரி வருவாய் 19.8 சதவீதத்திலிருந்து 18.1 சதவீதத்திற்கு வீழ்ச்சியடைந்தது. 1988 இன் இறுதியிலான வீதங்களை விட இவ்வாண்டின் இறுதியிலான வீதங்கள் சிறிதளவு குறைவாக விளங்கியபோதிலும் முதலாந்தரத் திறைசேரி உண்டியல் சந்தையின் வீதங்களில் ஏற்பட்ட வேறுபாடுகளுக்கு இசை வாக இரண்டாந்தரத் திறைசேரி உண்டியல் சந்தையின் வட்டி வீதங்கள் அமைந் தன. 1988 இறுதியில் ஆண்டுக்கு முறையே 18 சதவீதமாகவும், 23 சதவீத மாகவும் விளங்கிய கழிவு வீதமும், மீள் கழிவு வீதமும் 1989 இறுதியில் ஆண்டுக்கு முறையே 15.5 சதவீதமாகவும் 20.5 சதவீதமாகவும் விளங்கின.

1989 இல் வங்கிகளுக்கிடையேயான அழைப்புப் பணச்சந்தையின் வட்டி வீதங்கள் 1988 இன் இறுதியில் இருந்த உயர்மட்டங்களின் அளவில் தளம்பல் அடைந்ததுடன் சுருக்க நாணயக் கொள்கை வழிமுறைகள் அறிமுகப்படுத்தப் பட்டதைத் தொடர்ந்து, 1989 இன் மூன்றும் காலாண்டில் உச்ச மட்டத்தை அடைந்தன. 1989 இன் இறுதிக் காலாண்டில் அழைப்புப் பணச்சந்தை வீதங்கள் ஆண்டின் ஆரம்பத்தில் இருந்ததைவிடக் குறைந்த மட்டங்களில் நிலையாக இருந்து ஆண்டின் இறுதியில் ஆண்டிற்கு 13–25 சதவீத வீச்சுக்கிடையில் விளங்கின. 1989 யூனில் வங்கி வீதம் 4 சதவீதப் புள்ளிகளால் 14 சதவீதத்திற்கு அதிகரித்ததன் விளைவாகவும் திறைசேரி உண்டியல்கள் சந்தையில் கூடிய வருவாய் கிடைத்தமையாலும், வர்த்தக வங்கிகளின் வைப்பு வீதங்கள் 1989 இல் அதிகரிக் கும் போக்கைக் கொண்டிருந்தன. 1988 இன் இறுதியில் 12 மாத வைப்புக்கள் மீதான ஆகக் குறைந்த, ஆகக் கூடிய வீதங்கள் ஆண்டிற்கு 9–15.5 சதவீத வீச்சுக்களிலிருந்து 1989 திசெம்பர் இறுதியில் ஆண்டிற்கு 11–20.5 சதவீத வீச்சிற்கு அதிகரித்தன.

தேசிய சேமிப்பு வங்கி வர்த்தக வங்கிகளுடனான அதன் போட்டித் தன்மையைப் பேணுவதற்காக இருவகை வைப்புக்கள் மீதமான அதன் வீதங்களை 1989 ஏப்பிறலில் 2 சதவீதப் புள்ளிகளால் மேல் நோக்கித் திருத்தியது. இதே வேளையில், வைப்புச் சான்றிதழ்களுக்கு வங்கிகளால் வழங்கப்பட்ட வட்டி வீதங்கள் 1988 இன் இறுதியின் ஆண்டிற்கான 8–14.9 சதவீத வீச்சிலிருந்து 1989 இன் இறுதியில் ஆண்டிற்கு 8–21,7 சதவீத வீச்சிற்கு அதிகரித்தன. நிதிக் கூட்டு நிலையங்கள் வைப்புச் சான்றிதழ்களுக்கு வழங்கிய முன்னைய ஆண்டின் 10–18 சதவீத வீச்சிலிருந்து 1989 இல் ஆண்டிற்கு 10–22 சதவீத வீச்சிற்கு ஒரு சிறிய அதிகரிப்பை வழங்கின. நிதிக் கூட்டுநிலையங்களின் 24 மாதங்களுக்குக் குறைந்ததும், 24 மாதங்களுக்கும் கூடியதுமான முதிர்ச்சிக் காலத்தை உடைய வைப்புக்களுக்கான வைப்பு வீதங்கள் மீதான உச்ச வரம்பு 1989 இல் ஆண்டிற்கு முறையே 21 சதவீதமாகவும் 24 சதவீதமாகவும் தொடர்ந்து விளங்கியது.

## வட்டி வீதங்கள்

காலாண்டு இறுதி எண்தொகைகள்




இலங்கை மத்திய வங்கி.

வாராந்த அடிப்படையில் வர்த்தக வங்கிகளின் நிறையேற்றப்பட்ட சராசரி முதன்மைக் கடன் வழங்கும் வீதத்தை மத்திய வங்கி தொடர்ந்தும் வெளியிட்டு வந்தது. ஏனைய வட்டி வீதங்களில் உள்ள போக்குகளைப் போன்றே நிறை யேற்றப்பட்ட சராசரி முதன்மைக் கடன் வழங்கும் வீதமும் அதிகரிக்கும் போக்கினைக் கொண்டிருந்ததுடன் நிதியங்களுக்கான தட்டுப்பாட்டையும் வர்த்தக வங்கி நிதியங்களுக்கான அதிகரித்த செலவினையும் பிரதிபலித்தது. நிறை யேற்றப்பட்ட சராசரி முதன்மைக் கடன் வழங்கும் வீதம் முன்னைய ஆண்டின் ஆண்டிற்கான வீச்சான 13.6–16.9 சதவீதத்துடன் ஒப்பிடுகையில் 1989 இல் ஆண்டிற்கு 16.5–18.1 சதவீத வீச்சுக்கிடையில் தளம்பியது.

**நீண்டகால வீதங்கள்**

இவ்வாண்டில், நடுத்தர நீண்டகால வட்டி வீதங்களிலும் மாற்றங்கள் அவதானிக்கப்பட்டன. ரூபாப் பிணைகள் சந்தையில் அரச பிணைகளின் 9 தொடர்கள் 3 வருடம், 5 – 6 வருடம் ஆகிய இரண்டு முதிர்ச்சி வீச்சுக்களில் வழங்கப்பட்டன. இவ்வழங்கல்கள் 5 – 6 வருட கருவிகளுக்கு 11 – 12 சதவீத குறிப்பிட்ட வீதங்களிலும், 3 வருட கருவிகளுக்கு ஆண்டிற்கு 13 சதவீதத்திலும் சனவரிக்கும் செத்தெம்பருக்குமிடையில் வழங்கப்பட்டன. குறுகிய காலத்திலான பணவீக்க எதிர்பார்ப்புக்களைவிட நடுத்தர கால பணவீக்க எதிர்பார்ப்புக்கள் குறைவாக இருக்கும் என உணரப்பட்டதால் உயர்ந்த வட்டி வீதங்களைக் கொண்டிருக்கும் பிணைகளுக்குக் குறுகிய முதிர்ச்சிக் காலம் நிர்ணயிக்கப்பட்டது.

தேசிய அபிவிருத்தி வங்கி தொடர்ந்தும் அதன் கடன் வழங்கும் வீதங்களைச் சந்தை வட்டி வீதங்களுடன் தொடர்புபடுத்தியது. சிறிய, நடுத்தரக் கைத்தொழில்கள் செயற்றிட்டம் III இன் கீழ் 6 மாதத்திற்கான மீள் நிதியிடல் வீதங்கள் முன்னைய 6 மாத காலப் பகுதிக்கான வர்த்தக வங்கிகளின் சராசரி நிறையேற்றப்பட்ட முதன்மைக் கடன் வழங்கும் வீதத்திலிருந்து 6 சதவீதப் புள்ளிகளைக் கழிப்பதன் மூலம் பெறப்பட்டது. கடன் வழங்கும் நிறுவனங்கள் அவற்றின் தொழிற்பாட்டுச் செலவுகளினதும், செயற்றிட்ட இடர்ப்பாடுகளினதும் அடிப்படையில் தமது சொந்த இலாபங்களைக் கூட்டுவதற்கு அனுமதிக்கப்பட்டன. 1989 இன் இறுதியில் இலங்கை அபிவிருத்தி நிதிக் கூட்டுத்தாபனத்தின் சிறிய, நடுத்தரக் கைத்தொழில் வாடிக்கையாளர்களுக்கான கடன் வழங்கும் வீதம் ஆண்டிற்கு 1988 இன் 14.5 சதவீதத்துடன் ஒப்பிடுகையில் 16.5 சதவீதமாக விளங்கியது. செயற்றிட்டங்களுக்கான நேரடிக் கடன் வழங்கலைப் பொறுத்தமட்டில், முன்னைய 6 மாத காலப்பகுதியிலான சராசரி நிறையேற்றப்பட்ட முதன்மை வீதங்களின் மட்டங்களின் சராசரி வீதத்தினைவிட 4 சதவீதப் புள்ளிகள் குறைவாகத் தேசிய அபிவிருத்தி வங்கியாலும் இலங்கை அபிவிருத்தி நிதிக் கூட்டுத்தாபனத்தினாலும் சராசரி நிறையேற்றப்பட்ட முதன்மை வீதங்கள் நிர்ணயிக்கப்பட்டன. கருவி நிதியிடல், வர்த்தகக் கட்டடங்களின் கட்டடவாக்கத்திற்கான கடன்கள், தொழிற்படு மூலதனம், நிரப்பு நிதி என்பனவற்றிற்குப் பொருந்தத்தக்க கடன் வழங்கும் வீதங்கள் 1989 இல் 15 – 18 சதவீத வீச்சுக்களுக்கிடையில் இருந்தன. இது ஏறக்குறைய 1988 இல் இருந்த அதே மட்டமாகவே விளங்கியது. தேசிய சேமிப்பு வங்கியும், அரச முதலீட்டு வங்கியும் நீண்டகால வீடமைப்புக் கடன்களை ஆண்டிற்கு 13 சதவீதத்திற்கும் 20 சதவீதத்திற்குமிடையிலான வீதங்களில் தொடர்ந்தும் வழங்கி வந்தன.

**நாணயக் கொள்கை**

1988 இல் நிலவிய பணவீக்கத் தாக்கங்களைக் கட்டுப்படுத்தும் பொருட்டு மேலாண்மையாளர்கள் 1989 இல் கட்டுப்பாடான நாணயக் கொள்கையை அதிகரித்தளவில் பின்பற்றுவதற்குக் கடமைப்பட்டுள்ளனர். 1989 இல் நிறை வேற்றப்பட்ட பிரதான கொள்கை வழிமுறைகள், திறைசேரி உண்டியல் சந்தை யில் தொழிற்பாடுகளை மேலும் தீவிரமாக்கல், வங்கி வீதத்தின் மேல் நோக்கிய திருத்தம், தனியார்துறைக்கான வர்த்தக வங்கிக் கொடுகடன் மீதான ஓரளவு கட்டுப்பாடு என்பவற்றை உள்ளடக்கியுள்ளன.

திறந்த சந்தை தொழிற்பாடுகளைப் பொறுத்தமட்டில் முதலாந்தர திறை சேரி உண்டியல் சந்தையில் வாராந்த ஏலங்கள் தொடர்ந்தும் இயங்கியதால், வர்த்தக வங்கிகளினதும் ஏனைய முதலீட்டாளர்களினதும் திரவ நிதியங்களுக்கு ஒரு ஒழுங்கான முதலீட்டு வசதியை வழங்கியது. திறைசேரி உண்டியல் மீதான வட்டி வீதத்தினைத் தீர்மானிப்பதில் சந்தை விசைகள் பிரதிபலிக்கப்படுவதற்கு அனுமதிக்கப்பட்டது. இதனால் 3 மாதத் திறைசேரி உண்டியல்கள் மீதான நிறை யேற்றப்பட்ட சராசரி வருமானம் 1988 இன் இறுதியிலான 19.8 இலிருந்து 1989 யூன் இறுதியில் 15.38 சதவீதத்திற்கு வீழ்ச்சியடைந்தபோதிலும் ஆண்டின் இறுதியில் சிறிய தளம்பல்களுடன் 18.1 சதவீதத்திற்கு அதிகரித்தது. 6 மாத, 12 மாதத் திறைசேரி உண்டியல் மீதான வருமானம் யூனில் முறையே 16.5 சதவீத்திலும், 18.8 சதவீதத்திலும் இருந்து1989 திசெம்பரில் முறையே 18.2 சத வீதத்திற்கும், 19.1 சதவீதத்திற்கும் அதிகரித்தன. இவ்வாண்டில் மத்திய வங்கி யல்லா மூலங்கள் முதலாந்தரத் திறைசேரி உண்டியல் சந்தையில் அவற்றின் பங்காற்றலை அதிகரிப்பதற்குச் செய்தித்தாள் விளம்பரங்கள் மூலமாக உற்சாகப் படுத்தப்பட்டது. 1989 பெப்புருவரியில் வழமையான 3 மாத திறைசேரி உண்டியல்களுடன் 6 மாத, 12 மாத முதிர்ச்சிக்காலப் பகுதிகளை உடைய உண்டியல்களும் சந்தையில் அறிமுகப்படுத்தப்பட்டன. வேறுபடும் முதிர்ச்சிக் காலங்களை உடைய திறைசேரி உண்டியல்களின் கிடைக்கும் தன்மை முதலீட் டாளர்களுக்குச் சிறந்த விருப்புப் பட்டியலை வழங்குமென எதிர்பார்க்கப்பட்ட துடன், இதன்மூலம் பணச்சந்தை மேலும் அபிவிருத்தியடைய உதவியது. இதற் கும் மேலாக 1986 இல் அறிமுகப்படுத்தப்பட்ட ''முன் கூட்டியே தீர்மானிக்கப் பட்ட விலையில் திறைசேரி உண்டியல்களின் விற்பனை முறை'' இன் கீழான திறைசேரி உண்டியல்களின் விற்பனையும் மத்திய வங்கியின் பிரதேச அலுவலகங் களுக்கு வரையறுக்கப்பட்ட திறைசேரி உண்டியல்களின் விற்பனையும், 8 வர்த்தக வங்கிகளையும், 3 பணத் தரகர்களையும் உட்படுத்தும் விதத்தில் விரிவாக்கப் பட்டது. இது திறைசேரி உண்டியல் சந்தைக்கு இலகுவான அணுகுமுறையை விசேடமாக வெளிப் பிரதேசங்களிலான முதலீட்டாளர்களுக்கு வழங்கியதுடன் ஒவ்வொரு வகை திறைசேரி உண்டியல்களின் முன்னைய கிழமைகளில் நிலவிய நிறையேற்றப்பட்ட சராசரி வீதத்தில் அடுத்த கிழமை முதல்தரச் சந்தையில் திறைசேரி உண்டியல்களை வாங்குபவர்கள் முன்கூட்டியே வாங்குவதற்கும் வகை செய்தது.

இரண்டாந்தரத் திறைசேரி உண்டியல்கள் சந்தையில் மத்திய வங்கி அதன் உடைமைகளைத் தீவிரமான விற்பனைகள் மூலம் குறைப்பதற்குப் பெருமுயற்சி எடுத்தது. இது சந்தையில் கழிவு, மீள் கழிவு வீதங்கள், முதலாந்தரத் திறைசேரி உண்டியல் சந்தையின் வருமானத்தின் அசைவைப் பிரதிபலிக்கும் விதத்தில் சீராக்கப்பட்டது. இவ்வாண்டில் கழிவு வீதங்கள் 11.5–18.0 சதவீத வீச்சிற் கிடையில் மாறுபட்டிருக்கையில் மீள் கழிவு வீதங்கள் 15.5–23.0 சதவீத

வீச்சிற்கிடையில் மாறுபட்டன. முதலாந்தரத் திறைசேரி உண்டியல்கள் சந்தையின் விலைக் கேள்வியை முன்னேற்றுவதற்காக முதலாந்தரச் சந்தை வீதத்திலும் பார்க்க இச்சந்தையில் குறைந்த கழிவு வீதம் பேணப்பட்டவேளையில் இச்சந்தையில் மத்தியவங்கியல்லா உடைமையாளர்களால் மத்திய வங்கிக்குச் செய்யப்படும் விற்பனைகளை ஊக்கமிழக்கச் செய்வதற்கு உயர்ந்த மீள் கழிவு வீதம் பயன்படுத்தப்பட்டது. முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் இவ்வாண்டில், இரண்டாந்தரத் திறைசேரி உண்டியல்கள் சந்தையில் மொத்த விற்பனைகள் 15.4 சதவீதத்தால் அதிகரித்தன. இம்மாற்றங்களின் விளைவாக வங்கியல்லாத்துறை வைத்திருக்கும் திறைசேரி உண்டியல்களின் உடைமைகள் 1988 இன் இறுதியின் ரூ. 66,000 இலட்சத்திலிருந்து 1989 இன் இறுதியில் ரூ. 155,000 இலட்சத்திற்கு இரு மடங்கிற்கும் மேலாக அதிகரித்தன. இம் முன்னேற்றமானது வங்கித்துறை வைத்திருக்கவேண்டிய புதிய திறைசேரி உண்டியல்களின் பெறுமதியைக் கட்டுப்படுத்துவதற்கு உதவியது. இதேவேளையில் மத்திய வங்கி வைத்திருக்கும் திறைசேரி உண்டியல் உடைமைகளின் பங்கு 1988 இறுதியில் 73 சதவீதத்திலிருந்து 1989 இன் இறுதியில் 57 சதவீதத்திற்கு குறைக்கப்பட்டது.

1989 இன் நடுப்பகுதியில் மோசமடைந்து வரும் வெளிநாட்டுக் கொடுப்பனவுகளின் பின்னணியில், மூன்று புதிய கொள்கை வழிமுறைகளை மேற்கொள்வதன் மூலம் நாணயக் கொள்கை மேலும் கட்டுப்பாடான ஒரு தன்மையை அடைந்தது. இவை வங்கி வீதத்தில் மேல்நோக்கிய திருத்தம், தனியார்துறைக்கான வர்த்தக வங்கிக் கொடுகடன் மீது பகுதியளவான உச்ச வரம்பு, அத்தியாவசியமற்ற இறக்குமதிகள் மீதான கொடுகடன் பத்திரத்திற்கு எதிராகப் பேணப்படவேண்டிய 100 சதவீத உச்ச வரம்பு என்பவற்றை உள்ளடக்கியிருந்தது.

கொடுகடனிற்கான கேள்வியை ஊக்கமிழக்கச் செய்வதற்கு அண்மைய எதிர்காலங்களில் எந்தப் போக்கில் வட்டி வீதங்கள் அசையவேண்டுமென வர்த்தக வங்கிகளுக்கு ஒரு அறிகுறியை வழங்குவதற்காக, 1989 யூனிலிருந்து வங்கி வீதம் 10 சதவீதத்திலிருந்து 14 சதவீதத்திற்கு உயர்த்தப்பட்டது.

கொடுகடன் விரிவாக்கத்தை மிதப்படுத்தும் நோக்கில் 1989 இன் நடுப்பகுதியில் முன்னுரிமையல்லாத் துறைகளுக்கு வர்த்தக வங்கிக் கடன் மீதான கொடுகடன் மீது பகுதியளவிலான கொடுகடன் உச்ச வரம்பு விதிக்கப்பட்டது. இவ்வாறு, கடன்கள், மேலதிகப் பற்றுக்கள், நிதியிடப்பட்ட இறக்குமதி உண்டியல்கள், உள்நாட்டு உண்டியல்கள் என்பவற்றை உள்ளடக்கிய வர்த்தக வங்கிகளின் வெளிநின்ற முற்பணங்கள் அவற்றின் 1989 மே 31 இன் மட்டத்தை விஞ்சக்கூடாதென அறிவுறுத்தப்பட்டன. எனினும் வேளாண்மை (பயிர்ச்செய்கைக் கடனும், சந்தைப்படுத்தும் கடனும்) கைத்தொழில், ஏற்றுமதி வர்த்தகம், கப்பலேற்றலுக்கு முன்னான ஏற்றுமதி உண்டியல்களை நிதியிடல் என்பவற்றை உள்ளடக்கிய முன்னுரிமைத் துறைகளுக்கான கொடுகடன் வசதிகள் கட்டுப்படுத்தப்படவில்லை. இதற்கும் மேலாக (சிறிய நடுத்தர அளவுக் கைத்தொழில், மக்கள் கடன் முன்னோடித் திட்டம், கிராம ஏற்புத் திட்டம், சுய வேலை வாய்ப்புத் திட்டம்) போன்ற உற்பத்தி நோக்கங்களுக்கான சிறப்புக் கொடுகடன் திட்டங்களின் கீழ் வழங்கப்பட்ட முற்பணங்களுக்கும், நீண்டகாலக் கடன்வழங்கும் நிறுவனங்களுக்கும், அத்தியாவசிய உணவு இறக்குமதிகளுக்கான கூட்டுறவு மொத்த விற்பனை நிறுவனத்திற்கும் இவ் உச்ச வரம்பிலிருந்து விலக்களிக்கப்பட்டது.

இவ் வழிமுறைகளுடன் ஆடம்பர, ஓரளவு ஆடம்பரமான விடயங்களுக்கான கொடுகடன் பத்திரத்திற்கு எதிராகப் பேணப்படவேண்டிய 100 சதவீத வைப்பு உச்ச வரம்பு 1989 யூன் 18 இலிருந்து விதிக்கப்பட்டது. இது அத்தியாவசியம் குறைந்த வகையான இறக்குமதிகளை ஊக்கமிளக்கச் செய்வதன் மூலம் நாட்டின் மோசமடைந்து செல்லும் சென்மதி நிலுவை நிலைமையினைக் கட்டுப்படுத்த உதவும்.

சென்மதி நிலுவைகளும், நாணய நிலைமைகளும் கட்டுப்பாடான நாணயக் கொள்கையைக் கடைப்பிடிக்குமாறு வற்புறுத்தியபோதிலும், பொருளாதாரத்தின் முன்னுரிமைத்துறைகளுக்குக் குறுங்கால, நடுத்தரக்காலக் கடன்வழங்கல்களை ஊக்குவிப்பதற்காக வர்த்தக வங்கிகள், அபிவிருத்தி நிதியிடல் நிறுவனங்கள் என்பவற்றினூடாக உற்பத்தித்துறைகளுக்கு மீள் நிதியிடல் வசதிகளை மத்திய வங்கி தொடர்ந்தும் வழங்கியது. வேறுபட்ட திட்டங்களின் கீழ் வங்கியால் வழங்கப்பட்ட மொத்த வெளிநின்ற மீள் நிதியிடல் 1989 இல் ரூ. 4,580 இலட்சத்தால் விரிவடைந்து ஆண்டின் இறுதியில் ரூ. 43,120 இலட்சத்தை அடைந்தது. ஏற்றுமதிக் கொடுகடன் மீள் நிதியிடல் திட்டத்தின் கீழ் ரூ. 2,060 இலட்சமும், வேளாண்மைக் கொடுகடனின் கீழ் ரூ. 590 இலட்சமும், நிதிக் கூட்டுநிலையங்களின் கீழ் ரூ. 2,530 இலட்சமும், நடுத்தர நீண்டகாலக் கொடுகடன் நிதியத்தின் கீழ் ரூ. 890 இலட்சமும் அதிகரிப்புக்களாகப் பதிவு செய்யப்பட்டன. இதே வேளையில் உத்தரவாத விலைத்திட்டத்தின் கீழ் வழங்கப்பட்ட மீள் நிதியிடல் ரூ. 1,210 இலட்சத்தால் வீழ்ச்சி அடைந்தது. 1989 இறுதியில் ஏற்றுமதிக் கொடுகடன் மீள் நிதியிடல் மீதான வரம்பு, தேயிலை ஏற்றுமதியாளர்களுக்கான ரூ. 4,000 இலட்சம் கொண்ட விசேட மீள் நிதியிடல் வசதியைத் தவிர்த்து ரூ. 16,630 இலட்சமாக விளங்குகையில் நடுத்தர, நீண்டகாலக் கொடுகடன் வசதிகளின் கீழ்க் கிடைக்கக்கூடிய நிதியங்கள் ரூ. 18,750 இலட்சத்தில் மாறாதிருந்தன.

**பணச்சந்தை**

குழப்பமான நிலைகளின் பின்னணியின் மத்தியிலும், பணச்சந்தை நடவடிக்கைகள் 1989 இல் ஓரளவுக்கு வளர்ச்சி அடைந்தன. பணச்சந்தையில் கிடைக்கத்தக்கதாகவுள்ள நிதியங்களின் அளவையும், வட்டி வீதத்தையும் தீர்மானிப்பதில் திறைசேரி உண்டியல் சந்தை முக்கிய பங்கை வகித்தது. திறைசேரி உண்டியல்களின் சந்தையில் கூடியளவு வருமானம் கிடைக்கப்பெறுவதால் வங்கிகளுக்கிடையில் அழைப்புப்பணச்சந்தைகளுக்கான நிதியங்களின் அளவு குறிப்பிடத்தக்களவில் வீழ்ச்சியடைந்ததுடன் அழைப்புச்சந்தை வட்டி வீதத்தில் ஒரு கூடிய அதிகரிப்பினை ஏற்படுத்தியது. இதேவேளையில் இவ்வாண்டு முழுவதும் தொழிற்பாட்டிலிருந்த கடுமையான நாணயக்கட்டுப்பாடுகள் சந்தையிலுள்ள குறுகியகால வட்டி வீதங்கள் மீது தாக்கத்தைப் பேணுவதற்குப் பங்களிப்புச் செய்தன.

**வங்கிகளுக்கிடையிலான அழைப்புப் பணச்சந்தை**

முன்னைய ஆண்டைப்போலவே, 1989 இலும் வங்கிகளுக்கிடையிலான அழைப்புப்பணச்சந்தை நடவடிக்கைகளில் வர்த்தக வங்கிகள் மேலோங்கி நின்றன, இலங்கை வங்கி, மக்கள் வங்கி, இலங்கை வர்த்தக வங்கி, அட்டன் நசனல் வங்கி என்பன சந்தையின் முக்கிய கடன்வழங்குனர்களாக காணப்பட்டன. 1989 சந்தையின் மொத்தப் பரிமாற்றல்கள் முன்னைய ஆண்டின் 25 சதவீத வளர்ச்சியுடன் ஒப்பிடுகையில் சிறிதளவிலான அதிகரிப்பொன்றினை மட்டுமே

காட்டின. எனினும் காலாண்டு அடிப்படையில் நிதித் தொழிற்பாடுகள் குறிப் பிடத்தக்க தளம்பல்களைக் காட்டி முன்னைய ஆண்டின் 5 முதல் 36 சத வீச்சில் காணப்பட்ட அதிகுறைந்த, அதிகூடிய வட்டி வீதத்துடன் ஒப்பிடுகையில் 1989 இல், வீச்சினை 2 முதல் 40 சதவீதம் வரை விரிவடையச் செய்தன.

ஆண்டின் முதலரைப் பகுதியுடன் ஒப்பிடுகையில் அழைப்புப் பணச்சந்தைத் தொழிற்பாடுகள் மூன்றும் காற்பகுதியில் அதிகளவில் அதிகரித்தன. நிதியத்துக் கான அதிகரித்த கேள்வியானது அழைப்புப் பணச்சந்தையின் அதிகூடிய வட்டி வீதத்தினை முதற்காலாண்டின் 24 சதவீதத்திலிருந்து மூன்றாம் காலாண்டில் 40 சதவீதத்திற்கு அதிகரித்தது. இந்தக் காலாண்டில் தீவிரமான உள்நாட்டுக் குழப்பங்களினாலும் வேலைத்தடங்கல்களினாலும் சில வங்கிகளால் எதிர்நோக்கப் பட்ட திரவத்தன்மைத் தடைகளினை மாற்றியமைத்தமையை இது எடுத்துக் காட்டியது.

**திறைசேரி உண்டியல் சந்தை**

(அ) முதலாந்தரத் திறைசேரி உண்டியல் சந்தை

1988 இன் ரூ. 14,200 கோடியுடன் ஒப்பிடுகையில் 1989 இல் முதலாந்தரத் திறைசேரி உண்டியல் சந்தையில் வழங்கப்பட்ட திறைசேரி உண்டியல்ளின் பெறுமதி ரூ. 11,700 கோடியாக விளங்கியது. இந்தக் குறைப்புக்கு 1989 பெப்புருவரியில் அறிமுகப்படுத்தப்பட்ட நீண்டகால முதிர்ச்சியுடைய உண்டியல் களே காரணமாகும். எனினும் வெளிநிற்கும் திறைசேரி உண்டியல்களின் பெறுமதி 31 சதவீதத்தினால் அதிகரித்து 1989 இல் ரூ. 570 கோடியாகக் காணப்பட்டது.

1989 இல் முதலாந்தரத் திறைசேரி உண்டியல் சந்தையில் காணப்பட்ட சிறப்பான பண்பு யாதெனில் வங்கியல்லாத்துறையினால் கொள்வனவு செய்யப் பட்ட திறைசேரி உண்டியல்களின் பெறுமதியிலேற்பட்ட குறிப்பிடத்தக்க அதி கரிப்பேயாகும். முதலாந்தரத் திறைசேரி உண்டியல் சந்தையில் திறைசேரி உண் டியல்களின் அதிகரித்த கேள்விக்குப் பல காரணங்கள் ஏதுவாகின. முதலாவதாகச் சந்தையில் வழங்கப்பட்ட வட்டி வீதமானது வங்கித் தொழில்துறையில் நிலவிய வட்டி வீதங்களுடன் ஒப்பிடுகையில் அதிகளவு கவர்ச்சியானதாகக் காணப்பட்டது. இரண்டாவதாக 6 மாத, 12 மாத முதிர்ச்சிக் காலங்களைக் கொண்ட திறைசேரி உண்டியல்கள் அறிமுகப்படுத்தப்பட்டமை முதலீட்டாளர்களுக்குச் சிறந்த முத லீட்டுப் பட்டியல்களுக்கான விருப்புத் தேர்வை வழங்கியது. மூன்றாவதாக முன்கூட்டியே தீர்மானிக்கப்பட்ட விலை முறையின் கீழான திறைசேரி உண்டியல் விற்பனைகள் 1989 இல் திறைசேரி உண்டியலின் உள்ளடக்கத்தை மேலும் விரிவடையச் செய்தமையால் கொழும்பில் மட்டுமன்றி வெளியூர்களில் உள்ள முதலீட்டாளர்களுக்கும் திறைசேரி உண்டியல் சந்தையில் இலகுவாகப் புகுவதற்கு வழியமைத்துக் கொடுத்தது. வங்கியல்லாத்துறையின் முதலீடுகள் ரூ. 99,400 இலட்சத்தால் அல்லது 146 சதவீதத்தினால் அதிகரித்து ஆண்டின் இறுதியில் ரூ. 167,380 இலட்சத்தினை (முகப்புப் பெறுமதி) எட்டின. இந்த வகையில் முதன்மை முதலீட்டாளர்களாகப் பொறுப்பாண்மை சேமநிதியங்கள் (ரூ. 66,110 இலட்சம்) அரச கூட்டுத்தாபனங்கள் (ரூ. 44,910 இலட்சம்) தனிப்பட்டோர், களரிகள், கூட்டுறவுச் சங்கங்கள், ஏனைய கூட்டுநிலையங்கள் (ரூ. 19,010 இலட்சம்) தேசிய சேமிப்பு வங்கி (ரூ. 23,170 இலட்சம்) தேசிய அபிவிருத்தி வங்கி (ரூ. 2,650 இலட்சம்) என்பன விளங்கின.

அட்டவணை 1.69

## பணச் சந்தைத் தொழிற்பாடுகள் (1987—1989)

பத்து இலட்சம் ரூபாய்களில்

| காலம் | அழைப்புப் பணச் சந்தை | | | முதலாந்தர திறைசேரி உண்டியல் சந்தை | | | | | இரண்டாந்தர திறைசேரி உண்டியல் சந்தை | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | மொத்தக் கடன் வழங்கல் கடன் பாடுகள் | காலமுடிவில் உள்ளபடி வெளிநின்ற தொகை(அ) | வெளிநின்ற மொத்த உண்டியல்கள் | வழங்கப்பட்ட தொகை | ஏற்றுக்கொள்ளப்பட்ட தொகை (கொள்வனவுகள்) | | | | மொத்த விற்பனைகள் | மொத்த கொள்வனவுகள் | காலமுடிவில் வெளிநின்ற நிலைமை |
| | | | | | மத்திய வங்கி | வர்த்தக வங்கிகள் | ஏனையவை | மொத்தம் | | | |
| 1987 1 ஆம் காலாண்டு .. | 31,499 | 796 | 26,750.0 | 26,827.4 | 19,299.0 | 2,361.7 | 5,089.3 | 26,750.0 | 17,561 | 7,680 | 280 |
| 2 ஆம் காலாண்டு .. | 31,137 | 913 | 27,050.0 | 27,050.0 | 17,664.5 | 4,036.3 | 5,349.2 | 27,050.0 | 8,863 | 2,300 | 168 |
| 3 ஆம் காலாண்டு .. | 32,365 | 562 | 28,600.0 | 28,600.0 | 19,973.7 | 4,507.6 | 4,118.7 | 28,600.0 | 11,476 | 5,321 | 1,308 |
| 4 ஆம் காலாண்டு .. | 37,336 | 1,076 | 29,850.0 | 29,850.0 | 22,288.1 | 3,334.6 | 4,227.3 | 29,850.0 | 11,257 | 7,880 | 312 |
| 1988 1 ஆம் காலாண்டு .. | 50,035 | 1,837 | 28,700.0 | 30,200.0 | 22,131.0 | 3,659.0 | 4,410.0 | 30,200.0 | 16,413 | 5,733 | 233 |
| 2 ஆம் காலாண்டு .. | 33,592 | 847 | 31,700.0 | 30,200.0 | 22,138.1 | 3,584.3 | 4,477.6 | 30,200.0 | 13,575 | 6,703 | 179 |
| 3 ஆம் காலாண்டு .. | 48,120 | 917 | 36,200.0 | 38,700.0 | 26,751.9 | 4,730.1 | 7,218.0 | 38,700.0 | 13,486 | 7,029 | 326 |
| 4 ஆம் காலாண்டு .. | 33,482 | 726 | 43,700.0 | 42,700.0 | 32,269.7 | 3,524.7 | 6,905.6 | 42,700.0 | 17,865 | 5,868 | 1,516 |
| 1989 1 ஆம் காலாண்டு .. | 34,087 | 885 | 47,700.0 | 47,700.0 | 33,668.1 | 4,814.8 | 9,217.1 | 47,700.0 | 27,355 | 6,405 | 472 |
| 2 ஆம் காலாண்டு .. | 38,885 | 1,178 | 50,322.4 | 25,164.7 | 15,255.9 | 2,499.0 | 7,409.8 | 25,164.7 | 12,258 | 6,507 | 698 |
| 3 ஆம் காலாண்டு .. | 54,085 | 908 | 54,745.8 | 25,211.8 | 17,088.1 | 2,989.0 | 5,134.7 | 25,211.8 | 15,582 | 5,346 | 717 |
| 4 ஆம் காலாண்டு .. | 37,051 | 790 | 57,245.8 | 19,234.5 | 11,490.6 | 3,554.2 | 4,189.7 | 19,234.5 | 15,960 | 4,991 | 713 |

மூலம்- இலங்கை மத்திய வங்கி.

(அ) ஒவ்வொரு காலாண்டினதும் இறுதிவார முடிவிலுள்ளவாறான வெளிநின்ற தொகை.

1989 இல் முதலாந்தரத் திறைசேரி உண்டியல் சந்தையில் வர்த்தக வங்கிகளின் முதலீடுகள் ரூ. 27,570 இலட்சத்தினால் அல்லது 78 சதவீதத்தினால் வளர்ச்சியடைந்தன. இதே வேளையில் மத்திய வங்கியின் முதலீடுகள் 2 சத வீதத்தினால் மட்டுமே அதிகரித்து 1989 இல் ரூ. 340,980 இலட்சமாக விளங்கி அதன் மொத்தப் பங்கினை 76 சதவீதத்திலிருந்து 60 சதவீதத்திற்குக் கடுமையாகக் குறைத்துக் கொண்டது.

மத்திய வங்கி 1989 நவெம்பர் 6 தொடக்கம் அதிகாரமளிக்கப்பட்ட வர்த்தக வங்கிகள் மூலமாகவும், பணத்தரகர்கள் மூலமாகவும் முன்கூட்டியே தீர்மானிக்கப்பட்ட விலை முறையின்கீழ் பொதுமக்களுக்கான திறைசேரி உண்டியல் விற்பனையை நீடித்தது. இது மத்திய வங்கியின் பிரதேச அலுவலகங்களினால் முன்கூட்டியே தீர்மானிக்கப்பட்ட விலை முறையின் கீழ் விற்பனை செய்யப்பட்ட திறைசேரி உண்டியல்களுடன் மேலதிகமானதாகும். முன்கூட்டியே தீர்மானிக்கப்பட்ட விலை முறையினை நீடித்ததன் முக்கிய நோக்கம் திறைசேரி உண்டியல்களில் முதலிடுவோருக்குக் கிடைக்கத்தக்க வசதிகளை அதிகரிப்பதாகும். முன்கூட்டியே தீர்மானிக்கப்பட்ட விலை முறையின் கீழ் பிரதேச அலுவலகங்களினால் விற்பனை செய்யப்பட்ட திறைசேரி உண்டியல்களின் மொத்தத் தொகை 1988 இன் ரூ. 11,790 இலட்சத்துடன் ஒப்பிடுகையில் 1989 இல் ரூ. 57,200 இலட்சத்திற்குக் கணிசமான அளவில் அதிகரித்தது.

மத்திய வங்கியல்லாத முதலீட்டாளர்களினால் செய்யப்பட்ட கொள்வனவைப் பொறுத்தவரை முதலாந்தரத் திறைசேரி உண்டியல் சந்தையில் நிறையேற்றப்பட்ட சராசரி இலாபம் ஆண்டொன்றுக்கு 12 சதவீதத்திற்கும் 19.4 சதவீதத்திற்குமிடையிலான வீச்சில் காணப்பட்டது. இதேவேளையில் ஆய்வுக்குரிய இவ்வாண்டில் மத்திய வங்கியினால் தீர்மானிக்கப்பட்ட சராசரி வீதமொன்றில் திறைசேரி உண்டியல்களின் கொள்வனவை மத்திய வங்கி தொடர்ந்தும் மேற்கொண்டது.

(ஆ) இரண்டாந்தர திறைசேரி உண்டியல் சந்தை

1989 இல் இரண்டாம் தரத் திறைசேரி உண்டியல் சந்தையின் தொழிற்பாடுகள் அதிகளவு மாற்றத்திற்குள்ளாகின. அதில் கொள்வனவுகள் சுருக்கமடைந்த வேளையில் விற்பனவுகள் அதிகரித்து ஆய்விற்குரிய ஆண்டில் உண்டியல்களின் பெருமளவிலான தேறிய வெளிப்பாய்ச்சலுக்கு உதவின. 1988 இல் ரூ. 613,390 இலட்சமாக விளங்கிய மொத்த ஆண்டு விற்பனவுகள் 1989 இல் ரூ. 711,550 இலட்சத்திற்கு அதிகரித்தன. இதேவேளையில் மொத்தக் கொள்வனவுகள் ரூ. 253,330 இலட்சத்திலிருந்து ரூ. 232,490 இலட்சத்திற்கு வீழ்ச்சியடைந்தன. தற்காலிக திரவ நிலுவைகளை வைப்புச் செய்வதற்கான வழியாக இச்சந்தையை முதலீட்டாளர்கள் தீவிரமாகப் பயன்படுத்தியதை இது எடுத்துக்காட்டுவதாக உள்ளது.

முன்னைய ஆண்டைப்போலவே இரண்டாம் தரத் திறைசேரி உண்டியல் சந்தையின் முதன்மைக் கொள்வனவாளர்களாக வர்த்தக வங்கிகள் காணப்பட்டன. ஏனைய முக்கிய பங்குபற்றுநர்களாகத் தேசிய அபிவிருத்தி வங்கி, தேசிய சேமிப்பு வங்கி, இலங்கை அபிவிருத்தி நிதிக் கூட்டுத்தாபனம், ஊழியர் சேம நிதியம் என்பன விளங்கின.

திறைசேரி உண்டியல்களின் கொள்வனவு வீதம் (மீள் கழிவு வீதம்) 1988 இன் இறுதிக் காலாண்டின் ஆண்டொன்றுக்கு 22.5–23.0 சதவீத வீச்சுடன் ஒப்பிடுகையில் 1989 இன் நான்காம் காலாண்டில் 18.0–20.75 இடையிலான வீச்சில் காணப்பட்டது. இதே வேளையில் 1988 இன் இறுதிக் காலாண்டில் ஆண்டொன்றுக்கு 16.5–18.00 சதவீத வீச்சில் காணப்பட்ட விற்பனை வீதம் (கழிவு வீதம்) 1989 இன் இறுதிக் காலாண்டில் 13.0–15.75 இடையிலான வீச்சிற்கு வீழ்ச்சியுற்றது. இரண்டாந்தரத் திறைசேரி உண்டியல் சந்தையில் மத்திய வங்கிக்கான விற்பனையை ஊக்கமிழக்கச் செய்யும் பொருட்டுக் கழிவு வீதத்துக்கும் மீள் கழிவு வீதத்திற்குமிடையில் கணிசமான வேறுபாடொன்று பேணப்பட்டது.

## உள்நாட்டில் வெளிநாட்டுச் செலாவணிச் சந்தை

வர்த்தக வங்கிகளுடனான நடவடிக்கைகளின் பொருட்டு மத்திய வங்கியினால் முன்னதாகவே தீர்மானிக்கப்பட்ட வீதங்களில் இலங்கை ரூபாவுக்கெதிராக ஐக்கிய அமெரிக்க டொலர்களை விற்பனை செய்வதன் மூலம் மத்திய வங்கி உள்நாட்டின் வெளிநாட்டுச் செலாவணிச் சந்தையில் தொடர்ந்தும் தலையிட்டது. மத்திய வங்கி வர்த்தக வங்கிகளுடன் நடவடிக்கைகளை மேற்கொள்ளும் போது உடன் கொள்வனவு வீதத்திற்கும் உடன் விற்பனவு வீதத்திற்குமிடையில் ஐக்கிய அமெரிக்க டொலர் ஒன்றுக்கு ஆகக் கூடியது 3 இலங்கைச் சதங்களிலான வீச்சொன்று பேணப்பட்டது. 1989 இன் இறுதியில் ஐக்கிய அமெரிக்க டொலர் ஒன்றுக்கான உடன் கொள்வனவு விற்பனவு வீதங்கள் முறையே ரூ. 39.9850 ஆகவும் ரூ. 40.0150 ஆகவும் காணப்பட்டன.

முன்மாற்றுச் செலாவணி வீதங்களின் சந்தை உறுதிப்பாட்டைப் பேணும் பொருட்டு ஆறு மாதங்கள் வரையிலான முன்மாற்றுக் காப்புடன் சந்தை நிலைமைகளுக்கேற்ப ஐக்கிய அமெரிக்க டொலர்களை விற்பனை செய்வதன் மூலம் மத்திய வங்கி முன்மாற்றுச் சந்தையில் தலையிட்டது. ஆண்டின் இறுதியில் ஒரு மாத முன்மாற்றில் (விருப்பத் தேர்வுடன்) ஐக்கிய அமெரிக்க டொலர் ஒன்றினை உடன் நடுவீதத்திற்குக்கீழ் 50 சதக் கழிவிலும் மூன்று மாத முன்மாற்றில் (இறுதி மாத விருப்புத் தேர்வுடன்) ஐக்கிய அமெரிக்க டொலர் ஒன்றினை உடன் நடுவீதத்திற்குக்கீழ் 1 ரூபா கழிவிலும் மத்திய வங்கி கொள்வனவு செய்தது.

## கரைகடந்த சந்தை

வர்த்தக வங்கிகளின் வெளிநாட்டு நாணய வங்கித்தொழில் பிரிவுகளின் கரைகடந்த வங்கித்தொழில் நடவடிக்கைகள் 1989 இல் அதிகரித்தன. முன்னைய ஆண்டின் இறுதியிலான ரூ. 216,170 இலட்சத்துடன் (ஐ.அ.டொ. 6540 இலட்சம்) ஒப்பிடுகையில் 1989 இல் வெளிநாட்டு நாணய வங்கித்தொழில் பிரிவுகளின் மொத்தச் சொத்துக்கள் பொறுப்புக்கள் ரூ. 292,440 இலட்சங்களாகக் (ஐ.அ. டொலர் 7310 இலட்சம்) காணப்பட்டன. இவ்வாண்டில் ''வதிவற்ற வங்கிகள்'' வகையே வெளிநாட்டு நாணய வங்கித்தொழில் பிரிவுகளினது மொத்த மூலவளங்களில் முதன்மைப் பாங்கினைக் கொண்டிருந்தது, எனினும் வதிவற்ற துறையின் வசமிருந்த மூலவளங்கள் 1988 இன் 57 சதவீதத்திலிருந்து 1989 இல் 55 சதவீதத்திற்கு மேலும் வீழ்ச்சியடைந்தன. முன்னைய ஆண்டைப் போலவே வதிவோர் வகையில் மூலவளங்களை அதிகரித்

துக் கொண்ட முதன்மைத்துறையாக வர்த்தக வங்கித் தொழிற்றுறை விளங்கியது. இது முக்கியமாக வதிவற்றோரினதும், வதிவுள்ள இலங்கையரல்லாதோரினதும் வெளிநாட்டு நாணய வைப்புக்களை வர்த்தக வங்கிகள் வெளிநாட்டு நாணய வங்கித்தொழில் பிரிவுகளில் முதலீடு செய்தமை அதிகரித்தமையால் ஏற்பட்டது. வெளிநாட்டு நாணய வங்கித்தொழில் பிரிவுகளிலிருந்து முக்கிய கடன்பெறுநர்களாக வதிவற்ற வங்கிகளும், கொழும்புப் பெரும்பாகப் பொருளாதார ஆணைக்குழுவின் கீழான தொழில் முயற்சிகளும் காணப்பட்டன. இவ்வாண்டில் இவற்றிற்கான கடன்களும் முற்பணங்களும் முறையே 57 சத வீதத்தினாலும், 32 சதவீதத்தினாலும் அதிகரித்தன.

### பணச் சந்தைக் கருவிகள்

வைப்புச் சான்றிதழ்களும், திறைசேரி உண்டியல்களும் 1989 இல் பயன் படுத்தப்பட்ட முதன்மைச் சந்தைக் கருவிகளாக விளங்கின. உடைமையின் பெயர் குறிப்பிடாத தன்மை, சுதந்திரமாகக் கைமாற்றக்கூடிய தன்மை போன்ற அதன் பண்புகள் காரணமாக நிறுவன ரீதியற்ற முதலீட்டாளர்களுக்கிடையில் வைப்புச் சான்றிதழ்கள் பிரபல்யம் பெற்றுக் காணப்பட்டன. முன்னைய ஆண்டின் ரூ. 24,960 இலட்சத்துடன் ஒப்பிடுகையில் 1989 இன் இறுதியில் வர்த்தக வங்கிகளினாலும், நிதிக் கூட்டுநிலையங்களினாலும் வழங்கப்பட்ட வைப்புச் சான்றிதழ்களின் வெளிநின்ற பெறுமதி ரூ. 23,330 இலட்சமாகக் காணப்பட்டது. இவ்வீழ்ச்சிக்கு 1989 நவெம்பர் முதல் எல்லா வைப்புச் சான்றிதழ்களின்மீதும் விதிக்கப்பட்ட 3 சதவீத முத்திரைத் தீர்வை ஓரளவு காரணமாக அமைந்தது. வர்த்தக வங்கிகள் தொடர்பான வைப்புச் சான்றிதழ்களுக்கான வட்டி வீதங்கள் ஆண்டொன்றுக்கு 8 – 21 சதவீத வீச்சிலும் நிதிக் கூட்டுநிலையங்கள் தொடர்பான வட்டி வீதங்கள் ஆண்டொன்றுக்கு 10 – 22 சதவீத வீச்சிலும் காணப்பட்டன. முன்னைய ஆண்டின் நேரிணையும் வீதங்கள் ஆண்டொன்றுக்கு 8 – 15 ஆகவும் 8 – 18 ஆகவும் காணப்பட்டன.

### மூலதனச் சந்தை

1989 இன் முதல் மூன்று காலாண்டுகளிலும் மூலதனச் சந்தை கடுமையான பின்னடைவைக் கொண்டிருந்ததோடு நான்காம் காலாண்டில் சிறிதளவு மீட்சி பெற்றது. ஆண்டின் மூன்றும் காலாண்டில் உள்நாட்டுக் குழப்பங்கள் தீவிர மடைந்ததுடன், வேலைத் தடங்கல்களும் அதிகரித்தமையால் முதலீட்டாளர்கள் பங்குச் சந்தையைக் கைவிட்டு உடனடியாகப் பணமாக மாற்றக்கூடிய திரவச் சொத்துக்களை அதிகரித்துக்கொள்ள நோக்கங் கொண்டனர். இதன்படி முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் 1989 இல் சந்தையில் மொத்தக் கொடுக்கல் வாங்கல்கள் மூன்றில் ஒரு பங்கினால் வீழ்ச்சியடைந்தன. இதேபோன்று குறைவான வர்த்தக நடவடிக்கைகளைப் பிரதிபலிக்கும் வகையில் சந்தையில் வர்த்தகம் செய்யப்பட்ட பங்குகளின் மொத்தத் தொகையும் 1988 இன் 130 இலட்சத்திலிருந்து 1989 இல் 120 இலட்சத்திற்கு வீழ்ச்சியடைந்தது.

அட்டவணை 1.70

பங்குச் சந்தைக் குறிகாட்டிகள் 1986—1989

| | 1986 | 1987 | 1988 | 1989 |
|---|---|---|---|---|
| சந்தை மூலதன மயமாக்கல் திசெம்பர் 31இல் உள்ளவாறு (ப.இ.ரூ.) ... ... | 12,026 | 18,728 | 15,571 | 17,087 |
| வழங்கப்பட்ட பங்குகளின் மொத்த எண்ணிக்கை திசெம்பர் 31இல் உள்ளவாறு (ப.இ.) ... | 779 | 819 | 919 | 1,048 |
| வழங்கப்பட்ட பங்குகளின் பெறுமதி திசெம்பர் 31இல் உள்ளவாறு (ப.இ.) ... | 7,790 | 8,196 | 9,190 | 10,404 |
| விற்கப்பட்ட பங்குகளின் எண்ணிக்கை (ப.இ.ரூ.) ... ... ... | 6 | 17 | 13 | 12 |
| விற்கப்பட்ட பங்குகளின் பெறுமதி (ப.இ.ரூ.) ... — .. | 142 | 334 | 379 | 255 |
| கொழும்பு பிணையங்கள் பரிவர்த்தனை நிலையத்தின் எல்லாப் பங்குகளினதும் விலைச் சுட்டெண் ஆண்டுச் சராசரி (1985=100) ... ... ... | 136.82 | 177.9 | 170.8 | 176.8 |
| கொழும்பு பிணையங்கள் பரிவர்த்தனை நிலையத்தின் மாறுபடும் விலைக் குறிகாட்டி ஆண்டுச் சராசரி (1985=100) ... ... ... | 257.21 | 305.2 | 269.9 | 325.7 |
| வழங்கப்பட்ட மூலதனம்/விற்கப்பட்ட மொத்தத்தின் சதவீதம் ... .. | 0.82 | 2.1 | 1.43 | 1.17 |
| மொத்த உள்நாட்டு உற்பத்திக்கு வழங்கப்பட்ட பங்குகளின் பெறுமதியினது சதவீதம் ... | 4.34 | 4.17 | 4.12 | 4.12 |
| மொத்த உள்நாட்டு உற்பத்திக்கு விற்கப்பட்ட பங்குகளின் பெறுமதியினது சதவீதம் .. | 0.08 | 0.17 | 0.17 | 0.10 |

மூலங்கள்: கொழும்பு பிணையங்கள் பங்குச் சந்தை,
இலங்கை மத்திய வங்கி.

1989 இல் யுனைட்டட் மோட்டர்ஸ் நிறுவனமும் வரையறுக்கப்பட்ட செலான் ரஸ்ட் வங்கியும் கொழும்புப் பங்குப் பரிவர்த்தனை நிலையத்தின் விலைக்கோரல்களைப் பெற்றுக்கொண்டன. இதேவேளையில் இரண்டு கூட்டு நிலையங்கள் அதாவது மல்டி இசுட்டரெச, ரசரட்டை புட்கிரேன் என்பன கொழும்புப் பங்குப் பரிவர்த்தனை நிலையப் பட்டியலிலிருந்து தாமாகவே விலகிக் கொண்டதனால் 1989 இறுதியில் பட்டியலிடப்பட்ட கூட்டு நிலையங்களின் மொத்த எண்ணிக்கை 176 இற்குக் கொண்டுவரப்பட்டது. இதன்படி சந்தை மூலதனப்படுத்தல் மட்டத்தினால் அளவிடப்பட்டவாறான கொழும்புப் பங்குப் பரிவர்த்தனை நிலையத்தில் முதலீடுகளின் பெறுமதி 1989 இறுதியில் ரூ. 150 கோடிக்கு அதிகரித்தது.

**முதலாந்தர பங்குச் சந்தை**

நாட்டின் குழப்ப நிலைமைகளினால் ஏற்பட்ட பாதகமான விளைவுகளின் காரணமாக 1989 இல் முதலாந்தரப் பங்குச் சந்தையின் நடவடிக்கைகள் கணிசமான வீழ்ச்சியினைப் பதிவுசெய்தன. இது சந்தையில் வழங்கப்பட்ட புதிய பங்குகளின் எண்ணிக்கை, பெறுமதி ஆகிய இரு நியதிகளிலும் பிரதிபலித்தது. 1988 இன் 9 புதிய வழங்கல்களுடன் ஒப்பிடுகையில் 1989 இல் இரண்டு புதிய வழங்கல்கள் மட்டுமே காணப்பட்டன. (யுனைட்டட் மோட்டர்ஸ் நிறுவனம் செலான் ரஸ்ட் வங்கி) யுனைட்டட் மோட்டர்ஸ் நிறுவனத்தாலும் செலான் ரஸ்ட் வங்கியினாலும் வழங்கப்பட்ட புதிய பங்குகளின் பெறுமதி முறையே ரூ. 900 இலட்சமாகவும், ரூ. 500 இலட்சமாகவும் காணப்பட்டது. 1989 இல் கொழும்பு பரிவர்த்தனை நிலையம் புதிய நான்கு வகைகளை உள்ளடக்கி முதலீட்டு வகையை மீள்வகைப்படுத்தியது. அவையாவன இரசாயனப் பொருட்களும், மருந்தாக்கல்களும், கட்டுமானமும் பொறியியலும், காலணிகளும் புடவைகளும், மோட்டார் என்பனவாகும்.

**இரண்டாந்தரப் பங்குச் சந்தை**

இரண்டாந்தரப் பங்குச் சந்தையின் நடவடிக்கைகள் ஆண்டின் முதல் மூன்று காலாண்டுகளிலும் கணிசமாக வீழ்ச்சியடைந்தனவெனினும் நான்காம் காலாண்டில் சிறிதளவு மேல்நோக்கிச் சென்றன. கொடுக்கல் வாங்கல்களின் மொத்த எண்ணிக்கை 1988 இன் 13,009 இலிருந்து 1989 இல் 16,740 இற்கு அதிகரித்தபோதிலும் விற்பனவு செய்யப்பட்ட பங்குகளின் எண்ணிக்கையும் அவற்றின் பெறுமதியும் வீழ்ச்சியடைந்தன. இச்சந்தையின் குறைவான செயலாற்றத்திற்கு நாட்டின் உறுதியற்ற தன்மையே முதன்மைக் காரணமாக அமைந்தது.

உள்நாட்டுக் குழப்பங்களுக்கு மத்தியிலும் கொழும்புப் பங்குப் பரிவர்த்தனை நிலையத்தின் எல்லாப் பங்கு விலைச் சுட்டெண்ணினதும் மாறுபடும் விலைச் சுட்டெண்ணினதும் ஆண்டுச் சராசரி பெறுமதி 1988 இல் அவதானிக்கப்பட்ட கீழ்நோக்கிய போக்கிற்கு முரணாக 1989 இல் அதிகரிப்புக்களைப் பதிவு செய்தன. எல்லா விடயங்களுக்குமான பங்கு விலைச் சுட்டெண் 1988 இன் 170.8 இலிருந்து 1989 இல் 176.8 இற்கு உயர்வடைந்தவேளையில் மாறுபடும் பங்குவிலைச் சுட்டெண் 269.9 இலிருந்து 325.7 இற்கு உயர்வடைந்தது. இரண்டாந்தரப் பங்குச் சந்தையில் வர்த்தகம் செய்யப்பட்ட பங்குகளின் துறை வகையிலான பகுப்பொன்று அட்டவணை 1.71 இல் காட்டப்பட்டுள்ளது. இவ்வாண்டில் வர்த்தகம் செய்யப்பட்ட பங்குகளின் எண்ணிக்கை, பெறுமதி

ஆகிய இரு நியதிகளிலும் வங்கிகள், நிதி, காப்புறுதி வகை பெரிய தொகையைப் பதிவு செய்தது. எனினும் 1988 உடன் ஒப்பிடுகையில் இவ்வகையின் பங்கு ஒன்றின் சராசரி பங்கு விலை ரூ. 36.67 இலிருந்து ரூ. 23.31 இற்கு வீழ்ச்சியடைந்தது. குடிபானம், உணவு, புகையிலை வகை, நம்பிக்கைப் பொறுப்பாண்மை முதலீடு, நிலமும் சொத்தும், இரசாயனமும் மருந்தாக்கமும் போன்ற வகைகளும் இவ்வாண்டில் உயர்மட்ட நடவடிக்கைகளைப் பதிவு செய்தன.

பங்கு விலைகளின் சந்தைப் பெறுமதி அதிகரிப்பு நியதிகளில் ஓயில்பாம்வகை அதி உயர்வைப் பதிவு செய்ததோடு அதனைத் தொடர்ந்து இரசாயனமும் மருந்தாக்கமும் குடிபானமும் உணவும் புகையிலை வகையும் காணப்பட்டன. கட்டுமானமும் பொறியியலும், உணவகமும் பயணமும், களஞ்சியப்படுத்தலும் வழங்கலும் தவிர்ந்த ஏனைய முதன்மை வகை முதலீடுகள் 1989 இல் சராசரியாக தமது முகப்புப் பெறுமானத்துக்கு மேலான செயலாற்றத்தைக் காட்டின.

அட்டவணை 1.71

## முதலாந்தரச் சந்தையில் வழங்கப்பட்ட புதிய பங்குகளும் இரண்டாந்தரச் சந்தையில் வர்த்தகம் செய்யப்பட்ட பங்குகளும்

| முதலீட்டு வகை | இரண்டாந்தர பங்குச் சந்தை | | | | முதலாந்தரச் சந்தை | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | 1989 | | | | 1987 | | 1988 | | 1989 | |
| | கொடுக்கல் வாங்கல் களின் எண்ணிக்கை | பங்குகளின் எண்ணிக்கை | பெறுமதி (ப.இ.ரூ.) | சராசரி விலை (ரூ.) | எண்ணிக்கை | பெறுமதி (ரூ.ப.இ.) | எண்ணிக்கை | பெறுமதி (ரூ.ப.இ.) | எண்ணிக்கை | பெறுமதி (ரூ.ப.இ.) |
| வங்கிகள், நிதி, காப்புறுதி ... | 3,930 | 2,375,889 | 55.4 | 23.31 | 2 | 174.0 | 3 | 55.0 | 1 | 50.0 |
| குடிபானங்கள், உணவு, புகையிலை ... | 2.275 | 1,051,737 | 37.1 | 35.26 | — | — | — | — | — | — |
| இரசாயனங்கள், மருந்தாக்கல்கள் ... | 2,187 | 517,680 | 24.3 | 46.98 | — | — | — | — | — | — |
| கட்டடவாக்கம் மற்றும் பொறியியல் ... | 238 | 253,738 | 1.9 | 7.54 | — | — | — | — | — | — |
| காணியும் புடவையும் ... | 630 | 381,218 | 4.3 | 11.40 | — | — | — | — | — | — |
| உணவகங்கள், பயணங்கள் ... | 1,414 | 2,174,846 | 12.3 | 5.65 | — | — | — | — | — | — |
| முதலீட்டுப் பொறுப்பாண்மை ... | 1,310 | 1,536,911 | 30.9 | 20.10 | — | — | — | — | — | — |
| நிலமும் சொத்தும் ... | 1,157 | 2,037,130 | 24.6 | 12.08 | 1 | 10.0 | 5 | 93.5 | — | — |
| தயாரிப்பு ... | 1,455 | 909,596 | 19.3 | 21.24 | 2 | 21.9 | 1 | 3.0 | — | — |
| ஊர்திகள் ... | 165 | 99,811 | 20.0 | 20.53 | — | — | — | — | 1 | 90.0 |
| ஒயில் பாம் ... | 7 | 727 | 0.2 | 255,24 | — | — | — | — | — | — |
| பணிகள் ... | 514 | 294,482 | 8.9 | 30.37 | — | — | — | — | — | — |
| களஞ்சியங்களும் நிரம்பலர்களும் ... | 166 | 180,962 | 1.5 | 8.38 | — | — | — | — | — | — |
| வர்த்தகம் ... | 1,292 | 410,385 | 33.1 | 80.72 | — | — | — | — | — | — |
| மொத்தம் ... | 16,740 | 12,225,112 | 273.8 | 22.38 | 5 | 205.9 | 9 | 151.5 | 2 | 140 |

மூலங்கள் : வரையறுக்கப்பட்ட கொழும்பு பிணையங்கள் பரிவர்த்தனை நிலையம்.
வரையறுக்கப்பட்ட கொழும்பு பங்குப் பரிவர்த்தனை நிலையம்,
இலங்கை மத்திய வங்கி,